சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 14 3-5-'42 Price 2 Annas



மூன்று தலை முறைகள்.

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

வாரப் பதிப்பு

சுதேசமித்திரன்

3-5-1942

சென்றவார நிகழ்ச்சிகள்

இந்திய ஸேனாதிபதி தைர்யம்

இந்திய ஸேனாதிபதி ஏப்ரல் மாதம் 21-ந் தேதி ரேடியோவில் பேசுகையில் கூறியதாவது:—

இந்தியா நீண்ட காலமாக வெளி நாட்டவரின் ஆக்கிரமிப்பு அபாயத்துக்கு உட்பட்டதில்லை; ஆகவே, திடீரென அபாயம் ஏற்படவிருக்கையில் அபாயம் அதிகமாக நேரிடக்கூடிய பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் பீதியும், கவலையும் சந்தேகமும் அடைவது சகஜம். முதன் முதலாக நான் ஒரு உறுதி அளிக்கிறேன்; அச்சு நாடுகளின் மிருகத்தனத்தை அழிப்பதற்காக நடந்துவரும் போராட்டத்தில் இறுதியில் நமக்கு வெற்றி கிட்டுவது நிச்சயம். எப்பொழுது ஜயிப்போம், எப்படி ஜயிப்போம்என்பதே பிரச்னை.

இந்தியாவைக் காத்து வரும் துருப்புகளின் திறன் மிகவும் உயர்தரமானதென்ற உறுதியையும் நான் உங்களுக்கு வழங்க முடியும். இதை மிகுந்த நம்பிக்கையுடனும் சொல்லுகிறேன்.

இப்பொழுது இந்தியப் பாதுகாப்பைப் பற்றிக் கவனிப்போம். விமானத்தாக்குதல் தான் உடனே ஏற்படக் கூடிய அபாயம். முக்கியமாக நகரங்கள் மீது குண்டுகள் வீசப்படலாம். இதனால் பெரும்பாலோரின் மனதிலே திகில் மூண்டிருக்கிறது. அபாயத்தை மிகைப்படுத்தி எண்ணிக் கொண்டு அவர்கள் அலைகிறார்கள்.

நம்முடைய தைர்யத்தைக் குலைப்பதற்காக நமது எதிரிகள் வேண்டுமென்றே பீதியைக் கிளப்ப முயன்றிருக்கிறார்கள். இதர நாடுகளிலிருந்து தப்பி ஓடிவந்தவர்களும் விஷயங்களை மிகைபடுத்திச் சொல்லுகின்றனர். ஆகவே அவற்றை நம்புவதற்கில்லை. அபாயத்தை நான் குறைத்துக் கூறவில்லை. ஆனால் அபாயத்தின் அளவைப் பற்றி உங்களுக்குச் சரியான தகவலை வெளியிட வேண்டுமென்பதே என்னுடைய அவா.

முதலாவதாக பிரிட்டன் மீது ஜெர்மனி குண்டுகள் வீசுவது போலவோ அன்றி பிரிட்டன் ஜெர்மனி பேரில் குண்டுகளைப் பொழிவது போலவோ-அவ்வளவு கடுமையான முறையில் இந்திய நகரங்களை விமானங்கள் மூலம் தாக்க ஜப்பானுக்குச் சக்தி கிடையாது. சிங்கப்பூர் சரணடைவதற்குச் சில தினங்களுக்கு முன்பு நான் அங்கு தானிருந்தேன். சிறிதுகாலம் அங்கு இடைவிடாத குண்டுவீச்சு நடந்தது. ஜப்பானியர் தங்களால் அதிகப்பக்ஷமாக எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு விமானங்களைக் கொண்டு தாக்கினர். இந்தியாவிலுள்ள எந்த முக்கிய ஸ்தலத்தையும் தாக்க எதிரிகளால் அவ்வளவு விமானங்களைக் கொண்டு வர முடியாது. எனினும் சிங்கப்பூரில் போதிய அளவுக்குப் பாதுகாப்பு இல்லாமலிருந்தும் ராணுவச்சேதமோ, ஜனச்சேதமோ அதிகமில்லை. ஒரே ஒரு தடவை நடந்த விமானத் தாக்குதலின் போதுதான் மிகுந்த சேதம் ஏற்பட்டது; ஜனங்கள் பதுங்குமிடங்களை அடையாததே இதற்குக் காரணம். ரங்கூனிலும் இதே மாதிரிதான் நடந்தது.

ஜப்பானியர் இதுவரையில் ஜனங்கள் பேரில் கண்மூடித்தனமாகக் குண்டுகள் வீசியதில்லை. ஆனால் வேண்டுமென்றால் அவர்கள் அம்மாதிரி செய்யப் பின்வாங்கமாட்டார்களென்பது நிச்சயம். ஜனங்கள் மட்டும் கலவரமடையாமல் நிதானமாக இருந்து ஏ. ஆர். பி. விதிகள் பிரகாரம் முன் ஜாக்கிரதையைக் கையாண்டால் சேதம் அதிகமாயிராது. விமானத் தாக்குதலால் மிகுந்த சேதமும், தூசியும் கிளம்புமே தவிர உயிர்ச்சேதமோ காயமோ அதிகம் ஏற்படுவதில்லை.

இரண்டாவதாக பாதுகாப்புக்காக இந்நாட்டில் அதிக அபாயத்துக்குள்ளாகக் கூடிய பிரதேசங்களில் நாம் வைத்துள்ள யுத்த விமானங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் மிகவும் பலம் வாய்ந்தவை. வேறு எந்த இடங்களிலும் கிடைக்காத அளவுக்கு எதிரிக்கு அவை நஷ்டமுண்டு பண்ணுவது நிச்சயம். ஏற்கனவே கொழும்பிலும் திரிகோண மலையிலும் நடந்த ஜப்பானியத் தாக்குதலில் அவர்களுக்குப் பெரு நஷ்டமேற்பட்டுளது.

இந்தியாவில் நமது பாதுகாப்பு ஏற்பாடுகள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. இந்தியா முழுதும் இவை விஸ்தரித்து வருகின்றன. எவ்வளவு பலத்துடனிருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேனோ அவ்வளவு பலத்துடன் ஏற்பாடுகளில்லை என்பது உண்மையே. ஆயினும் சில வாரங்களுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிக பலமுள்ளதாகவே இருக்கின்றன. சில மாதங்களுக்கு முன்பு விமானப்பாதுகாப்பே இல்லாமலிருந்தது; இந்த நிலைமையும் இப்பொழுது மாறிவிட்டது. சீக்கிரத்தில் விமானப் பாதுகாப்பு பலம் ஓங்கிவிடும்.

இன்னொரு அபாயமும் ஏற்படக்கூடும். ஆனால் இது உடனே ஏற்பட க்கூடியதல்ல. இந்த அபாயம் கடல் மூலமாகவும், தரை மூலமாகவும் பிறக்கலாம்.

ஜப்பானியர் இந்தியாவை விமானமூலம் தாக்கலாம்; தற்காலிகமாக ஒரு பகுதியை வசப்படுத்த அவர்கள் முயலலாம். ஆனால் இந்தியா உண்மையுடன் நடந்து கொள்ளும்வரையில் அதை ஜயிக்கவே முடியாது. எதிர்காலத்தில் யாவும் இனிதே முடியுமென்ற நம்பிக்கையுடன் நாம் வாழலாம். யுத்தத்தில் நாம் ஜயிப்பது திண்ணம். ஆனால் தோல்வி மனப்பான்மையும், அகாரணமான பீதியும் அதைத் தடைசெய்யலாம்; தாமதமுண்டு பண்ணலாம்.

இந்தியாவின் பிரபல தலைவர்களில் சிலர் சமீப காலத்தில் ஆக்ரமிப்பை எதிர்க்க வேண்டுமென்றும். தோல்வி மனப்பான்மையுடன் இருக்கக் கூடாதென்றும் கர்ஜித்திருக்கின்றனர். இந்தியவிலுள்ள ஒவ்வொருவரும்—எல்லா வகுப்பினரும் அதிகாரிகளும், பொது மக்களும்—ஒன்றுபட்டு அபாயத்தை எதிர்க்க வேண்டும்; ஆபீஸிலோ, தொழிற்சாலையிலோ அல்லது கிராமங்களிலோ ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் செய்ய வேண்டும்: இந்நெருக்கடியில் இந்தியாவுக்காக அவர்கள் முழுமனதுடன் உழைக்க வேண்டும். இப்படிச் செய்தால் நாம் பயப்பட வேண்டியதே இல்லை: என்னுடைய பொறுப்பும் பெரும்பகுதி குறைந்துவிடும்.

* * * *

கர்னல் ஜான்ஸன் கூறும் உறுதி

ஜனாதிபதி ரூஸ்வெல்டின் தூதரான் கர்னல் லூயி ஜான்ஸன் ஏப்ரல் 22-ந் தேதி பத்திரிகைக்காரர்களின் கூட்டமொன்றில் பேசினார். அவர் பொது விரோதியை முறியடிப்பதில் முனைந்துள்ள அமெரிக்கருக்குப் பூரணமாக உதவும்படி இந்திய மகா ஜனங்களைக் கேட்டுக்கொண்டார்.

"இந்த யுத்தம் உலக யுத்தமாகும்; தற்போதைக்கு ஆசியாவில் நடக்கும் ஐரோப்பிய யுத்தம் மட்டுமல்ல. இந்த உலக யுத்தத்தை அமெரிக்கர் முடிவுக்குக் கொண்டு வரப்போகின்றனர்" என்று அவர் கூறினார்.

"அமெரிக்காவின் படைகள் ஏற்கனவே இந்தியாவில் இருக்கின்றன; இன்னும் படைகள் வருகின்றன. இந்தத் துருப்புகளுக்காகும் செலவை அமெரிக்க சர்க்கார் ஏற்பது மட்டுமன்றி, தள்வாட இரவல் சட்டப்பிரகாரம் இந்தியாவுக்கு எவ்வளவோ உதவி புரிகின்றனர். இதில் இந்தியாவைப்பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமே அவர்களுக்குக் கிடையாது" என்றும் கர்னல் ஜான்ஸன் தெரிவித்தார்.

"பண்டித நேருவைப் போன்ற புத்திசாலியை நான் இது வரை பார்த்ததில்லை. அவர் என்னுடைய நண்பர்; அவரது சிநேகிதராக இருக்கவே எனக்கும் விருப்பம்" என ஜான்ஸன் ஜவஹருக்குப் புகழ்மாலை சூட்டினார்.

* * * *

சென்னை சர்க்கார் அறிக்கை

"சென்னைக்கு ஏற்படுமென்று தெரிவித்த அபாயம் இப்போது நீங்கிவிட்டதால் சென்னை சர்க்கார் செகரிடேரியட்டின் முக்கிய பகுதிகளும், பெரும்பாலாக மற்ற காரியாலயங்களும் சென்னைக்குத் திரும்பக் கொண்டு வரப்படும்" என்று ஏப்ரல் 23-ந் தேதி சென்னை சர்க்கார் ஓர் அறிக்கை விடுத்தனர்.

இந்த ஏற்பாடுகள் ஒரு மாத காலத்துக்குள் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

* * * *

பண்டித நேருவின் முழக்கம்

அஸ்ஸாம் மாஜி பொக்கிஷ மந்திரி ஜனாப் புக்ருதீன் அஹமதுடனும் அம்மாகாணப் பிரபல காங்கிரஸ் தலைவர்கள் பலருடனும் பண்டித ஜவஹர்லால்நேரு திப்ருகார் வந்துசேர்ந்து இந்திய ஆங்கிலோ-இந்திய, ஐரோப்பிய வெளியேற்ற முகாம்களைப் பார்வையிட்டார்:

இந்தியர் முகாமுக்கு அருகே கூடியிருந்த ஜனங்களை நோக்கி அவர் சில வார்த்தைகள் கூறினார்!—

'பர்மிய நிலைமை ரொம்பவும் கடுமையாக இருக்கிறது, அதன் காரணமாக அபாயம் அஸ்ஸாமை அணுகியிருக்கிறது; ஜனங்கள் பீதிக்குத் துளியும் இடம் கொடுக்கக்கூடாது. நம் கதி என்ன ஆவதாயினும் சரி, ஆக்கிரமிப்புக்கு நாம் பணிய மாட்டோம். இதுவரையில் நாம் பிரிட்டிஷாருக்குத் தலை வணங்கியதில்லை. அதே போல் ஜப்பானியருக்கும், ஜெர்மனியருக்கும், அல்லது இதர அன்னியருக்கும் நாம் தலை வணங்கமாட்டோம்.

பர்மாவில் யுத்தம் மூண்டுவிட்டதால் அங்கிருந்த இந்தியர் தாய் நாட்டிற்குத் திரும்பியது ரொம்ப சகஜம். ஆனால் அதே நிலைமை இந்நாட்டில் ஏற்பட்டால் நாம் வீடு, வாசல்களை விட்டு விட்டு எங்குஓ முடியும்? என்ன நேர்ந்தாலும் உள்ள இடத்திலேயேஇருந்து, ஆக்கிரமிப்பை எதிர்த்துப்போராடுங்கள்.

துரோகிகள் இழைத்த கொடுமைகளைப் பற்றிப் பர்மா இந்தியர் புகார் செய்கின்றனர். ஆனால் அவற்றிற்குப் பணிந்ததற்குப் பதிலாக அவர்கள் ஒன்று சேர்ந்து அவற்றை எதிர்த்திருக்க வேண்டும்.

இந்திய நகரங்கள்மீது குண்டு வீச்சுகள் ஏற்படலாம். எனினும் இவை காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறைக்க முன்னெச்சரிக்கையாகத் தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம்.

தாய் நாட்டிற்காகத் தியாகம் புரிய ஒவ்வொரு இந்தியரும் தயாராகவேண்டிய சமயம் வரும். அப்படி நேரிடும்பொழுது வெற்றிக்காகப் போராட இந்தியர் பின்வாங்க மாட்டார்களென்று நம்புகிறேன்"

(28-ம் பக்கம் பார்க்க)

கக்ஷிக்கூட்டம்

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் கூட்டம் நடந்தது.

யிருந்து அன்றைக்கும் வற்புறுத்தப்படுமானால் கொள்கை யளவில் ஒப்புக் கொள்ளப்பட்டதை கார்ய அளவில் நிறைவேற்ற நேரும். இடையே அந்யோன்யமும் அந்தரங்கமும் இரண்டு சமூகங்களுக்குள்ளே எதிர்பார்க்கிறபடி ஏற்பட்டுவிட்டால் பாகிஸ்தானைப்பற்றிய பிரச்னையே கிளம்பாது. குணமது கைவிடேல்!

வாய் வெந்து விடுமா?

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சியினர் கூடி இரண்டு முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றனர். தங்கள் கடமையையும் பொறுப்பையும் வெகு தூரம் ஆராய்ந்து முடிவு கட்டியிருக்கின்றனர். முடிவை மிக பெரும்பான்மையோர் ஆதரித்திருக்கின்றனர். அந்த அளவுக்கு அதற்கு மதிப்புண்டு. ஆனால் மிகைப்படுத்துவதற்கில்லை. இடையே வேலிகள் பல வழி மறிக்கக்கூடும். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கீகரிக்க வேண்டும்; ஜனாப் ஜின்னா காங்கிரஸுடன் கூடிப் பேச சம்மதிக்க வேண்டும்; பேச்சிலிருந்து சமரஸம் பிறக்க வேண்டும்; சமரஸத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஏற்க வேண்டும். காரியம் கூடுமுன் இவ்வளவு படிகள் கடக்க வேண்டும். காலமோ குறுகி வருகிறது. நெருக்கடி முற்றி வருகிறது ராஜாஜிக்கு இட்டுள்ள வேலை எளிதல்ல. நெஞ்சுறுதியும் நிஷ்காமமும் உள்ளவர்தான் ஈடுபட முடியும். சாத்தியமானால் அவர் செய்து வைப்பார். சுலப சாத்தியமல்ல. அதையறிந்து இயன்ற அளவு அவருக்கு பலம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

இரண்டு தீர்மானங்களிலும் முக்கியமாக வற்புறுத்தப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். நாட்டிலே முற்றி வரும் நெருக்கடியான நிலைமை அது. அதன் கடுமையைத் தவிர்க்க வழி யொன்றுண்டு. கவர்ன்மெண்டு மாற வேண்டும். தேசீய கவர்ன்மெண்டு அமையவேண்டும். ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையேயுள்ள வேலி அழிய வேண்டும். ஆளப்படுவோருக்குள்ளேயே வேற்றுமையும் விரஸமும் மலிந்து கிடக்கிறது. இதை முதலில் விலக்க வேண்டும். லீகும் காங்கிரஸும் ஒன்றுபட்டால் அது எளிது. சாக்ஷிக்காரனை விட்டு சண்டைக்காரனுடன் சமரஸம் பேசுவதே விவேகம். முதல் தீர்மானம் அதற்கு வழிகாட்டுகிறது; லீக் கோருவதுபாகிஸ்தான். கொள்கையளவில் அதைஒப்புக் கொள்ளச் சொல்கிறது தீர்மானம். நெருப்பென்றால் வாய் வெந்து விடாது. நிதானமாய் கவனிக்கவேண்டும். பாகிஸ்தான் இன்று தீர்க்கக் கூடிய பிரச்னையல்ல. யுத்தம் முடிந்து சமாதானம் நிலவிய பிறகு அலசிப்பார்க்கவேண்டிய பிரச்னை. அனுபவசாத்தியமாக

முஸ்லிம்களின் ராஜீய அபிலாஷைகளுக்கு கூர் கட்டவே பாகிஸ்தான் பேச்சு கிளப்பப்பட்டது. நியாயமாகவும் நேர்மையாகவும் இந்த அபிலாஷைகளைத் தீர்க்க வழி காணுவோமானால் பிற்காலத்தைப்பற்றி கவலைப்படத்தேவையில்லை. முஸ்லிம்களும் இந்த நாட்டில் பிறந்தவர்கள்; இந்தியாவின் ஸ்வாதீனத்திலும், ஸ்வாதீனத்தைக்காப்பதிலும் சிரத்தையுள்ளவர்கள். அவர்களை நம்பி நட்பை பெருக்குவதில் லாபமுண்டு; நஷ்டமில்லை. முஸ்லிம்களுக்குள்ளேயே பாகிஸ்தானின் வரையறைகளைப்பற்றி தெளிவு காணவில்லை அவர்களே ஆராய்வார்களானால் லாபத்தைவிட நஷ்டம் பெரிதென்பதையறிவர். இன்றைக்கு வாதத்தின் வேகத்தில் அதற்கு அவகாசமில்லை. பிறர் சொன்னாலும் ஏறாது. தற்கால நன்மையை நாடி பிற்கால நன்மையை காவு கொடுத்துவிட்டதாக நினைக்கத் தேவையில்லை. தற்கால நன்மை அவசியம். சுவரை வைத்தல்லவோ சித்திரம் எழுதவேண்டும்? தற்கால நன்மை ஏற்பட்டால் பிற்காலத்திற்கும் அது உதவும். சந்தேகப்பிரப்ருதிகள் முடிவாக ஒரு கேள்வி கேட்கலாம். எதிர்பாராதவாறு விபரீதமாக இந்தியாவைத் துண்டிக்கும் முறையில் பாகிஸ்தான் முடிந்தாலோ? அதற்கு பதில் ஒன்றுதான் உண்டு. ஸுடேடானை விட பாகிஸ்தான் மேல்! இந்த யுத்தம் அறிவுறுத்துவது அதுதான். நிலைமையை நிதானித்துப் பார்ப்பவர் சொல்லக்கூடிய தேறுதல் இதுதான். பயப்படத்தேவையில்லை; பயப்பட்டும் லாபமில்லை. நெருக்கடியைத் தவிர்க்க வேண்டும். வாளாவிருப்பதற்கில்லை. குறை கூறுவோர் வேறு வழி காட்டட்டும்.

முதல் எடுப்பில் முதல் தீர்மானத்தைப் படிப்பவருக்கு ஏதோ பிரமாதமாய் விட்டுக்கொடுத்து விட்டதாகத் தோன்றலாம். நிதானமாகப் படித்தால் கருத்தும் கார்யமும் புரியும். காங்கிரஸ் லக்ஷியத்திற்கோ கொள்கைக்கோ துரோகம் ஒன்றுமில்லை. பாகிஸ்தானைப்பற்றி குறிப்பாக குறிப்பிட்டிருப்பது கருத்துடன். ஜனாப் ஜின்னாவுக்கு நம்பிக்கையூட்ட; சமரஸத்திற்கு அவருடைய ஒத்துழைப்பைப்பெற; பிற்கால விவகாரத்தை விலக்கி தற்கால விஷயத்தில் சிரத்தை கற்பிக்க. ஜனாப் ஜின்னா இந்த சமிக்ஞையை

கூட்டத்திற்கு வருகிறர்.

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் கூட்டத்திற்கு ஜனுப் உபயதுல்லா வரும் போது எடுத்த படம்.

மதித்து இடைக்கால ஏற்பாட்டுக்கு உடன்படுவார் என்று நம்ப இடமுண்டு. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முதலில் வழிவிட வேண்டும். விட்டால் இரண்டாவது தீர்மானத்திற்குத் தேவையில்லை. எங்கும் தேசிய கவர்ன்மெண்டு அமைந்து விடும். விடா விட்டால் இரண்டாவது தீர்மானம் சென்னையின் நிர்ப்பந்த நிலைமையை அறிவுறுத்துகிறது. சென்னை சம்பந்தப்பட்டவரையிலாவது பொறுப்பாட்சி அமைத்துக் கொள்ள அநுமதி கோருகிறது. இதைக்கேட்க சென்னை சட்டசபைப் பிரதிநிதிகளுக்கு உரிமையுண்டு. அவசரத்தையும் அவசியத்தையும் அறிந்து அநுமதிக்க வேண்டும். நிலைமைக்கேற்றுவாறு நடந்துகொள்ளும் முறையை காங்கிரஸ் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறது. சிந்து மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியினருக்கு அளிக்கப்பட்டிருக்கும் விலக்கை உதாரணமாகக் குறிப்பிடலாம். மக்களின் ஆதரவு காங்கிரஸின் பலம். அந்த பலம் நிலைக்கவேண்டுமானல் மக்களின் கோரிக்கையை உல்லங்கணம் செய்வதற்கில்லை.

★

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி கூட்டம்

சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கக்ஷி ஏப்ரல்மாதம் 23-ந்தேதி பகல் 12-மணிக்கு தியாகராய நகர் ஹிந்திப் பிரசார சபை ஸ்ரீ ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஞாபகார்த்த மண்டபத்தில் கூடியது. சுமார் 52- அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். அழைப்பின் மேல் ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டிகளின் அங்கத்தினர் பலரும் இதர காங்கிரஸ் ஊழியர்களும் வந்திருந்தார்கள்.

சென்னை சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு ஸர் கிரிப்ஸ் தூது முறிவுற்றதன்காரணத்தை ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் கூட்டத்தில் எடுத்துச் சொன்னர். கிரிப்ஸ் தூது முறிந்ததற்கு முஸ்லிம் லீகே காரணமென்றும் பாகிஸ்தான் கோரிக்கையை ஒப்புக் கொண்டாலொழிய லீக் மனேபாவம் மாருதெனத் தெரிகிறதென்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவில் ஐக்கிய பத்தியமில்லாதபோது அதைப்பற்றி வெறும் சர்ச்சையைக் கிளப்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை யென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

'வியாதி நம்மிட மிருக்கும் போது நாம்தானே அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றும் சொன்னர். பாகிஸ்தான் திட்டத்தைக் கொள்கை யளவில் ஒப்புக் கொண்டால் தேசிய சர்க்கார் கிடைக்குமென்று தமக்குத் தோன்றுவதாகவும் அவர் சொன்னர்.

பாகிஸ்தான் பிரச்னை

பிறகு கீழ்க் கண்ட தீர்மானத்தை மெம்பர்கள் ஆலோசித்தனர்:—

இப்பொழுது ஏற்பட்டுள்ள கவலைக்கிடமான நிலைமையைச் சமாளிக்க தேசிய சர்க்காரை அமைக்க வேண்டுமெனச் செய்யப்பட்ட முயற்சிகளைத்தும் வீணனதைக் கண்டு சென்னை சட்ட சபைக் காங்கிரஸ் கக்ஷி வருந்துகிறது. எதிரிபடையெடுக்கும் தருவாயில் தேச மக்கள் நடு நிலைமை வகிப்பதோ, கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பதோ சாத்தியமல்ல. சர்க்கார் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குச் சம்பந்தமற்ற வகையில் வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதும் சாத்தியமல்ல. ஆகவே இந்த நிலைமையில் தேசிய சர்க்கார் ஏற்படுவதற்குத் தடையாயுள்ள அனைத்தையும் நீக்க வேண்டியது காங்கிரஸ் கடமை, இந்தியாவிலுள்ள சில பகுதிகளைப் பிரிவினை செய்யும் உரிமையை ஒப்புக்கொள்ளவேண்டுமென முஸ்லீம் லீக் கேட்பதாலும், இந்த சமயத்தில் தேசிய சர்க்கார் ஏற்படுவதைத் தியாகம் செய்வது புத்திசாலித்தனமான கொள்கையில்லையாகையாலும் இரண்டு கெடுதலுக்குள் குறைவான கெடுதலை அங்கீகரிக்கலாமென்றும், இந்தக் கட்சி அ. இ. கா. கமிட்டிக்கு சிபார்சு செய்கிறது. இந்தியாவின் அரசியல் நிர்ணயம் செய்யப்படும்போது தேசப் பிரிவினை அவசியமென்று முஸ்லீம் லீக் நினைத்தால் அதை ஒப்புக்கொள்வதாகச் சொல்லி முஸ்லீம் லீகுடன் சமரஸம் செய்து கொள்ள பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்றும், இதன் வாயிலாக இந்த நெருக்கடியான நிலைமையில் தேசிய சர்க்காரை அமைக்க வேண்டுமென்றும் இக்கக்ஷி அபிப்பிராயப்படுகிறது:

மாகாணப் பிரச்னை

சென்னை மாகாணத்திற்குப் படையெடுப்பு அபாயமிருப்பதாலும், எல்லா ஜில்லாக்களும் எப்பொழுதும் குண்டு வீச்சை எதிர் பார்த்திருப்பதாலும் ஜனங்கள் வாழ்க்கை பிரதி தினமும் சீர்குலைந்து வருகிறது. இந்த நிலைமையில் ஜனங்களைத் தவிக்கவிட்டு ஜனப்பிரதிநிதிகள் சும்மா யிருப்பது தற்கொலைக்குச் சமமாகுமாகையாலும், இச்சமயத்தில் இம்மாகாணத்தில் பொது ஜன மந்திரி சபையிருக்க வேண்டுமென்று இக்கக்ஷி அபிப்பிராயப்படுகிறது. இதற்காக ஐக்கியபத்தியமான முயற்சி செய்வதற்காக முஸ்லிம் லீகையும் சர்க்காரில் சேர அழைக்க வேண்டுமென இக்கக்ஷி நினைக்கிறது. இது சம்பந்தமாகத் தக்க நடவடிக்கையை எடுகக அனுமதிக்குமாறு அ. இ. கா. கமிட்டியை இக்கக்ஷி வேண்டிக் கொள்ளுகிறது.

தீர்மானம் நிறைவேறியது

முடிவில் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. தீர்மானத்தின் முதல் பாகத்திற்கு 37 பேர் சாதகமாகவும் 6 பேர் எதிராகவும் ஓட் செய்தனர். மூவர் மத்தியஸ்தமாக விருந்தனர். அது நிறைவேறிற்று.

இரண்டாவது பாகம் ஓட்டுக்கு விடப்பட்டதில் 39 பேர் சாதகமாகவும் 2 பேர் எதிராகவும் ஓட் செய்தனர், ஐவர் மத்தியஸ்தமாக விருந்தனர். அதுவும் நிறைவேறிற்று.

25 அங்கத்தினர்கள் போல் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

எதைப் படிக்கிறர் ?

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் கூட்டத்தில் ஸ்ரீமதி அம்மண்ண ராஜாவும் கலந்து கோண்டார். அவர் ராஜாஜி நிறைவேற்றி வைத்த தீர்மானத்தின் பிரதியைப் படிக்கிறர் போலும்!

ஸ்ரீமதி பண்டிட்

ஐக்ய மாகாணத்தில் ஸ்தல ஸ்தாபன மந்திரி பதவியை ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் வகித்த போது எடுத்த படம்.

கிராம வாழ்க்கை

சீர்படுத்தும் விதம்

★

ஸ்ரீமதி

விஜயலக்ஷ்மி பண்டிட்

எழுதியது

★

கிராமப் பஞ்சாயத்து

கிராமப் பஞ்சாயத்தைப்பற்றி அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது: இதுபற்றிய விவாதத்திற்கும் குறைவில்லை. ஸ்தல ஸ்தாபன முறை சரிவர அமுலாகி, அதன் நோக்கம் நிறைவேற வேண்டுமானல் அதற்கு பலமான அஸ்திவாரம் இருக்க வேண்டும்: எத்தகைய பளுவையும் தாங்கவல்லதாக அது இருக்க வேண்டும். இந்தக் காரணம் பற்றி நாம் கிராமப் பஞ்சாயத்து பிரச்னையை அலக்ஷியம் பண்ணக்கூடாது. இந்தப் பிரச்னையின் ஒவ்வொரு அம்சத்தையும் நன்கு பரிசீலிக்க வேண்டும்.

செய்ய வேண்டியது

இந்த பஞ்சாயத்துப் பிரச்னையை நான் இரண்டு விதத்தில் நோக்குகிறேன். முதலாவது இதுதான்: இப்போது நாளுக்கு நாள் நாட்டில் கிராமாபிவிருத்தித் திட்டம் ஆதரவு பெற்று வருவதால், கிராமத்தில் காணப்படும் பரிதாப ஸ்திதியை அகற்றி தங்களது நிலைமையைச் சீர்ப்படுத்திக்கொள்ளும் வசதியை கிராம வாசிகளுக்கே அளிக்க வேண்டும். இரண்டாவது எனக்கு முக்கியமானது: நம்மிடமிருக்கும் ஆள் பலத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

"கவலைப்பட்டதே இல்லை"

அநேக காலமாகவே நாம் கிராம வாசியை அவரும் ஒரு மனுஷ்யன் என்று மதிக்காமல் இருந்து வந்திருக்கிறோம். சுதந்திர இந்தியாவில் அவருக்குரிய ஸ்தானத்தையும் நாம் நினைவில் கொள்ளவில்லை. ஏதோ அப்போதைக்கப்போது சில சில்லரை அனுகூல்ங்களை அவர்களுக்குப் புரிய நாம் ஏற்பாடு செய்து நம் மனசாக்ஷிக்கு ஆறுதல் பண்ணிக்கொண்டே வந்திருக்கிறோம்: அந்த அனுகூலங்கள் உண்மையிலேயே அத்தகையானவையா, அவை அந்த ஸ்திதிக்குப் பொருந்தியவையா என்பதைப்பற்றி நாம் கவலைப்பட்டதே கிடையாது. பிறகு இந்த காரியங்களைக் கிராமவாசிகள் அங்கீகரிக்க மறுத்தாலோ அல்லது இவற்றை சரியாக மதிக்காவிட்டாலோ, நாம் நமது முயற்சி வீணகிவிட்டது என்று முடிவு செய்து விடுகிறோம்.

மனே பக்குவம் தேவை

நம்மிடம் உண்மை அதிகாரம் கிடைத்தால், நாம் என்ன செய்யவேண்டும் என்ற விஷயமாக இப்போதே நாம் பயிற்சி பெறுவது மிகவும் அவசியம். எந்தத் திட்டமும் கட்டுப்பாடாக நடக்க வேண்டுமானல் நாம் முதலில் அதற்கு உதாஹரணமாயிருக்கவேண்டும். வெளியார் காரணமாக நம்மிடையே கட்டுப்பாடு தோன்ருது. அந்த மனேபக்குவம் நமக்கேற்பட்டால்தான் சமூகமும் தேசமும் க்ஷேமமாக விருக்க முடியும்.

மனதில் உதித்தவை

இப்போது நம் கையில் சொற்ப அதிகாரம் இருக்கிறது: ஆகவே நம் மக்களை ஒன்ருகத் திரட்ட இதுவே தக்க சமயம். மேல் அதிகாரிகள் உத்திரவிடுவதற்குப் பதிலாகக் கீழ் அதிகாரிகளிடமே பொறுப்பை விடுவது உசிதம்: அப்போது அஸ்திவாரம் பலப்படுவதுடன் முன்னேற்றத்திற்கான மார்க்கமும் முன் தோன்றும். மக்களிடமே பொறுப்பை விட்டுவிட ஏற்பாடு பண்ணவேண்டும்: கிராமமானலும் சரி நகரமானலும் சரி: சட்டங்களை அவர்களே இயற்றவேண்டும்: அப்போது அபிவிருத்தி தானகவே புலப்படும். நான் கூறுவதைப் பலர் அங்கீகரிக்கமாட்டார்கள் என்பதை நான் அறிவேன்: இது விவாதத்திற்கு இடம் தரும் என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். எதுவாயினும் சரி, என் மனதில் பட்டதை எடுத்துக்கூறுவது என் கடமையாகும்.

இந்தக் கட்டுரையில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் கிராம விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறர். கிராமப் பஞ்சாயத்துகள், அவைகளை அமைக்கும் விதம், கிராமப் பொருளாதாரம் சீர்பெற வழி, ஸ்தல ஸ்தாபனங்களை ஒழுங்குபடுத்தி நிர்வாகத்தை நன்கு நடத்தும் முறை, ஆகிய பல அம்சங்களை அவர் இதில் நன்கு விளக்கியிருக்கிறர். கிராமங்களுக்கு சபைகளை அமைப்பது பற்றியும் அவர் இதில் எழுதியிருக்கிறர். தற்சமயத்தில் இந்த வியாசம் மிகவும் பொருத்தமானது. கிராமங்களுக்கு அநேகர் போயிருக்கின்றனர்: அங்கு போயிருப்பவர்களுக்கு இது வழிகாட்டியாகும்.

ஸ்தல ஸ்தாபனங்கள்

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாம் ஜனநாயகக்கொள்கைகளை ஆதரிக்கிறோம். நம் தேசியக் கக்ஷியை நாம் இதே கொள்கைக்கு அனுகுணமான விதத்தில் நடத்தி வருகிறோம். நாம் தனிப்பட்ட நபர் என்ற முறையிலும், கக்ஷி என்ற முறையிலும் ஜனநாயக முறைக்கு விரோதமான அம்சங்கள் எல்லாவற்றையும் வெறுக்கிறோம். ஆகவே காங்கிரஸ் ஸர்க்கார் தங்களிடம் இருக்கும் அதிகாரத்தை மேற்குறிப்பிட்ட விதம் மாற்றிக்கொடுத்து, நம் நாட்டில் பொறுப்புடன் மக்களும் மகளிரும் நடந்து கொள்ள வழிகாட்ட வேண்டும். உச்சஸ்தானத்தில் இருக்கும் ஒரு சிலரிடம் அதிகாரம் தங்கியிருக்கும் வரை, மக்களுக்கு நகர விஷயத்தில் ஒரு ஸ்வபாவிக உணர்ச்சியோ, அல்லது தேசீய காரியங்களில் நேர்மையாக நடந்து கொள்ளும் முறையில் பழக்கமோ இல்லாமற்போய்விடும். நமது ஸ்தலஸ்தாபன நிர்வாகத்திலிருந்து இது புலனாகிறது: நிர்வாகத்தில் நேர்ந்த குறை காரணமாகக் காட்டப்படும் முடிவுகள் நியாயமானவை என எனக்குத் தோன்றவில்லை.

விசனகரமான நிலைமை

நாம் குற்றம் காணத் தயங்கியதில்லை: ஸ்தலஸ்தாபனங்களின் வேலை கெட்டுவிட்டதேன் என்பதை மட்டும் நாம் ஆராயவில்லை: இப்போது ஸ்தலஸ்தாபனங்களின் அஸ்திவாரம் மிகவும் பலஹீனமாய் இருக்கிறது: ஸ்தலஸ்தாபனங்களும் கேலிக்கூத்துக்களாக மாறிவிட்டன: எல்லோரும் அவற்றைப் பார்த்துப் பரிகசிக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. சொந்த கௌரவத்தை மதிப்பவர்கள் அவைகளில் ஸ்தானம் ஏற்க மறுக்கின்றனர். அப்படி ஸ்தானம் ஏற்றாலோ உள்ளே இருக்கும் ஊழல்களைக் கண்டவுடன் வெளியேறுகின்றனர். இவ்வாறு காலக்ரமத்தில், ஒழுக்கமற்றவர்கள், சுயகாரியவாதிகள், முனிசிபாலிடி ஜில்லா போர்டு இவைகளின் மெம்பர் என்ற பெருமையை நாடுபவர்கள் தான் அதில் புகுந்து விட்டனர். நகர சபை மெம்பர்கள் சில சில்லரைச் சச்சரவுகளில் ஈடுபட்டுப் போட்டியிடுகின்றனரே தவிர, நகரத்தைப் பற்றியோ, ஜில்லாவைப் பற்றியோ, சிந்திப்பதில்லை: கடைசியில் அந்த விரும்பத்தகாத "நம்பிக்கையில்லாத் தீர்மானம்" சேர்மனைப் பாதிக்கிறது: உடனே ஒரு சாரார் ஆதிக்கம் மறைந்து மற்றொரு சாரார் ஆதிபத்தியம் தலைதூக்குகிறது. இவை தாம் முதன் முதலில் ஒழிக்கப்படவேண்டியவை. இதை ஒழிக்க மேல்ஸ்தானத்தில் இருப்பவர்களால் முடியாது என்பது என் துணிவு: அவர்களுக்கு எவ்வளவு அனுபவமிருந்தாலும் அறிவிருந்தாலும் பயன்படாது. நிர்வாகம் சீர்கெட்டிருந்தால் அதை மக்கள்தான் சரிப்படுத்தமுடியும்: ஊழல்களையும் ஒழிக்க அவர்களால் தான் சாத்தியம்; பொதுவிஷயங்களில் அசிரத்தை அதிகரித்தால் ஜனங்கள் தான் அதை உணர வேண்டும்: அவர்கள் உணர்ந்து செய்யும் முயற்சி தான் கடைசிவரை காரியம் பயன்பெற உதவும்.

"இந்த எண்ணம் பலிக்காது"

சொத்து நியாயமாகப் பங்கிடப்பட்டு, வகுப்பு ஆதிக்கம் விலக்கப்பட்டால்தான் உண்மையான ஜனநாயகம் நிலவும். ஆகவே ஜனங்களுக்கு அதிகாரம் வஹிக்க தெரிந்த பின்பு தான் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்: என்று வாதாடுகின்றனர் சிலர்: இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன், அதிகாரத்தை உபயோகிக்க பயிற்சிகொடுக்க முடியாது: நம்மிடம் அதிகாரம் இருந்தால் தான், அதை எவ்வளவு சிறப்பாக உபயோகிக்கலாம் என்பது தெரியவரும்: சில பிழைகளைச் செய்து தான் ஒரு நடைமுறைத் திட்டத்தை நாம் கண்டுபிடிக்க முடியும். வெறும் போதனை பலன் தராது. இங்கிலாந்தில் உண்மையான ஜனநாயகம் கிடையாது, ஆகவே அந்த நாட்டைப் பின்பற்றக் கூடாது என்கின்றனர் அவர்கள். சமீப கால சம்பவங்கள் இதை மெய்ப்பித்துவிட்டது: இங்கிலீஷ் மக்கள்போல் நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களுக்கு நகர விஷயங்களில் பொறுப்புள்ள புத்தி ஏற்பட்டுவிட்டால் போதும்? அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்தால், பொது வாழ்வில் சில "யோக்கியதையற்றவர்கள்" புகுந்து விடலாம் என்றும் கூறப்படுகிறது. இதே நோக்கம் தான் நம்மை ஆளுவோருக்கு இருந்து வருகிறது: அவர்கள் நம் வீட்டை நிர்வகிக்க நாம் சக்தியற்றவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள்; நல்லாட்சி சுயவாட்சிக்குப் பதிலியாகாது என்ற கருத்துடன் நாம் சுதந்திரத்தைக் கோரும்போது இந்த எண்ணம் பலிக்காது.

ஒரு தீய முறை

ஸ்தல ஸ்தாபனங்களில் சில "யோக்கியதையற்றவர்கள்" புகுந்து விடுகின்றனர் என்பதன் காரணத்தை நாம் இப்போது ஆராய்வோம். 'ஸ்தல ஸ்தாபன தேர்தல் விதிகள் பிரகாரம், தங்களது பணத்தின் உதவியால் அறியாத மக்களை வசப்படுத்தி சிலர் அதிகாரத்திற்கு வரலாம். மத்ய ஸர்க்கார் உத்தேசித்தது இது தான்: பணக்காரர்களும் ஒருபுறம் இருக்க வேண்டும்: மற்றொரு புறம் தங்களது பிரதிநிதிகள் தவறுகள் செய்தாலும் அவரைத் தண்டிப்பது என்று அறியாமல் வாக்காளர்கள் இருக்க வேண்டும். மேலதிகாரியிடம் வாக்காளர்கள் புகார் கூறலாம் எனவும் விதிக்கப்பட்டது: குற்றம் சாட்டப் பட்டவர் பெரிய அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ளவராயும் காங்கிரசுக்கு எதிரானவராயும் இருந்தால்அவர் மீது அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை. முன்பெல்லாம் மாகாண ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் தேர்தல்களில்தலையிட்டு இம் மாதிரி "யோக்கியதையற்றவர்கள்" சார்பாக வேலை செய்து வந்ததும், உண்மையாகவே திறமை மிகுந்தவர்களும் ஆனால் தங்களுக்கு விருப்பமில்லாத ராஜீயக் கொள்கைகளைக் கொண்டவர்களுமானவர்களுக்குப் பதிலாக,



பதவியை விட்ட பின்

சமீபத்தில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.

இவர்களை அந்தப் பதவியில் ஸ்தாபித்ததும் அனைவரும் அறிந்த விஷயமாகும். இம்மாதிரி ஒரு தீய முறை அனுஷ்டிக்கப்பட்டு இதனால் கெடுதி அதிகரித்துக் கொண்டே போகலாயிற்று. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பொறுப்பை விட்டுக் கொடுத்தால் இந்த ஸ்திதியை ஒழிக்க இயலும்: இதற்கு விதிகளை மாற்ற வேண்டும். ஓட்டுரிமை விஸ்தரித்தால் இந்தத் தீமையைப் போக்க முடியும். திறமையும் அறிவும் மிகுந்தவர்களை உயர்ந்த ஸ்தானத்தில் நாம் வைத்தால் தான் இதற்குப் பரிஹாரம் ஏற்படும்.

ஏன் பொறுக்க முடியாது?

சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் பொது மக்கள் புத்தி கூர்மையுடன் ஓட் செய்கின்றனர் என்பது தெளிவாகி விட்டது. சட்டசபைகளுக்குத் தங்களது பிரதிநிதிகளை அவர்கள் தேர்ந்தெடுக்க முடியுமானால், தங்களது ஊர்களில் மட்டும் ஏன் நல்ல பிரதிநிதிகளை அவர்கள் பொறுக்கிக் கொள்ள முடியாது? மாகாணத்தில் பெரும்பகுதியினர் கசடர் என்பது தவறு; நல்லவரும் கெட்டவர்களும் இருக்கின்றனர்: சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் நல்லவர் தான் முன்னுக்கு வருவார்கள், ஆகவே நாம் நாட்டில் ஒரு புதிய மனோபாவம் ஏற்படச் செய்ய வேண்டும்: கண்ணியமும் நேர்மையும் திறமையும் பொருந்திய பலர் முன்வந்தால் தற்சமயம் காணப்படும் பரிதாபகரமான நிலையை மாற்றமுடியும்.

கிராமப் பொருளாதாரம்

இப்போது மற்றொரு யோசனையைக் கவனிப்போம்: அதாவது கிராமப்புறத்தில் இருக்கும் ஸ்தல ஸ்தாபனம் பலதரப்பட்டகாரியங்களைச் செய்யும் கூட்டுறவு சங்கமாக இருக்கவேண்டும் என்பது. இறுதியில் கிராமப்புறங்களின் முற்போக்கு கூட்டுறவினால்தான் என்பதை நான் ஏற்கிறேன். இம்மாதிரி சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு இரண்டு இடையூறுகள் இருக்கின்றன. இம்மாதிரி சங்கங்களை ஸ்தாபிப்பது கட்டாய படுத்தப்படாவிட்டால், மாகாணம் முழுவதும் அவை வியாபிக்கத் தாமதமாகும். அநேக காலம்வரை கிராமங்கள் வசதியற்றிருக்கும். ஆனால் உடனே ஒரு பஞ்சாயத்தை அமைத்து பலதரப்பட்ட கூட்டுறவுச் சங்கம் போல், அது வேலை செய்யும்படி ஏற்பாடு செய்தால், பொது மக்களுக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டு, கூட்டுறவு பாதிக்கப்படும்: ஏனெனில் கிராமத்தில் பணத்தையும் சொத்தையும் கொண்ட சிலர் தங்களது பொருளாதார வாழ்க்கைக்கு திடீரென்று தடை ஏற்பட்டால் அதைக் கண்டிப்பார்கள்: ஆகவே பஞ்சாயத்து முறையில் நகரசபைகள் போல் சில சங்கங்கள் நிறுவப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாகக் கிராமப் பொருளாதாரத்தைக் கவனிக்கத் திட்டமிட வேண்டும்.



ஆனந்த பவனம்

★

பண்டித மோதிலால் நேருவின் மஹத்தான மாளிகையின் வாயிற்புறத்தோற்றம். இங்குதான் இப்போது காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் பல வருஷங்களுக்கப்புறம் நடக்கிறது. இந்தக்கமிட்டிக் கூட்டத்தில் பல முக்கிய விஷயங்கள் ஆலோசனைக்கு வருவதால் இக்கமிட்டிக் கூட்டம் மிகவும் விசேஷமானதாகும்.

★

பிரதி குடும்பத்திற்கும் பிரதிநிதி

கிராமத்திலிருக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் பிரதிநிதியும் பஞ்சாயத்தில் ஸ்தானம் வஹிக்க வேண்டும் என்பதில் அனர்த்தம் இருக்கிறது. இதனால் கலக்கமூட்டும் தேர்தலை ஒழித்துவிடலாம்: ஒரு எதிர்ப்பை விலக்கி வைப்பது அதை சமாளித்து நிற்பதற்கு சமமாகுமா? ஒவ்வொரு குடும்பத்தின் பிரதிநிதியும் கிராம சபையில் ஸ்தானம் வஹிக்க வேண்டும் என விதித்தால், அது ஒரு உபத்திரவமாக முடியும்: அந்த சபை முற்போக்கை அனுஷ்டிக்க விரும்பாது: முன் நிற்கும் பிரச்னைகளைத் தீர்க்கவும் அது தயக்கம் காட்டும். குடும்பத்தில் பெரியவராயிருப்பவரிடம் பிரதிநிதி நியமனப் பொறுப்பை விட்டுவிட்டால், ஒரு வேளை அவரே சபைக்கு போகலாம்: இல்லாவிட்டால் தாம் திறமை வாய்ந்தவராகக் கருதும் ஒருவரை அனுப்பலாம்: அவரும் பெரியவர் போலவே பழைமையான கருத்துகளைக் கொள்பவராகவே இருப்பார்; முற்போக்கான கருத்துகளைக் கொண்ட ஒரு யுவரை அவர் பொறுக்கி யனுப்பமாட்டார்: இது சகஜம்! ஆகவே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்தில் இந்த ஊனம் இருக்கும். சமூகத்தின் நன்மையை உத்தேசித்து பஞ்சாயத்து புதிய முறைகளை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? ஆனால் பஞ்சாயத்து மீது மேலதிகாரிகள் சில கருத்துகளைச் சுமத்தினால், பஞ்சாயத்து வெறும் யந்திரமாக மாறி வீணாகிவிடும்: மக்களிடம் சிரத்தை இருக்காது: கிராமாபிவிருத்தி பகற்கனவாகிவிடும்: கிராமப்புறத்தார் மீதும் தங்கள் கடமையை நிறைவேற்ற சக்தியற்றவர் என்ற இழுக்கு நிலைத்து நிற்கும்.

புதிய இடையூறுகள்

ஒவ்வொரு குடும்பப் பிரதிநிதியும் அடங்கிய கிராமப் பஞ்சாயத்தில் வேலை நடை முறை மிகவும் சிக்கலாகிவிடும் என்பது இரண்டாவது விஷயம்; இந்த பஞ்சாயத்திற்கு ஒரு நிர்வாக சபை இருந்தால்தான் கஷ்டம் நிவர்த்தியாகும். ஒரு பஞ்சாயத்துக்கு அநேகம் சிறு கமிட்டிகளும் இருக்கவேண்டும் என்ற யோசனை உசிதமாகாது. இப்போது இருக்கும் நகர சபை சப் கமிட்டிகள் போலவே இவைகளும் மாறிவிடும். ஒவ்வொரு கமிட்டியும் தனித்திருக்க ஆசைப்படும்: தனி உரிமைகள் தலைகாட்ட வாரம்பித்துவிடும்: ஒவ்வொன்றும் வெவ்வேறு விஷயங்களைக் கவனிப்பதால் கவனிப்பாரின்றி, கமிட்டி மெம்பர்களின் சச்சரவுகளில் போய் முடியும். எல்லா நிர்வாகப்பொறுப்புகளையும் ஒரே கமிட்டியிடம் ஒப்படைப்பதுதான் யுக்தமானது: இதனால் கிராம வாழ்க்கைக்கு அனுகூலம் ஏற்படும். இதனிடம் எல்லா பொறுப்புகளும் இருப்பதால், இது ஒவ்வொரு பிரச்னையையும் அதன் தராதரத்திற்கேற்ப பரிசீலிக்கும். மாத்ஸர்யமும் தலைகாட்டாது: கிராமசபையின் நோக்கங்களும் உடனுக்குடன் அமுலாக்கப்படும்.

நாம் வழி தேடுவோம்

பஞ்சாயத்து எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி என் கருத்து மேலே தரப்பட்டிருக்கிறது. சில அடிப்படையான அம்சங்களை மட்டுமே நான் விவரித்திருக்கிறேன். இந்த சபை கவனிக்க வேண்டிய பல முக்கிய விஷயங்களை நான் இங்கு குறிப்பிடவில்லை. முக்கியமானவற்றைத் தீர்த்துக் கொண்டால் மற்றவை பற்றி உபத்திரவமில்லை. நான் ஒன்றுமட்டும் கூற வேண்டும்: அதாவது நான் எல்லாம் அறிந்தவள் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. கிராமப்புறத்தைப் பற்றியோ, கிராம வேலையைப்பற்றியோ,எனக்குச்சிறிதும் அனுபவமும் இல்லை. ஆனால் இதையும் நான் சொல்லவேண்டும். நாம் இதுவரை நிபுணர்களை கலந்தாலோசித்தது போதும்! பல நிபுணர்கள் திட்டங்களைத் தயாரிக்கவும், பலனற்ற பல யோசனைகளை நாம் அவர்களிடம் நாடவும் இதுவரை நாம் வேண்டிய அளவு செலவழித்திருக்கிறோம். நாம் இப்போது நமது பகுத்தறிவைப் பிரயோகிப்போம்: பழைய அநுபவத்தைக் கொண்டும் வருங்காலத்தில் ஏற்படவல்ல மாறுதல்களைப் பற்றி சிந்தித்தும், நம் மக்கள் நம் தேசத்தின் பெருநிதிபோல் பிரகாசிக்க நாம் வழி தேடுவோம்.

Vijaya Lakshmi Pandit

விண்ணப்பம்

தயவு செய்து தங்கள் கடிதங்களை இனிமேல் கீழ்க்கண்ட எங்கள் விலாசத்திற்கு எழுதக் கோருகிறேம்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

ஈரல் குலைக்கட்டி வைத்திய நிபுணர்கள்

7, சாரங்கபாணி ஸ்வாமி கோயில் கீழ வீதி,

கும்பகோணம்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்

ஹிந்திக்கதை

சாயா

ஸ்ரீ தாராதேவி

எழுதியது

இருள் சூழ்ந்த வாசற்படியில் ஏறிக் கதவைத் தட்டிக் கொண்டே "கோபி யம்மா! ஓ! கோபியம்மா!" என்று கூப்பிட்டான் ராம்தீன்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவள் சோர்வடைந்த குரலில் "அடி சாயா! என்னடியம்மா செய்து கொண்டிருக்கிறாய் நீ? கொஞ்சம் வந்து பாரேன்! ராம்தீன் என்னைக் கூப்பிடுகிறான் போல் இருக்கிறது!" என்றாள்.

தணலில் உப்பிக்கொண்டிருந்த ரொட்டியை எடுத்துக் கூடையில் போட்டுக்கொண்டே "உள்ளே வா! ராம்தீன் மாமா! கதவு திறந்து தான் இருக்கிறது. ஆமாம்! ஆமாம்! அந்த அறையில்தான் இருக்கிறாள் அத்தை! இரு! இரு! நான் விளக்கு கொண்டு வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே தவாவை இறக்கி விட்டு ரொட்டியை மூடி வைத்தாள். சாயா. பிறகு விளக்கை எடுத்துக்கொண்டு போய் ராம்தீனை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

ராம்தீன் கோபியம்மாவுக்கு நமஸ்காரம்செய்து விட்டு "இன்னும் ஜுரம் இறங்கவில்லையா? நான் கொடுத்து விட்டுப்போன மருந்தையெல்லாம் கொடுத்தாயா, அம்மா சாயா?" என்றான்.

சாயா விளக்கைப் பிறையில் வைத்துவிட்டு "ஆமாம் மாமா! கொடுத்து விட்டேன். நாளை ஒரு வேளைக்குத்தான் இருக்கிறது!" என்றாள்.

"எஜமானி ரொம்ப கோபித்துக் கொள்ளுகிறாள். கோபியம்மா! நாளை விருந்தாளிகள் வரப்போகிறார்கள். நீ வராவிட்டால் சமையற்காரன் தனியாக என்ன செய்வான்?" என்று கேட்டான்.

"ஏண்டா அப்பா! என்னால் எழுந்திருக்க முடிந்தால் நான் வராமல் இருப்பேனா? இந்த ஜுரம் என் வேலையைத் தொலைத்து விடும்போல் இருக்கிறது! என்ன செய்வது! என் தலை எழுத்து!" என்றாள் கோபியம்மாள்.

ராம்தீன் சற்று யோசித்துவிட்டு "பயப்படாதே அக்கா! கடவுள் உன்னை சொஸ்தப்படுத்திவிடுவார். இந்த ராம்தீன் உயிருடன் இருக்கும்வரை நீ பட்டினியால் இறக்கும்படி நேரிடாது. காசி அண்ணா என் மீது தயை வைத்திராவிட்டால் இன்று நான் எங்கு இருந்திருப்பேனோ! நான் அவைகளையெல்லாம் மறந்துவிடமுடியுமா? அக்கா! போகும்போது காசி அண்ணா உன்னை என்னிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார், நீ உன் வேலையைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. முடியாவிட்டால் நாளை நான் சாயாவை சிறிது நேரத்திற்கு ஒத்தாசைக்கு அழைத்துச் செல்லுகிறேன். ஏதோ பூரி-கீரி பொறித்துப் போடுவாள். இதுவே எஜமானி அம்மாளுக்கு சந்தோஷமாகப் போய்விடும்!" என்றான்.

பிறகு ராம்தீன் இரண்டு பொட்டலம் மருந்தை சாயாவின் கையில் கொடுத்து "இந்தா அம்மா! நாளை இதை அத்தைக்கு கொடு! நீயும் தயாராக இரு. நான் எட்டு மணிக்கு வருவேன். சரி! நான் போய் வரட்டுமா அக்கா?" என்றான்.

சாயா கதவைத் தாளிட்டுக் கொண்டு திரும்பி வந்து தன் அத்தையின் பக்கத்தில் உட்கார்ந்து "கொஞ்சம் கஞ்சி சாப்பிடேன் அத்தை!" என்றாள்.

அத்தை அவளைத் தன்னுடன் அணைத்துக்கொண்டு அவள் முதுகை அன்புடன் தடவிக் கொண்டே "நாளைக்கு நீ சென்று வருகிறாயா அம்மா! அங்கே சென்று பயப்படமாட்டாயே?" என்று கேட்டாள்,

சாயா அத்தைக்கு நம்பிக்கையூட்டி "நான் வேலையைக் கண்டு ஒரு நாளும் பயப்படமாட்டேன், பூரி பொறிப்பேன். சமையல் செய்வேன். எஜமானி அம்மாள் என்னென்ன வேலை சொல்லுகிறாளோ எல்லாவற்றையும் செய்துவிடுவேன்! பயப்பட என்ன இருக்கிறது?" என்றாள்.

அத்தையின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது! "கண்ணே, உன் அதிர்ஷ்டம் இந்தப் பதிமூன்று வயதிலேயே இவ்வளவு வேலைகளும் உன் தலை மேல் வந்து விடிந்தன. பணக்காரர் வீட்டுப் பெண்கள் இந்த வயதில் பொம்மை வைத்துக் கொண்டு விளையாடுகின்றனர்!" என்றாள்.

"அத்தை! நீ இந்தமாதிரி அழுது உன் உடம்பை அதிகமாக்கிக் கொள்ளாதே! நான் வேலையையும் விளையாட்டென்றுதான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். இவைகளைச் செய்வதில் எனக்குச் சற்றும் வருத்தம் இல்லை. அம்மா இறந்து போனாள். நீ தான் எனக்குத் துணை. நீ இல்லாவிட்டால் எனக்கு யார் இருக்கிறார்கள். எழுந்திரு! எழுந்து ஒரு வாய் கஞ்சி சாப்பிடு! பிறகு ஆறிப் போய் விடும். அதை அப்புறம் சாப்பிட முடியாது" என்றாள்.

"சரி! அப்படியானால் கொண்டு வா! சாப்பிடுகிறேன். கடவுள் உன்னைத் தாய் வீட்டிலும் சுகமாக வைக்கவில்லை அத்தை வீட்டிலும் சுகமாக வைக்கவில்லை. இனி புகப்போகும் இடத்திலாவது உன்னை சௌக்யமாக வைக்கட்டும் இதைத் தான் நான் கடவுளிடம் வேண்டுகிறேன்!" என்றாள்.

சாயா அடுப்படியில் இருந்தாள். பாட்டியின் ஆசிர்வாதங்களைக் கேட்டு அவள் இதழ்களில் புன்னகை மலர்ந்தது. ஏழை வீட்டுப் பெண்ணுக்குக் கூட நல்ல இடம் கிடைக்குமா?

* * * *

தலையணையில் சாய்ந்து கொண்டிருந்த எஜமானி யம்மாளின் முன் சாயாவைக்கொண்டு வந்து நிறுத்தினான் ராம்தீன். அவள் கேலிக்குரலுடன் "ராம்தீன் வயதாக ஆக உன் புத்தி ஏன் இப்படிப் போய்விட்டது? இந்தச் சிறு குட்டியா சமையற்காரருக்கு ஒத்தாசை செய்வாள்?" என்று கேட்டாள்.

ராம்தீன் சிரித்துக்கொண்டே "அம்மா! முதல் இவள் வேலையைப் பாருங்கள்! பிறகு என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்" என்றான்.

பிறகு சாயாவைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றான். சமையற்காரன் சொன்ன வேலைகளை யெல்லாம் சாயா செவ்வையாகச் செய்து முடித்தாள். சமையலறைக்குவெளியே நின்றபடி எஜமானியம்மாள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். சமையற்காரன் அவளிடம் "கோபியம்மாள் கூட இவ்வளவு தோதாக வேலை செய்யமாட்டாள்!" என்றான்

"சரிதான். அப்படியானால் ராம்தீன் சொன்னது வாஸ்தவம் தான்!" என்றாள் எஜமானியம்மாள்.

ராம்தீன் மனதிற்குள் "போகட்டும் அக்கா! இனி உன் வேலை நிலைத்தது!" என்று சொல்லிக் கொண்டான்.

* * * *

தினசரி இரண்டு வேளையும் சாயா வந்து எஜமானியம்மாள் சொன்ன வேலையைச் சரிவரச் செய்து விட்டுப் போனாள்.

இடுப்பில் தண்ணீர் குடத்தை வைத்துக் கொண்டு சாயா வந்துகொண்டிருந்தாள். சமையலறையிலிருந்து வந்து கொண்டிருந்த எஜமானியம்மாள் கவனமில்லாமல் அவள் மீது மோதியதால் சாயா குடத்துடன் கீழே விழுந்தாள். காயம் ஒன்றும் படவில்லை. ஆனால் உடம்பெல்லாம் சகதியாகி விட்டது. ராம்தீன் ஓடி வந்து அவளைத் தூக்கினான், தன் மேல் துணியால் அவளைத் துடைத்தான். எஜமானியம்மாள் பச்சாத்தாபத்துடன் "பாவம்! அவளை நான்தான் தள்ளினேன்! காயம் பட்டு விட்டதோ என்னவோ தெரியவில்லை. ராம்! ராம்! மஹராஜ்! உன் புத்தி எங்கே போயிற்று? இந்தச் சிறு பெண்ணிடம் இவ்வளவு பெரிய குடத்தைக் கொடுக்கலாமா? வா! சாயா! நான் உனக்கு இலாவின் புடவையைத் தருகிறேன். இன்றைய தினத்திலிருந்து நீ என்னுடன் இரு. நான் சொல்லும் வேலையைச் செய். உன் அத்தை சௌக்கியமடைந்து வரும்வரை கிசனின் தாயை நான் சமையற்காரனுக்கு ஒத்தாசையாக இருக்கச் சொல்லுகிறேன்" என்று சொல்லி அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

இலாவின் காசிப் புடவையையும் கருப்பு ரவிக்கையையும் அணிந்துகொண்டு சாயா எஜமானியம்மாளின் முன் வந்து நின்றபோது அவள் ஒரு கணம் சாயாவையே பார்த்துகொண்டு யோசிக்கலானாள்! சாயாவிடமும் அழகு இருக்கிறது! ஏழை வீட்டுப் பெண். ஒரு நாளும் நல்ல சாப்பாடு சாப்பிட்டிருக்கமாட்டாள். நல்ல உடை அணிந்திருக்கமாட்டாள். இந்த ஆடையினால் எப்படித் திகழ்கிறாள்? "சாயா! இப்படி. உட்கார்ந்து ஐந்தாறு 'பீடா' மடித்து அதை அந்த வெள்ளித்தட்டில் வைத்து இலாவின் படிப்பறையில் கொண்டு கொடுத்துவிட்டு வா!" என்றாள்.

படுதாவை விலக்கிவிட்டு வெற்றிலைத் தட்டுடன் சாயா

கோபியம்மாளின் மருமகள் சாயா. ராம்தீன் அவளைத் தன் எஜமானி அம்மாள் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் வேலையில் அமர்த்துகிறான். அவள் சிறு பெண்! ஆகவே போதுமன் அத்தைக்குக் கவலை இருக்கிறது: "கண்ணே, உன் அத்ருஷ்டம் இந்த பதிமூன்று வயதிலேயே இவ்வளவு வேலைகளும் உன் தலை மேல் வந்து விடிந்தன. பணக்காரர்கள் வீட்டுப் பெண்கள் இந்த வயதில் பொம்மை வைத்துக்கொண்டு விளையாடுகின்றனர்" என்றாள். காலக்ரமத்தில் சாயா அந்த நல்ல பெயர் எடுத்தாள். அது எவ்விதம்?

★ "ஜயம்" மொழி பெயர்த்தது

அறைக்குள் நுழையும்போது இலாவுக்கும் சந்திரமோஹனுக்கும் பலத்த விவாதம் நடந்து கொண்டிருந்தது. நரேந்திரன் மௌனமாக இருவரையும் பார்த்துப் புன்னகை செய்து கொண்டிருந்தான். இலா சாயாவைப் பார்த்துவிட்டு "வெற்றிலை கொண்டு வந்திருக்கிறாயா? அங்கே வை! எங்கள் மூவருக்கும் 'டீ'யை இங்கேயே அனுப்பும்படி அம்மாவிடம் சொல்!" என்றாள்.

சாயா சென்றாள். நரேந்திரன் இப்பொழுது தான் அவளை முதல் தடவையாகப் பார்த்தான்.

அவன் மெதுவான குரலில், "இது யார் சந்திரமோஹன்?" என்று கேட்டான்.

"இவள்.....இவள்.....ஒருகால் கோபியம்மாளின் மகளோ? என்ன இலா?" என்றான் சந்திரமோஹன்.

இலா புன்னகை செய்து கொண்டே நரேந்திரன் பக்கம் பார்த்து "ஆமாம்! இவள் எங்கள் சமையற்காரியின் மருமகள். இவளுக்குத் தாய்தந்தை இல்லை. ஆகையால் அத்தை தன் வீட்டோடு அழைத்துக்கொண்டு வந்து வைத்துக்கொண்டிருக்கிறாள். கோபியம்மாளுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் ஒரு நாடகக் கம்பெனியுடன் ஓடிவிட்டான்!" என்றாள்.

சாயாவைப்பற்றி நாம் விசாரித்தது இலாவுக்குப் பிடிக்கவில்லை என்பது நரேந்திரனுக்குத் தெரிந்தது. இல்லாவிட்டால் அவள் கேட்டவுடன் இந்தக் கதை பூராவையும் சொல்லியிருக்கமாட்டாள். இலா தன் எதிரில் இருந்த புஸ்தகத்தை அகற்றிக்கொண்டே எழுந்து நின்று "இவள் அத்தை தேக அசௌக்கியமாக இருக்கிறாள். போய் பார்த்து ஏதாவது மருந்து கொடுத்து விட்டுவா என்று அண்ணாவிடம் பலதடவை சொன்னேன். ஆனால் அவனுக்கு என்னுடன் வம்புபேசத் தான் சரியாக இருக்கிறது. நீங்களாவது சென்று பார்த்து விட்டு வந்தீர்களானால் நன்றாக இருக்கும்!" என்றாள்.

இதைச் சொல்லி விட்டு அவள் எழுந்து வெளியே சென்று விட்டாள். நரேந்திரன் தயக்கத்துடன் சந்திரமோஹன் முகத்தைப் பார்த்தான். அவன் சிரித்துக்கொண்டே 'நான் கோபியம்மாளைப் பார்க்கச் செல்லவில்லை. ஆகையால் தான் இலா கோபித்துக்கொண்டாள் போல் இருக்கிறது. வா! இன்று நாம் இருவருமே சென்று பார்த்து விட்டு வரலாம்!" என்றான்.

இலாவின் இந்தக் கோபம் நரேந்திரனுக்குப் பிடிக்கவில்லை. அவன் வருத்தத்துடன் 'டீ' அருந்தலானான். பிறகு இருவரும் கோபியம்மாளைப் பார்க்கச் சென்றனர். சந்திரமோஹன் நரேந்திரனிடம் "நீ பரீக்ஷை செய்!" என்றான்,

நரேந்திரன் ரப்பர் குழாயை வைத்து நன்கு பரிசோதித்து விட்டு மருந்தும் எழுதிக் கொடுத்தான். சந்திர மோஹன் அவளிடம் "கோபியம்மா! நாளை நகரத்திற்குச் சென்று இந்த மருந்துகளை யெல்லாம் வாங்கிக் கொண்டு வருகிறேன். இதைச் சாப்பிட்டால் நீ சொஸ்தமடைந்து விடுவாய். நமது நரேந்திரனுக்கு நல்ல கைராசி உண்டு!" என்றான்.

"நீ யுகயுகத்திற்கும் தீர்க்காயுசாக இரு! நீ டாக்டர் பாஸ் செய்துவிட்டு இங்கேயே இரு அப்பா! இதனால் இந்தக் கிராமத்து மக்கள் சுகமடைவார்கள். ஆமாம் நான் உன்னிடம் சொல்லியிருந்த விஷயம் ஞாபகம் இருக்கட்டும்!" என்றாள் சாயாவின் அத்தை.

சந்திரமோஹன் சற்றுக் கீழும் மேலும் பார்த்துவிட்டு "ஏன் ஞாபகம் இல்லாமல் என்ன? நீ கவலைப்படவேண்டாம். நல்ல வரன் கிடைத்ததும் உனக்குத் தகவல் கொடுக்கிறேன்!" என்றான்.

"சரி நாம் போகலாம்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான் நரேந்திரன்.

"அப்பா, என்னிடம் ஆசீர்வாதத்தைத் தவிர வேறொன்றும் இல்லை" என்றாள் கோபியம்மாள்.

நரேந்திரன் புன்னகையுடன் "அதுதான் எங்களுக்கு வேண்டும்! அதிருக்கட்டும். நீங்கள் ஜவ்வரிசிக் கஞ்சியைத் தவிர வேறு ஒன்றும் சாப்பிட வேண்டாம்" என்றான்.

இரவு சாப்பாட்டு நேரத்தின் போது கூட இலா நரேந்திரன் முன் வரவில்லை. இது நரேந்திரன் மனதிற்கு வருத்தமாக இருந்தது. இனி நானும் அசட்டையாக இருக்கிறேன் என்று எண்ணினான். கட்டிலில் படுத்தபடியே அவன் சந்திரமோஹனிடம் "இன்று நல்ல தூக்கம் வருகிறது" என்றான்.

"அப்படியானால் தூங்கு. எனக்கும் தூக்கம் வருகிறது" என்றான சந்திரமோஹன்.

சந்திரமோஹன் வம்புப் பேச்சிலிருந்து தப்பத்தான் நரேந்திரன் தூக்கம் வருகிறதென்று சொன்னான். சந்திரமோஹன் குரட்டை விட ஆரம்பித்ததும் அவன் எழுந்து மேல் மாடிக்குச் சென்று உலார்த்தலானான்.

"இலாவுக்குத் தன் அழகைப் பற்றிய கர்வம் மிகுந்திருக்கிறது. நரேந்திரன் இவைகளை யெல்லாம் சட்டை செய்வதில்லை என்று அவளுக்குத் தெரியாது. தந்தை இந்த தனத்துக்காக இந்தக் கர்வம் பிடித்தவளை நான் மணக்க வேண்டுமென்று விரும்புகிறார். இவள் இப்பொழுதிலிருந்தே தான் சொல்வதைக் கேட்க வேண்டுமென்று நினைக்கிறாள். 'இது யார்?' என்று கேட்கக்கூட எனக்கு உரிமை இல்லை என்றுஎண்ணுகிறாள். இல்லை... இல்லை...இது ஒரு நாளும் நடவாது. இலாவுக்கு நான் அடிமையாக இருக்க முடியாது. நான் வெளிப்படையாகத் தந்தையிடம் சொல்லி விடுகிறேன். அடே...டே! இது யார்? இலாவா? எங்கே இந்தச் சமயத்தில்? தோட்டத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாள்?"

இலா வந்தாள். அலுப்புடன் சிறிது நேரம் இங்குமங்கும் உலார்த்தினாள், சிறிது நேரம் புஷ்பப் பந்தலின் கீழ் நின்றாள். பிறகு மெள்ள மெள்ள அங்கிருந்து அகன்றாள், அவள் முந்தானை தரையில் புரண்டு கொண்டே சென்றது. நரேந்திரன் வெகு நேரம் அந்தப் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தான்.

இலாவுக்கு மிக்க வருத்தமாகப்போய் விட்டது. நாம் ஏன் இம்மாதிரியான காரியத்தைச் செய்து நம் மனதில் பொறாமை இருக்கிறதென்பதைக் காட்டிக் கொண்டோம், தன்னைத் தவிர பிறருடன் நரேந்திரன் பேசுவதையோ பிறரைப்பற்றி விசாரிப்பதையோ அவள் விரும்பவில்லை, ச்சீ! அவர் என்ன சொல்லுவார்? புருஷர்கள் கூட இதைச் சகிக்க முடியுமா?

மறு நாள் அதி காலையிலேயே அவள் வெளியே சென்று விட்டாள். ராம்தீன் 'டீ' கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்தான். அவள் 'டீ' தயாரிக்கலானாள். சற்று நேரத்திற்கெல்லாம் சந்திரமோஹன் வந்து அவள் முன் அமர்ந்தான். அவள் ஒரு கோப்பையை அவன் முன் நகர்த்திவிட்டு "உன் நண்பன் எப்பொழுது வருவார்?" என்று கேட்டாள்,

"அவனா...அவன்... கோபியம்மாள் வீட்டுக்குச் சென்றிருக்கிறான், ராம்தீன் அவனுக்கு மறுபடியும் 'டீ' தயார் செய்துவிடு! நீ சாப்பிடு அம்மா!" என்றான் சந்திரமோஹன்.

இலாவுக்கு மீண்டும் மனச்சோர்வு ஏற்பட்டது. அவள் பேசாமல் 'டீ' குடிக்கலானாள். பதினொன்று அல்லது பனிரண்டு மணி நேரத்திற்கு நரேந்திரன் வீடு திரும்பினான். நல்ல வெய்யில். முகத்தைத் துடைத்துக் கொண்டு கைக்குட்டையைப் பையில் போட்டுக்கொண்டான். பிறகு சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடியே "அடேயப்பா! வெய்யில் கொளுத்துகிறது!" என்றான்.

"ஆமாம்! கோபியம்மாளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் சந்திரமோஹன்.

"ராம்தீன் 'டீ' கொண்டு வா?" என்று கூப்பிட்டாள் இலா.

நரேந்திரன் புன்னகையுடன் "இல்லை, இப்பொழுது வேண்டாம். நல்ல குளிர்ந்த ஜலம் கொண்டு வரச் சொல்! போதும்!" என்றான். பிறகு சந்திரமோஹன் பக்கம் பார்த்து "ஆமாம்! கோபியம்மாளைப்பற்றிக் கேட்டாயல்லவா? அவளைச் சரிவரக் கவனித்தால் ஐந்தாறு தினங்களில் நன்கு சொஸ்தமடைந்துவிடுவாள்" என்றான்.

"உம்! மதனியிடம் சொல்லி சாயாவுக்கு விடுமுறை அளிக்கச் சொல்ல வேண்டும்!"

"நீங்கள் உண்மையில் அப்படிச் செய்தால் அந்த ஏழையிடம் பெரும் தயவு காட்டியதாகும்!"

இலா சந்திரமோஹன் பக்கம் திரும்பி "அம்மா அவளுக்கு விடுமுறை யளிக்கமாட்டாள். நீ அவளிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம் அண்ணா!" அவள் குரல் முற்றிலும் மாறுபட்டிருந்தது. அதனால் பின்பு அவளே வெட்கமடைந்தாள்.

நரேந்திரன் கோபத்துடன் "பேஷ்! கொடுக்கமாட்டாளா? ஏ? ராம்தீன்! ஏ! ராம்தீன்!" என்று கூப்பிட்டான். ராம் வந்து நின்றான்.

"சரி! போ! அம்மாவிடம் சென்று சொல்! சாயாவின் அத்தை மிகவும் பலவீனமாக இருக்கிறாள். ஆகையால் சாயாவுக்கு ஒரு நான்கு நாள்களுக்கு விடுமுறை வேண்டும் என்று நான் சொன்னதாகச் சொல்!" என்றான்.

எதிர்கால மருமகனின் வார்த்தையைத் தட்ட முடியவில்லை. சாயாவுக்கு நான்கு நாள் விடுமுறை கிடைத்தது, ராம்தீன் உள்ளே வந்து "எஜமானி அம்மாள் சாயாவை வீட்டிற்கு அனுப்பி விட்டாள்!" என்று சொன்னான்.

நரேந்திரன் முணுமுணுத்துக்கொண்டே எழுந்து அறையை விட்டு வெளியே சென்றான். இலா கற்சிலை போல் பேசாமல் நாற்காலியில் அமர்ந்திருந்தாள். என்ன செய்ய வந்தாள்? என்ன நடந்து விட்டது? சந்திரமோஹன் மெள்ள மெள்ள சகோதரியின் முன்னின்று நழுவினான்.

தினசரி வழக்கப்படி அன்று கோபியம்மாளின் வீட்டிற்குள் திடீரென்று நுழைய முடியவில்லை: அவன் மெள்ள கதவைத் தட்டினான். சாயா கதவருகே வந்து "வாருங்கள்! இவ்வளவு நேரம் நீங்கள் வருவீர்கள் என்று ராம்தீன் மாமா எதிர்பார்த்து விட்டுச் சென்றார். அத்தைக்காக நேற்று நீங்கள் வாங்கி வந்த மருந்துகளெல்லாம் இதோ இருக்கின்றன!" என்றாள்.

நரேந்திரன் சிரித்துக்கொண்டே அவளுடன் அறைக்குள் நுழைந்தான். கோபியம்மாள் "வா! அப்பா! இந்த தரித்திரம் பிடித்தவளுக்காக நீ ஏன் இவ்வளவு செலவு செய்கிறாய்?" என்றாள்.

நரேந்திரன் அவள் கையைப் பிடித்து நாடியைப் பார்த்துவிட்டு "நான் சந்தோஷத்துடன் ஏழைகளுக்குச் சேவை செய்யவே வைத்தியம் படித்தேன். உங்கள் ஆசிர்வாதத்தால் எனக்கு சொத்துக்கு யாதொரு குறைவும் இல்லை. நீங்கள் இதற்காகச் சற்றும் கவலைப்பட வேண்டாம். சீக்கிரம் சுகமடைந்தால் போதும்!" என்றான்.

* * * *

(தொடரும்)

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு"

ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்

தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர், P. 3094, 341. எஸ்பிளனேட், மதராஸ்

way (அதிருக்கட்டும்) அந்த புஸ்தகம் எங்கே...?

வரதா:—எது?

ஆத்ம:—அதாம் போலாக்கு (Polock)ஜு ...Misrepresentation and fraud (ஆள் மாறாட்டமும், ஏமாற்றமும்)... இன்னும் ரிடான் பண்ணலே!

வரதா:—எங்கே போயிருக்கு?

ஆத்ம:—என்ன கேஜ, May I know what you are supposed to be doing? (நீ என்னதான் பண்ணறே, சொல்லு) என்னய்யா முழிக்கறயே அந்தை யாட்டமா? போன வாரம் ஜஸ்டிஸ் ராமன் நாயர் வீட்லேந்து வாங்கிண்டு போனுனே, Get it at once (உடனே அதை வரவழி) பெரிய எழவாப் போச்சு...இந்த Judges (ஜட்ஜ்கள்) உபத்ரவம்...சே!... They are Regular nuisance Look here (ரொம்ப உபத்திரவமய்யா அவாள்) இன்னமே என் permission (அனுமதி) இல்லாதே எந்த ஜட்ஜி கேட்டாலும் புஸ்தகம் குடுக்காதே......

வரதா:—இல்லே!

ஆத்ம:—இதோ பாரு...அந்த சிங்கார செட்டியார் விக்கிருந்தாரே...அதாம் அந்த Orignal side matter (ஒரிஜனல் ஸைட் கேஸ்) ஜஸ்டிஸ் ஏத்குணராவ் கோர்ட்லே. அதுலே அவர் கிராண்ட் சார்ட்டனே பேச வச்சிருக்காராம். அவன் தனக்கு ரொம்பு ஹிந்து லா தெரியுதான்னு என்னேயும் கூட வைக்கச் சொன்னனும். Lunch time (இடை வேளே)லே remind (ஞாபகம்) பண்ணு. கிராண்ட் சார்ட்டனைப் பார்த்து அவன் கிட்டே பேசி எல்லாத்தையும் முடிச்சுடறேன். அவ்வளவுதான். சரி, இனிமேல் நீ போகலாம்.

வரதா:—நான் வரேன்...! சீக்கிரம் கோர்ட்டுக்கு வந்துடுங்கோ. First case (முதல் கேஸ்) நம்ம இன்ஸால்வென்ஸி matter (விஷயம்)தான். (போகிறன்)

ஆத்ம:—Well, Sorry to have kept you waiting. (சரி, இவ்வளவு நாழி காக்க வைத்ததற்கு மன்னிக்கணும்) என்ன விசேஷம்? வந்த காரிய மென்ன?

குஞ்:—ரொம்ப சந்தோஷம்! கண்ணுர பார்த்துண்டு, காதார கேட்டுண்டிருந்தேன். இவ்வளவு சின்ன வயசிலேயே இவ்வளவு ப்ராக்டிஸ் இருக்கிறது ரொம்ப விசேஷம்...பேஷ்...பேஷ், குப்புசாமி அய்யருக்குகூட இவ்வளவு இராது போலிருக்கே. அவர் இத்தனேக்கும் பெரிய ஸீனியர்.

ஆத்ம:—ஸீனியராவது ஜுனியராவது! அதுசலவலம் என்ன இருக்குது ஸார்! நாற்பது வருஷம் வக்கீலா இருந்துட்டதனலே ஸீனியரா?

குஞ்:—ரொம்ப Right (சரி) பேஷ்! பேஷ்! மதராஸ்லே எனக்கு தெரிஞ்ச வரைக்கும் ஓங்களெப்போல ஏழெட்டு பேருக்கு நல்ல தசை! மாசம் கொறஞ்சது 2000 ரூபா வரும்.

ஆத்:—Well (சரி) 2000 ரூபா அப்படி பிரமாதம்னு சொல்லமாட்டேன் நீங்க இன்னும் தாராளமாவே மதிப்பு போடலாம்.

குஞ்:—அமா! ஆமா! போட வேண்டியது தான் இந்த நாள்லே வக்கீல் பாடு தான்யோகம்... நல்ல வரும்படி.

ஆத்ம:—அது இருக்கலாம். பணம் வந்துடறது ஸார் நம்ம வேண்டானாலும் தேடிண்டு வந்து கொட்டி கொடுக்கறு. ஆனு என்ன Profession (தொழில்) ஸார்! சுத்த Hopeless, Wretched (மோசம்) இப்ப வர ஜட்ஜ்களைக் கட்டிண்டு மாரடிச்சிக்க யாராலே முடியறது ஸார்!

குஞ்:—அது என்னமோ வாஸ்தவம் தான்! ரொம்ப சந்தோஷம். இந்நிக்கி நல்ல ஸுதினம். ஜட்ஜ்கள்ளே முக்காவாசிபேருக்கும் இந்த இடத்திலே Special regard (அலாதி மதிப்பு) இருக்காப்போல தெரிய வரது...ஏன்.

ஆத்:—Well! Well! Well! (சரி, சரி, சரி) அதனலெ என்ன. அந்த மாதிரி வார்த்தையே எனக்கு சுத்தமா பிடிக்கறதில்லே. அதுக்கென்ன? Most of the judges (ஜட்ஜ்களில் பலர்) என்னெ நன்ன Personal (நேரில்) ஆ தெரிஞ்சுண்டிருப்பா! They all like me (என் கிட்ட அவாளுக்கு இஷ்டம்) இருந்தாலும் இதை யெல்லாம் ஒரு பெரிய சமாசாரமா தமுக்கடிச்சுண்டு ப்ராக்டிஸ் சம்பாதிக்கிறது ரொம்ப பெசகு, அந்த மாதிரி வழிகள்ளே சம்பாதிக்கிறவாளும் ரொம்ப பேர் இருக்கா... பேர் சொல்லக் கூடாது,

குஞ்:-பேஷ்! பேஷ்! Very good (ரொம்ப நல்லது) I am very glad sir (எனக்கு ரோம்ப சந்தோஷம் ஸார்) நீங்க இவ்வளவு Successful (பிராபல்யம்) ஆ இருக்கரதுமில்லாத ஓங்க High principles (உத்தம கொள்கைகள்) லோகத்துக்கெல்லாம் தெரியும்படி நடக்கறது உண்டே, அது இன்னும் ரொம்ப விசேஷம்!

ஆத்மா:—மிஸ்டர் அய்யர் வாள்! By-the way (அதிருக்கட்டும்) ஓங்க பேரை சொல்லலியே!

குஞ்:—குஞ்சிதபாதம் அய்யர்.

ஆத்மா:—மிஸ்டர் குஞ்சிதபாதம் அய்யர்! நீங்க Profession (தொழில்) Caesar's wife (ஸீஸர் பெண்டாட்டி) ஆ இருக்கணும். Character (நன்னடத்தை) இருந்தா Success (ஜயம்). Success (ஜயம்) இருந்தா Character (நல்ல நடத்தை) இருந்தே தீரணும்.

குஞ்:—தீரணும்! அது ஒத்து கறேன். ஆனு இருக்கோ? பேஷ்! பேஷ்! இன்னிக்கி ரொம்ப Interesting morning. (ரசமான பொழுது)

ஆத்:—Oh! yes! I forgot! (ஆம்! நான் மறந்துட்டேன்) வந்த காரியத்தைக் கவனிக்கலாம். என்ன விசேஷம்? ஏதானு கேஸா? consultation (ஆலோசனே) ஆ! Orignal suit (ஒரிஜனல் வழக்கு) ஆ! அப்பீலா?......

குஞ்:—அதெல்லாம் ஒன்னுமில்லே! Don't trouble yourself (உபத்திரவப்படாதிங்கோ!)

ஆத்:—என்ன ஸார்! What is the matter? (விஷயம் என்ன?) மனஸ்தாபம் ஒண்ணுமில்லேயே......ரொம்ப வெயிட் பண்ண வெச்சுட்டேன்னு?

குஞ்:—No! No! (இல்லே, இல்லே.) Not at all (அதெல்லாம் இல்லே) என்ன அப்படி சொல்றேளே, I am very glad to have waited, (காத்திருந்தது எனக்கு ரொம்பசந்தோஷம்)

ஆத்:—நீங்க சொல்றது புரியலேயே!

குஞ்:—Dosen't matter! பாதகமில்லே,

ஆத்:—அப்பறம் கேஸ் விஷயம்.

குஞ்:— என் கேஸுக்கு வேண்டிய விசாரணே நடந்து முடிஞ்சுடபோச்சு,

அத்:—What is all these? என்ன அர்த்தம் ஸார்? எதுக்காக இங்க வந்து என Time (காலம்) Waste (வீண்) பண்ணீக? Why did you come here......(நீங்க ஏன் இங்கே வந்திக)

குஞ்:—நான் இங்க ஏதோ கொஞ்சம் Information (சமாச்சாரம்) சம்பாதிக்க வந்தேன்...வந்த வேலே ஆச்சு...போறேன் சத்த வழி விடுங்க......Thanks (வந்தனம்)

ஆத்:—எண்ணய்யா இது ரொம்ப Cool-hand ஆ இருக்கேளே Who are you?...... யாரையா நீ?

குஞ்:—ஓங்களுக்கு ரொம்ப அவசியமா தெரியணும்னு நான் தான் இந்த ஸர்க்கிளுக்கு இன்கம் டாக்ஸ் இன்ஸ்பெக்டர்!..

ஆத்:—என்ன? என்ன? யாரு?

குஞ்:—Good-morning! (குட்மார்னிங்) நான் போய் வரேன். (போகிறுன்)

ஆத்:—அட கிரகசாரமே!

இடி விழுந்தவர் போல் விழிக்கிறர். பாலா உள்ளிருந்து வந்து அவனைப் பார்த்து ஒன்றும் தோன்ருமல் நிற்கிறுள்.

சுபம்

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

AMERICAN NEW GOLD WORKS, P.O.Box 54,(S.M.)Amritsar.

(B. P. S.)

41 வருட அனுபவம் உள்ளது.

இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது

பழநி ஆர். எம். கே. தங்க மாத்திரை.

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்

இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லே. தாதுக்கட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும் லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். ... கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100—வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி லாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் ரூ 10

25-நாள் 50-வேளை டை மருந்துகள் ரூ 5

(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், ஆர். எம். கே. வேலுசாமி,

சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள்: 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ்.

68, செட்டியார் தெரு, கொழும்பு.

உளவாளிக் கதை

மாகினே அரணில் வேவு

"நியாயவாதி" எழுதியது

யுத்த ஆரம்பத்தில் மாகினே அரண் ஒரு மர்ம அரணுகவேதென்பட்டது. பிரான்சுக்கும்ஜெர்மனிக்கும் நடுவேகடக்க முடியாத காவல் ஸ்தலமாக விளங்கிய அதன் உண்மை பலத்தையும் பாதுகாப்பு ரகசியங்களையும் அறியக்கூடியவர்கள் அதைக் காத்து நின்ற ராணுவ வீரர்களே யென்று கூறப்பட்டது. அதன் கோட்டைகளும், கொத்தளங்களும், நிலவறைகளும், பீரங்கிக் களங்களும், விமான எதிர்ப்பு யந்திரங்களும், மிகுந்த அற்புதமான சக்தி வாய்ந்தனவாய் இருந்தன. எத்தகைய எதிரியாலும் கடக்க முடியாத காவலும், வெல்ல முடியாத கட்டும் உள்ள அவ்வரணை எப்படி ஹிட்லரால் தாக்க இயலும் என்று ராணுவ நிபுணர்கள் வினவினர்.

ஆனல் இன்று அதே மாகினே அரண் ஹிட்லரின் வசம் இருக்கிறது. அதன் மர்மங்களையும் ரகசியங்களையும் அவர் அறிவார். அதில் நிறைக்கப்பட்ட யந்திரங்களும் தளவாடங்களும் அவர் கையில் சிக்கிவிட்டன. அதன் மீது நாட்டப்பட்டிருந்த பிரம்மாண்டமான பீரங்கிகள் பிரெஞ்சு கடற்கரையிலிருந்து இங்கிலீஷ் கால்வாய் வழியே டோவரை நோக்கி அக்னிப் பிரயோகம் செய்கின்றன.

மிகுந்த செலவு

மாகினே அரணின் சரித்திரத்தின் பரிதாபகரமான அம்சம் இது தான். அதன் பலத்தைபரீக்ஷை செய்யும் சந்தர்ப்பம் எதுவும் வாய்க்க வில்லே. ஹிட்லரையும் அவரது படைகளையும் எதிர்க்க அது தயாராய் இருந்தது. ஆனல் அவர் தனது சேனு வெள்ளத்தை ஹாலந்து–பெல்ஜிய பிரதேசங்களில் திருப்பி மாகினே அரண் பாதுகாப்புக்குட்படாத பிரெஞ்சு எல்லே வழியே பிரவேசித்தார், பிரெஞ்சு சர்க்கார் அவருக்குப் பணிந்தது. அவரது விருப்பத்தின் படி அது மாகினே அரணை அவர் வசம் விடவும் இசைந்தது. அரணின் பின்புறமாய் வந்த அவர் அதை கைப்பற்றிக் கொண்டார்.

மாகினே அரணை ஹிட்லர் முன்புறமிருந்து தாக்கத்துணியாததன் காரணம் அவருக்கு அதன் பலம் நன்கு தெரியும் என்பதுதான். பல வருஷங்களாய் ஜெர்மன் வேவுகாரர்கள் அதன் மீது மோகூல் செய்து கொண்டிருந்தனர். அப்போதைக்கப்பொழுது அவர்கள் தங்களுக்குக் கிடைத்த அது ஸம்பந்தமான ரகசியங்களை ஜெர்மன் அதிகாரிகளுக்கு அனுப்பினர். அவ்வரண் விஷயமாய் செய்யப்பட்ட வேவுக்காக ஜெர்மன் சர்க்காரால் ஏராளமான தொகைகள் செலவு செய்யப்பட்டன.

வேவு பார்த்தல்

இங்கு ஒரு விஷயும் கவனிக்கத்தக்கது. அது என்னவெனில் இந்த மாகினேஅரணில் சுமார் 100 மைல் விஸ்தீர்ணம், ஆல்ரோஸ் எல்லேயிலும் மற்ருெரு 100 மைல் விஸ்தீர்ணம், லொரைன் எல்லேயிலும் உள்ளனஎன்பதே.

இவ்விரு பிரதேசங்களும் தற்சமயம் ஜெர்மனியின் வசம் சிக்கிவிட்டன. சென்ற மகா யுத்தத்துக்கு முன் அவை அதே நாட்டின் அதிகாரத்துக்குட்பட்டிருந்தன. அக்காலத்தில் அங்கே குடியேறின ஜெர்மனியக் குடும்பங்கள் அநேகம் உண்டு. சென்ற யுத்தமுடிவில் அப்பிரதேசங்களை பிரான்ஸ் மீட்டுக் கொண்டபோதிலும் அதில் வாசம் செய்த ஜெர்மனியர்கள் மீது ஜெர்மன் சர்க்காருக்கு எப்பொழுதும் நாட்டம் உண்டு. ஹிட்லரின் வேவு இலாகா இவ்வசதியை நன்கு பயன்படுத்திக் கொண்டது என்பதில் ஐயமில்லே.

தவிர, ஆல்ரோஸில் அதன் ஆதி குடிகளது லட்சியத்தை பிரதிபலிக்கும் சுயாட்சி இயக்கம் ஒன்று உண்டு. அவ்வியக்கத்துக்கு ஜெர்மன் சர்க்கார் ரகசிய ஆதரவளித்தனர்; பொருளுதவியும் செய்தனர். ஆனல் அவர்களது நோக்கம் ஆல்ரோஸை மீண்டும் தங்களது அதிகாரத்துக்குள் கொண்டுவர வேண்டும் என்பதே. இந்த உத்தேசத்துடன் ஜெர்மன் ஜாதியரான ஆல்ரோஸ் வாசிகள் சிலர் அவ்வியக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். மாகினேஅரணில் வேவு பார்க்கவும் தலைப்பட்டனர்.

ஜெர்மானியரின் மனேபாவம்

அரண்கட்டப்படும்பொழுது சில வேவுகாரர்கள் தொழிலாளர்களாய் நடித்து வேலே செய்ய முன்வந்தனர். அவர்களுக்கு வேலேயளிக்கப்பட்ட போதிலும் அவர்களால் கிரகிக்கக் கூடியவிஷயம் முக்கியமானதாய் யாதுமில்லே. அரணைப்பற்றிய ரகசியங்கள் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கப்பட்டன. அதன் நிர்மாணத்தின்பொழுது அதன் ரகசியங்கள் பூராவையும் கிரகிக்கக் கூடிய தொழிலாளி யாருமில்லே. ஏனெனில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு வேலேயில் ஒரு குறிப்பிட்ட பகுதிதான் கொடுக்கப்பட்டது.

ஆனல் எவ்விதமான இடையூறுகளையும் பொருட்படுத்தாத ஜெர்மன் வேவுகாரர்களுக்கு எத்தகைய கஷ்டமும் லக்ஷியமாய்த் தோன்றவில்லே. ஜெர்மன் ஸர்க்காரோ அவர்களுக்கு ஏராளமான பொருளுதவி செய்யவும், அவர்களது ஆசைவார்த்தைகளுக்கு இணங்கி தங்களது அரணின் ரகசியங்களை காட்டிக்கொடுக்க இசைந்த பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களுக்கு பெருத்த லஞ்சத்தொகைகள் கொடுக்கவும் தயாராய் இருந்தது.

இப்படி கபடமும் வஞ்சகமும் மிக்க ஜெர்மன் உளவாளிகள் ஆடிய அதிசய நாடகங்கள் பல உள்ளன. அவற்றில் ஒன்று இங்கு குறிப்பிடத்தக்கது.

பேராசை புத்தி

காப்டன் மார்டிக்னி என்பவன் ஒரு பிரெஞ்சு இன்ஜினீர், மாகினே அரணில் உள்ள கோட்டைகள் நிர்மாணிக்கும் பொழுது அவன் உத்தியோகம் வகித்ததால் அவற்றின் ரகசியங்கள் எல்லாவற்றையும் அவன் அறிவான். இதை நன்குணர்ந்த பிரிட்மன் என்ற ஜெர்மன் உளவாளி அவனை தனது வஞ்சக வலேயில் சிக்க வைக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

மார்டிக்னிக்கு சூதாட்டத்தில் சபலம் உண்டு. பல தடவைகளில் அவன் தன் பணத்தை ஆட்டங்களில் விரயம் செய்துள்ளான். மேலும் ஒரே அடியாய் ஒரு பெருத்ததொகையை சம்பாதிக்க வேண்டும் என்ற பேராசை அவனுக்கு இருந்தது. சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் இவ்வாசையால் தூண்டப்படுபவர்கள் என்பது உண்மையன்ருே?

பிரிட்மன் இதை நன்குணர்வான். அவன் அடிக்கடி மார்டிக்னியை சந்திப்பதும் அவனுடன் அளவளாவுவதும் வழக்கம். ஆனல் தந்திரத்தில் சிறந்த அவன் பிரெஞ்சுக்காரனுக்குப் பண உதவி செய்யவோ அவனுடன் சேர்ந்து சூதாடவோ முயலவில்லே. அப்படிச் செய்தால் மற்றவன் தன்மீது சந்தேகம் கொள்வான் என்று அவன் நினைத்தான்.

நம் ஹேஷ்யம்

அவன் கையாண்டயுக்தி முற்றிலும் விசித்திரமானது பங்கு மார்க்கட்டில் நிபுணன் என்று தன்னைத்தானே பெருமை கூறிக்கொண்ட அவன் ஒரு பிரயோஜனமுமற்ற கம்பெனியின் பங்குகளின் விலைகள் சீக்கிரம் ஏறும் என்று ஹேஷ்யம் கூறினன். இது உண்மையென்று நம்பின மார்டிக்னி தன்னிடமுள்ள பணத்தையெல்லாம் அப்பங்குகள் வாங்குவதில் செலவழித்தான்.

ஆனல் அவன் எதிர்பார்த்தபடி பங்குகளில் விலே ஏறவில்லே. மார்க்கெட்டில் அவற்றின் மதிப்பு தினம் தோறும் குறைந்துகொண்டேபோயிற்று. இதனல் மார்டிக்னி அடைந்த மனக்கிலேசத்துக்கு எல்லேயில்லே. அவனுக்கு தேறுதல் கூறிவிட்டு பிரிட்மன் ஜெர்மனிக்குச் சென்று குவாஸ் என்ற உளவாளியை அனுப்பினன்.

குவாஸ் பேச்சில் சதுரன். இனிய முகத்தினன். பண நஷ்டத்துடன் தவித்த மார்டிக்னி அவனது வசப்பட்டது ஒரு அதிசயமான விஷயமன்று. அவனது பசப்பு வார்த்தைகள் மார்டிக்னியின் அறிவை மயக்கின. அவனது வஞ்சகப் பேச்சு அவனது கண்ணியத்தைக் குலேத்துவிட்டது. ஜெர்மன் உளவாளி

(28-ம் பக்கம் பார்க்க)

இந்த உளவாளிக் கதை சமீபகால சம்பவத்தைத் தழுவியது. மாகினே அரணில் வேவு பார்த்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனேயோ பேர்! அது சம்பந்தமாய் நடைபெற்ற குற்ற விசாரணேகள் எவ்வளவோ? ஆயினும் அதன் ரகசியங்களே எதிரிகள் ஓரளவு உணர்ந்து கொண்டனர் என்றே சொல்ல வேண்டும்; பிரெஞ்சு அதிகாரிகள் எவ்வளவு உஷாராயும் எச்சரிக்கையாயும் இருப்பினும் ஹிட்லரின் ஒற்றர்கள் அவருக்குத் தகவல்கள் அனுப்பிக்கொண்டே இருந்தனர். அவ்வரணின் காவலின் பலத்தையும் காட்டின் சிறப்பையும் நன்குணர்ந்த அவர் அதை முன்புறம் நின்று தாக்கத் துணியவில்லே. பின் பக்கமாய் வந்து அதை அவர் கவர்ந்தார்.

நவ நாகரீகம்

★

ஒரு வளையல்

★

காசினி எழுதியது

* * * 'மாமி, சௌக்கியமாக இருக்கிறீர்களா? எல்லாரும் சௌக்கியம் தானே?' என்று கேட்டுக்கொண்டே லேடி சுந்திராசாரியின் பெண் உள்ளே வந்தாள்.

'யாரு? ராஜியா? எப்போ ஊரில் இருந்து வந்தாய்? கிராமத்தில் எல்லாரும் சௌக்கியம் தானே? ஆமாம், நீ எதுக்காக இப்போ பட்டணம் வந்தாய்?' என்று அவளைத் திடீரென்று கண்டதில் எனக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தில் ஏதேதோ மனதில் தோனின. கேள்விகள் எல்லாம் கேட்டேன்.

'இன்றைக்குக் காலையில் தான் வந்தேன். நாலைஞ்சு நாளாக உடம்பு சரியாக இல்லை, இப்போ தேவலை என்று அவர் எழுதி இருந்தார். அவரைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று தான் வந்தேன். அம்மா எப்படியாவது லீவு போடச் சொல்லி அவரையும்கூட அழைத்து வந்து விடும்படிச் சொன்னாள்! கேட்கமாட்டார் என்று தோணுகிறது! என்ன செய்யலாம்?' என்று பெரு மூச்சுவிட்டாள்.

'ஆமாம். கேட்கத்தான் மாட்டேன் என்கிறார்கள்! லேடி சின்னையாவின் பெண் இங்கே தான் இருக்காள். உங்க ஆத்துக்காரருக்கு இப்போ உடம்பு ஒன்னும் இல்லையே?' என்றேன்.

'ஒன்றும் இல்லை. நடுவிலே சாப்பாடு சரியாகக் கிடைக்கவில்லையாம்; அதுதான் கொஞ்சம் கஷ்டப்பட்டாராம்; லேடி சின்னையாவின் பெண், மாட்டுப் பெண் எல்லாரும் கிராமம் போகப்போவதாகச் சொன்னாளே?' என்றாள்.

'அவள் மட்டும் போகவில்லை. இங்கேதான் அவள் அகமுடையானுடன் இருக்காள்!' என்றேன்.

'இப்போ பயம் இல்லை என்கிறார்களே! ஆனால், அம்மா என்னை இரண்டு நாளுக்கு மேல் இருக்கப்படாது என்று சொல்லி இருக்காள்; இதெல்லாம் நிச்சயமாகச் சொல்ல முடியுமா? இன்னிக்கு இருந்த நிலை நாளைக்கு இருக்காது என்று ஒரே பிடியாகச் சாதிக்கிறாள். அவரும் நான் ஆபீஸ் போய்விடுவேனே, நீ வீட்டில் தனியாகக் கொட்டுக் கொட்டு என்று உட்கார்ந்து இருப்பானேன் என்கிறார்!' என்றாள்.

'நியாயம் தானே?' என்றேன்.

'அம்மா இந்த வளையலை உங்களுக்குக் கட்டாயமாகக் காட்டச் சொன்னாள்!' என்று மடியில் இருந்து ஒரு டப்பியை எடுத்தாள்.

வளையல் மிகவும் நன்றாகத் தான் இருந்தது. தங்க வளையல் தான். சுமாருக்கு ஒரு விரல் அகலத்துக்கு மேல் இருந்தது, அடிப்பாகம் சற்றே உருண்டையாகவும், மேல்பாகம் தட்டையாகவும் செய்திருந்தது. அதாவது ஓபன் கட்டிட வேலை மாதிரியில் வளையலின் மேல் பாகத்தைச் சற்றே தூக்கின மாதிரியில் அடிபாகத்துடன் பொருத்தி இருந்தது. மேல் பாகத்தை அதிக நீளமில்லாத பட்டிகளாக வகுத்திருந்தது. ஒரு பட்டியில் உதய சூரியன் மாதிரியில் வேலை செய்திருந்தது. சூரிய கிரணங்கள் பார்வைக்கு ரொம்பவும் நேர்த்தியாக இருந்தன. அடுத்த பட்டி ஆடம்பரமே இல்லாமல் இருந்தது. மறுபடி உதய சூரியன் என்று மாற்றி மாற்றி இசைத்திருந்தது; வளையல் அழகாகவும் நாசூக்காகவும் கை நிறையக் கணிச்சமாகவும் இருந்தது.

'எத்தனை பவுன்கள் பிடிச்சுது? என்ன கூலி? உங்கள் கிராமத்துத் தட்டான்கூட இவ்வளவு நேர்த்தியாக நகைகள் பண்ணுகிறானா என்ன?' என்று நான் கேட்டேன்.

'எட்டுப் பவுன்; அவன் பட்டணத்துத் தட்டான் தான். எங்களாட்டம் கிராமத்தில் அபயம் புகுந்தவன், அம்மா ஏதோ முன் பணம் கொடுத்து இருந்தாளாம். அது தான் நகை பண்ணிக் கழிக்கப் பார்க்கிறாள்; கூலி இன்னும் பேசவில்லை. வளையல் நன்றாக இல்லையா?' என்றாள்.

நான் வளையலை அழகுபார்த்து நன்றாக இருக்கு என்று கூறிக்கொண்டிருக்கும் போதே லேடி சின்னையாவின் மகளும் வந்து சேர்ந்தாள். என் மாதிரியே அவளும் முதலில் ராஜியைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு யோகக்ஷேமம் விசாரித்தாள். பிறகு வளையலைப் புகழ்ந்தாள்.

பிறகு ஏதோ பொது விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தோம். அப்புறம் இருவரும் வீடு போக வேண்டும் என்று எழுந்தார்கள்.

'ஆமாம்; இன்றைக்கு லீவு நாள். நான் வெளியே போகப் போவதில்லை, அவருடன் ஆத்திலேயே இருக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, மத்தியானம் இங்கே வந்த காரணம் ஏதோ' என்று கேலியாக நான் லேடி சின்னையாவின் பெண்ணைக் கேட்டேன்.

'அதையேன் கேட்கிறீர்கள். நாலைந்து சிநேகிதர்கள் வந்திருக்கிறார்கள். சீட்டாட்டம் தடபுடலாக நடக்கிறது! எல்லாருமாக ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, இரவு சினிமாவுக்குப் போய்விட்டு, அப்புறம்தான் வீடு திரும்பப் போகிறார்களாம்' என்றாள்.

'அதுதானா எங்காத்துக்காரரும், நீ வெளியில் போய் உன் சிநேகிதர்களைப் பாரேன். நான் ஒருவர் வீட்டுக்கு வரேன் என்று சொல்லி இருக்கேன் என்று நழுவி விட்டார்! உடம்பு சரியில்லை என்று எழுதினாரே; லீவு நாளாக இருக்கே, கூட இருந்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்!' என்று ராஜி ஆத்திரமாகச் சொன்னாள்.

'அவர் எங்காத்தில்தான் இருக்கார்; ஆனால் சாயங்காலமே வீடு திரும்பணம் என்று சொல்லிக்கொண்டிருந்தார். நீ வந்ததைச் சொல்லவில்லையே? எனக்கு இவர்கள் முதலில் பயந்து தான் பெண்டாட்டி, குழந்தைகளை ஊருக்கு அனுப்பினார்கள்; ஆனால் இப்போ நல்ல ஹாயாகக் கொட்டம் அடிக்கிறார்கள் என்று தோன்றுகிறது!' என்றாள் லேடி சின்னையாவின் பெண்.

'இருக்கும், இருக்கும். முதலிலே சாப்பாடு திண்டாட்டமும் கூட இருந்தது. இப்போதான் "மெஸ்" ஹோட்டல் எல்லாம் இருக்கே? சிநேகிதர்கள் கூடி உல்லாசப் பொழுது போக்கருளாக்கும்?' என்றாள் ராஜி. அவளுக்கு தான் வந்ததும் வராததுமாகத் தன் கணவன் லேடி சின்னையாவின் வீட்டுச் சீட்டுக் கச்சேரிக்குப் போய்விட்டது கோபம் கோபமாக வந்தது. சமா'தானம் சொல்லி அனுப்பினேன். வளையல் மிகவும் அழகாக இருந்தது. நாமும் இப்படி ஒரு ஜதை பண்ணிக்கொண்டால் என்ன என்று சபலமாக இருந்தது.

விமானம் ஓட்டிக்குக் கௌரவம்

சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியை அமெரிக்காவுக்குப் பத்திரமாக விமானத்தில் ஏற்றிச் சென்று திரும்பிய காப்டன் கெல்வி ரோஜர்ஸ் மன்னர் பிரானால் கௌரவிக்கப்பட்டார். பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னரின் கௌரவத்தை ஸ்வீகரித்துக் கொண்டபின் காப்டன் ரோஜர்ஸ் தமது மனைவியுடனும் சகோதரியுடனும் திரும்புகிறார்.

வைர நகை பளபளக்க

பெட்ரோல், சோப்பு, சாக்குப்பொடி இவைகளைப் போட்டுத்தானே 'நாம் சாதாரணமாக வைர நகைகளைச் சுத்தம் செய்கிறோம். இதற்கும் பதிலாக 'யூ-டி-கொலோன்' என்ற வாசனைத் தண்ணீரை உபயோகித்தால் வைரம் நல்ல பளபளப்பாக ஜொலிக்குமாம். கொஞ்சம் யூ-டி கொலோனை ஒரு ஏந்தலான கிண்ணத்தில் விட்டு, இதில் வைரம் பதித்த பாகம் அமுங்கி இருக்கும்படியாக நகையைக் கவிழ்த்திப் போட வேண்டும். இந்த வாசனைத் தண்ணீர் திறந்து வைத்தால் வாயுவாகப் போய்விடும் குணம் உடையது. யூ-டி கொலோன் ஆவியாகமாறி கிண்ணத்தில் உள்ள வாசனைத் தண்ணீர் வற்றினதும், நகையை எடுத்து சுத்தமான மெதுவான துணியால் துடைக்க வேண்டும். வைரம் நன்றாக ஜொலிக்கும். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

தலைநிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும்முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்திசெய்யுங்கள்.

அற்பகேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும், இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்.

தென் இந்திய ரஸாயன சாலை,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்

பித்தனின் கச்சேரி

★

சிறு. கதை - "வாணீசரணன்"

1

ரகு பழைய நிலைமைக்கே வந்து விட்டான். பழைய அமைதி, பொறுமை, வினயம் எல்லாம் திரும்பி வந்து அவனிடம் குடிகொண்டன. அவனுடைய பேச்சில் மறுபடியும் ஹாஸ்யமும் அறிவின் முதிர்ச்சியும் ததும்பின. சிறிது காலத்திற்கு முன் இருந்ததுபோல் அவன் மிரள மிரள விழிக்கவில்லை. பிரமை பிடித்து உட்கார்ந்திருக்கவில்லை: தனக்குத் தானே பேசிக்கொள்ளவில்லை. கண்டவரைத் திட்டவில்லை; துணிகளைத் துண்டு துண்டாய்க் கிழித்து எறியவில்லை; நன்றாக சாப்பிட்டான்; நீண்ட நேரம் தூங்கினான்; நிரம்பப் படித்தான்; தன் வீணுகானத்தையும் மறுபடியும் ஆரம்பிக்க விரும்பினான்.

வெள்ளிக்கிழமை சாயங்காலம். உரைபோட்டுக் கட்டி பத்திரமாகப் பெட்டிக்குள் வைத்திருந்த தன் வீணையை வெளியில் எடுத்து ஸ்ருதி கூட்டினான். வீணை ஆனந்தமாக ஒலித்தது. அதை மீட்டி ஸ்ருதியில் லயித்துத் தன்னையே மறந்து சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். பிறகு வீணையைக் கொண்டுபோய் தேவியின் படத்தின் முன் வைத்துவிட்டு நமஸ்கரித்து, "தாயே! இனியாவது என் ஸங்கீதத்திற்குத் தடை வராமல் காப்பாற்ற வேண்டும் அம்மா" என்று பிரார்த்தித்துக் கொண்டான். அவன் கண்களில் நீர் வந்து கோர்த்துக் கொண்டது. படத்தின் முன் எரிந்துகொண்டிருந்த விளக்கு 'பட பட' என்று துடித்தது. மறுபடியும் நமஸ்காரம் செய்துவிட்டு அங்கேயே உட்கார்ந்து வீணை வாசிக்க ஆரம்பித்தான்.

முன்போல் வாசிக்க வரவில்லை. விரல்கள் ஓடவில்லை. பழைய இழைவு வரவில்லை. அவனுடைய வாசிப்புக்கே ஏற்பட்ட தனியழகு அப்பொழுது இல்லை என்பதை அவன் உணர்ந்தான். 'கற்பனை' ஓடவில்லை. அவனுக்கு துக்கம் வந்தது. கண்களில் ததும்பிய கண்ணீரின் வழியே அம்பிகையின் உருவத்தைப் பார்த்துக்கொண்டு விக்கி விக்கி அழுதான். உள்ளிருந்து வந்த கேவல் சப்தத்தைக் கேட்டுவிட்டு சங்கரன் உள்ளே நுழைந்தான். அவனைப் பார்த்துவிட்டு ரகு கண்களைத் துடைத்துக் கொண்டு ஏதோ குற்றம் செய்துவிட்டவன் போல் விழித்தான்.

"அண்ணா, ஏன் அழுகிறாய்?" என்றான் சங்கரன். 'ரகுவுக்கு மறுபடியும் அறிவு சரியில்லாமல் போய் விட்டதோ!' என்ற பயம் அவன் குரலில் தொனித்தது.

"ஒன்றுமில்லை; எனக்கு வீணை வாசிக்க வரவில்லை." என்றான் சங்கரன். அவன் பதிலில் ஏக்கம் வழிந்தோடியது.

"இதற்கு அழுவானேன்? சில நாள் வாசித்தால் சரியாய்ப் போகிறது. மூன்று வருஷ காலமாக வீணை நினைவே இல்லாமல் இருந்தாயே! இன்று ஒரே நாளில் எப்படி நன்றாக வாசிக்க வந்துவிடும்? தினமும் வாசித்துக்கொண்டே வந்தால் சரியாகிவிடுகிறது" என்றான் சங்கரன். அப்பொழுது ரகுவுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. "சங்கரா, நீ எப்பொழுதும் என்னோடுகூடவே இரு; எனக்கு ஏதோ பயமாக இருக்கிறது; நீ இருந்தால் தான் தைரியமாக இருக்கிறது" என்றான் ரகு. "உன்னை விட்டு நான் எங்கே அண்ணா போகப் போகிறேன்? நான் உன்னோடு கூடவே இருக்கிறேன்: நீ ஒன்றிற்கும் பயப்படாதே" என்று அன்பாகப் பதில் அளித்தான் சங்கரன். "எங்காவது வெளியில் போய்விட்டு வரலாம் வா" என்றான் ரகு. இரண்டு பேருமாக வெளியில் புறப்பட்டார்கள்.

ரகு ஆஸ்பத்திரியிலிருந்து வந்து அப்பொழுது தான் ஒரு வாரம் ஆயிற்று. அவன் வெளியில் வந்தபொழுது, "இவர் அதிகமாக உணர்ச்சி வசப்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். திடுக்கிடும் சமாசாரம் ஒன்றையும் அவரிடம் சொல்லாதீர்கள். இப்படிச் சிறிது காலம் பார்த்துக்கொண்டால் பிறகு சரியாய் விடும்" என்று டாக்டர் சொல்லி அனுப்பினார். அது முதல் சங்கரன் தன் அண்ணனைப் "புஷ்பம்" போல் பாதுகாத்து வந்தான். ரகு செய்ய வேண்டிய வேலை ஒன்றும் இராது. குளிப்பது, சாப்பிடுவது படிப்பது, வீணை வாசிப்பது, சிநேகிதர்களுடன் பேசுவது இவை தான் அவனுடைய தினசரி வேலைகள். இது போன்ற கவலையற்ற வாழ்க்கை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. இப்படியே அவன் காலத்தைச் செலவழித்து வந்தான்.

வெகு சீக்கிரத்தில் அவன் வீணை வாசிப்பு பழைய நிலையை அடைந்து விட்டது. வாசிப்பில் அவனுக்கே திருப்தி ஏற்பட்டது. அதைக்கேட்பதற்கு தினமும் பலர் அவன் வீட்டில் கூடுவார்கள்.

ரகு சிறிது நேரம் வாசிப்பான், போகப்போக வாசிப்பு அழகாகிக்கொண்டே போகும், அப்பொழுது சங்கரன், "அண்ணா, இன்று இதோடு நிறுத்திக்கொள்ளேன். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்; இப்பொழுது சற்று நேரம் நல்ல காற்றில் எங்காவது போய்விட்டு வரலாம்", என்பான். ரகுவுக்கு அப்பொழுது கச்சேரியை நிறுத்த மனம் வராது, ஆனால் தம்பியின் இஷ்டத்திற்கு விரோதமாக நடக்க மனம் இல்லாமல், வீணையை எடுத்து வைத்துவிட்டுப் புறப்படுவான். அநேகமாக ஒவ்வொருநாளும் இப்படியே நடக்கும். ரகு வாசித்துக்கொண்டிருக்கும் பொழுது பைரவி ராகம் வாசிக்க ஆரம்பித்தால், சங்கரன் குறுக்கிட்டு, "அண்ணா, இதை வாசித்து வாசித்துத்தான் உன் விரல் தழும்பேறிப் போய்விட்டதே! சக்ரவாஹம் வாசி; ஒரு மாறுதல் இருக்கட்டும்." என்பான்: சங்கரன் இப்படிக் குறுக்கிடுவது கேட்க வருபவர்களுக்கும் பிடிக்காது. அவர்கள் அவனை வெறுப்போடு பார்ப்பார்கள். சங்கரனும் இதைக் கவனிப்பான்: ஆனால் அதைப் பொருட்படுத்தியதில்லை. "இவர்களுக்கு என்ன வந்தது? எவ்வளவு நேரம் வாசித்தாலும் தான் கேட்டுக்கொண்டு இருப்பார்கள்" என்று எண்ணிக்கொண்டு அவர்களை அலக்ஷியமாகப் பார்ப்பான்.

2

ஒவ்வொரு நாளும் ரகுவின் வீட்டிற்கு வீணை கேட்க வந்தவர்களில். முக்கியமானவர் அவ்வூர் சங்கீத சபைக் காரியதரிசி தாமோதரம். ரகுவின் சங்கீதம் அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. ஒருநாள் அவர் தம் விருப்பத்தை ரகுவிடம் கூறினார். "ரகு, ஊர் ஸபையில் ஒரு நாளைக்குக் கச்சேரி செய்யேன். உன்போன்ற நல்ல வித்வான்கள் முன்னணிக்கு வர வேண்டாமா?" என்றார். ரகுவுக்கு இதில் பரம சந்தோஷம். பெரிய ஸபையில் கச்சேரிசெய்ய வேண்டும் என்பது அவனுடைய வெகு நாளைய ஆசை, ஆகையினால் உடனே ஒப்புக் கொண்டான். "அதற்கென்ன? அப்படியே செய்தால் போகிறது!" என்று சொல்லிவிட்டான்.

சங்கரன் இதை விரும்பவில்லை. "இதெல்லாம் நமக்கு எதற்கு அண்ணா? சாதாரணமாக சங்கீத வித்வான், நடிகன், இவர்களைப் பற்றிப் பொது மக்களுக்கு நல்ல

"சங்கரா" என்று கூப்பிட்டு விட்டு ரகு 'இடி இடி' என்று சிரித்தான். ஐயோ! என்ன பயங்கரம்! மறுபடியும் அந்த அர்த்தமில்லாத தொனியா அந்தச் சிரிப்பில்! ரகு ஏன் அப்படிப் பார்க்கிறான்? ஒன்றுமே புரியவில்லையே! புரியாமல் என்ன? அந்த மாதிரி சிரிப்பும் பார்வையும் யாருக்கு வரும்? ரகு சரேலென்று எழுந்தான். "சங்கரா, என் அறிவுத்தந்தியை அறுத்தாயா?" என்று இரைந்து கொண்டே வீணையைத் தூக்கிக் கீழே போட்டு உடைத்தான். "தந்தி அறுந்தது, தந்தி அறுந்தது" என்று கோஷித்துக் கொண்டே தெருவை நோக்கி ஓடினான். சங்கரனும் அவன் பின்னால் ஓடினான். கதையைப் படித்தால் இதன் கருத்து விளங்கும்.



உஷ்ண - - காலத்திய பாத உபத்திரவங்களுக்கு தினசரி இரவு தவறாமல் ஜாம்பெக் தடவுங்கள்.

கோடை காலத்தில் பாதம் வீங்கி புண்பட்டிருக்கும். தினசரி இரவு ஜாம்பெக் தடவி கால்களை சரிவர வைத்திருங்கள். ஜாம்பெக்கிலுள்ள அற்புத் மூலகை சத்துக்களை சருமம் இழுத்துக்கொள்வதால் வலி, வீக்கம் குறைந்து ரணம் ஆறும். பித்தவெடிப்பு முதலியவையும் சீக்கிரம் குணமாகும். கால்கள் திரும்பவும் ஆரோக்யமாக மாறும். விலை ரூ. 1 அல்லது 2-4. எல்லா மருந்து வியாபாரிகளிடமும், ஏஜண்டுகள் :—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

அபிப்பிராயும் இருப்பதில்லை" என்றுன். "இப்பொழுது ஒரு கச்சேரி செய்ததாலேயே நான் சங்கீதத் தொழிலாளியாகி விடுவேனு என்ன? எனக்கும் சங்கீதம் தெரியும் என்பது உலகத்திற்குத் தெரியட்டுமே!" என்றுன் ரகு. சங்கரன் மேலே ஒன்றும் பேசவில்லை:

கச்சேரி செய்யும் தினம் வந்தது. சாயங்காலம சங்கீத வித்வானுக்கு உரிய முறையில் ரகு அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டான். சங்கரன் வீணையை எடுத்துக் கொண்டு அவனுடைய சிஷ்யனைப் போலப் பின் தொடர்ந்தான். ரகு மேடை மீது வந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். சங்கரன் வீணையைஅவன் முன்னே வைத்து விட்டுப்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். கச்சேரி ஆரம்பமாயிற்று.

ரகு க்ரமமாகக் கச்சேரியை ஆரம்பித்து வாசித்துக் கொண்டே போனுன். கச்சேரியை எல்லாரும் ஆனந்தமாக ரஸித்தார்கள். கச்சேரிக்குக் களை கட்டிவிட்டது ரகுவுக்கு உத்ஸாகம் பிறந்தது. தர்பார் ராகம் வாசிக்க ஆரம்பித்தாள். அது தான் அவனுடைய 'மாஸ்டர் பீஸ்.' வீணை வீர முழக்கம் செய்தது: சில இடங்களில் கிளி போல் கொஞ்சியது: சில சமயம் சிம்மம் போல் கர்ஜித்தது: ஒரு சமயம் குழந்தை போல் குழைந்து குழைந்து மழலைச் சொல் பேசியது. ரகுவின் விரல்கள் தந்திகளின் மேல் தாவித் தாவி நடனமாடின, இளங் காற்றில் அசைந்தாடும் மெல்லிய கொடியைப் போல அவன் உடல் ஆடிக் கொண்டிருந்தது. யோகீசுவரர் போல் அவன் கண்களை மூடிக் கொண்டு நாத உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உலக நினைவே இல்லை. ஸ்ருதிகளாகிற குதிரைகளின் மேல் ஏறி மானஸிக உலகில் சவாரி செய்தான். சபையோர் உரக்க மூச்சுக் கூட விடாமல் அந்த கான வருஷத்தில் மூழ்கிக்கிடந்தார்கள் "பசுர் வேத்தி சிசுர் வேத்தி, வேத்தி கான ரஸம் பணீ" என்ற சுலோகத்தை மெய்ப்பிக்கவே அன்று ரகு கச்சேரி செய்தானே என்று தோன்றியது!

சபை முழுதும் ஆனந்த மயம் தான். ஆனுல் அங்கு ஒரே ஒரு ஜீவன் மிகவும் கலவரப் பட்டுக் கொண்டிருந்தது. சங்கரனுக்கு சங்கீதம் பிடித்துத் தான் இருந்தது. ஆனுல் 'அதனுல் விபரீதம் வந்துவிடப் போகிறதே' என்ற பயம். "அன்று டாக்டர் என்ன சொன்னுர்? 'இவர் அதிகமாக உணர்ச்சி வசப்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொன்னுரே! அதற்கு என்ன அர்த்தம். 'இல்லாவிட்டால் மறுபடியும் பைத்தியம் பிடித்து விடும்' என்று தானே அர்த்தம்? கச்சேரி செய்தால் இவன் இப்படித் தன்னையே மறந்து விடுவான் என்பது எனக்கு அப்பொழுதே தெரியும். அதனுல் தான் 'இந்தக் கச்சேரியே வேண்டாம்' என்று சொன்னேன். ஐயோ! இப்பொழுது என்ன செய்வது? இவன் உணர்ச்சியை எப்படிக் குறைப்பது? இப்பொழுது பெயர் சொல்லிக் கூப்பிட்டால் கூட அவனுக்கு கேட்காது. என்ன செய்யலாம்? என்று யோசித்தான்.

"சரி என்ன நடந்தாலும் நடக்கட்டும்; ரகு தான் முக்கியம்; அவன் நன்ருக இருந்தால் இது போல் எத்தனை கச்சேரி வேணுமானுலும் கேட்டுக்கொள்ளலாம்" என்று அவன் மனம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது. அப்பொழுது அவன் முகத்தில் தோன்றிய கவலை மறைந்து ஒரு தைரியம் நடமாடியது. தன் அண்ணனுக்கு மறுபடியும் பைத்தியம் திரும்பாதபடிக் காப்பாற்றஅவன் துணிந்துவிட்டான்

ரகு மேல் ஸ்தாயியில் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தான்; ஸபையோர்களுக் கெல்லாம் அந்தரத்தில் மிதப்பது போன்ற ஓர் உணர்ச்சி—அப்பொழுது வீணையின் தந்தி 'பட்' டென்று அறுந்தது. ரகுவுக்கு தன் மூளை வழியே ஒரு மின்னல் பாய்ந்ததுபோல் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. மற்றவர்களுக்கெல்லாம் கன்னத்தில் 'பளீ'ரென்று ஒரு அறை விழுந்ததுபோலிருந்தது. ரகு இடதுபக்கம் திரும்பிப்பார்த்தான். சங்கரனின் கை வீணையின் பிரடையைத் திருகிவிட்டு வேகமாகப் பின் வாங்கிக்கொண்டிருந்தது. "சங்கரா!" என்று கூப்பிட்டுவிட்டு ரகு "இடி இடி" யென்று சிரித்தான். ஐயோ! என்ன பயங்கரம்! மறுபடியும் அந்த அர்த்தமில்லாத தொனியா அந்தச்சிரிப்பில்? ரகு ஏன் அப்படிப் பார்க்கிருன்? ஒன்றுமே புரியவில்லையே! புரியாமல் என்ன? அந்த மாதிரி சிரிப்பும் பார்வையும் யாருக்கு வரும்?

ரகு சரேலென்று எழுந்தான். "சங்கரா! என் அறிவுத் தந்தியை அறுத்தாயா?" என்று இறைந்துகொண்டே வீணையைத் தூக்கிக் கீழே போட்டு உடைத்தான். "தந்தி அறுந்தது; தந்தி அறுந்தது" என்று கோஷித்துக்கொண்டே தெருவை நோக்கி ஓடினுன். சங்கரனும் அவன் பின்னுல் ஓடினுன்.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் ஊத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

வி.எச்.ஆர் பெருங்காயம்

41 வருட அனுபவம் உள்ளது.

இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.

தாது புஷ்டிக்கிஃநிகறற்றது

பழநி ஆர். எம். கே. தங்க மாத்திரை.

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்

இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கி இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைககட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். நாத, விந்தில், கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100–வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் } ரூ. 10
25-நாள் 50-வேளை ஷை மருந்துகள் ,, ரூ. 5
(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், ஆர். எம். கே. வேலுசாமி,

சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள் : 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ்.
68, செட்டியார் தெரு, கொழும்பு.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூட பல்பொடி

I. D. L. S. சௌகோட்ட
பல வியாதிகளைத்தடுக்கவும் . குணப்படுத்தவும்
ஊக்கம், உற்சாகம் ஊட்ட | ஜீர்சப் | அஜீரணம் பித்த சமனி
உஷ்ண சமனி | கூலாயில் | ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

குறைந்தவற்றை உபயோகித்து சர்மத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

புண், படை, சிறங்கு, கொப்பளம் முதலிய சர்ம வியாதிகளுக்கு

சூர்யோதயம்

படை மருந்தை உங்கள் படைமீது தடவினுல் சர்மத்தில் எவ்வித மச்சமும் ஏற்படாமல் சீக்கிரத்தில் குணமளிக்கும்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட், பம்பாய், சென்னை.

நம் தேசப் பாதுகாப்பு

★

தலைவர்கள் பொறுப்பு



இந்தியாவின் நிலை அலங்கோலமானது. நாட்டில் ஒரு அந்நிய அரசு ஆதிக்கம் வகிக்கிறது: திடீரென்று பிரிட்டனுடன் போர் புரியும் மற்ருெரு நாடு இந்தியாமீது படையெடுக்கிறது. முன்பிருந்த பிரச்னைகளுக்குப் பதிலாக. இந்தியாவின் தற்காப்பு என்ற சிக்கலானதும் கடினமானதுமான பிரச்னை தலை தூக்கியிருக்கிறது. பொதுஜன சம்மதியின்றி ஸர்க்கார் இதைத் தீர்க்க முடியாது: ஸர்க்காரின் கூட்டுறவின்றி மக்களால் மட்டுமே இது சாத்தியமில்லை.

என மிகவும் விரும்பின. பிரிட்டனில்பொது மக்களுக்கும் இதேஎண்ணம் தான் இருந்ததாகையால், ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இங்கு அனுப்பப்பட்டார்.

"ஜப்பானை நம்பக் கூடாது"

தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பிரிட்டனுடன் நாம் நடத்திவரும் சண்டையை நிறுத்தி வைத்து, அதன் உதவியுடன் ஜப்பானிய ஆக்ரமிப்பை எதிர்ப்பதா என்ற கேள்வியைக் கேட்கின்றனர். இது இந்தியா மீது பிரிட்டன் கொண்டுவரும் அதிகாரம் நீடிக்க ஹேதுவாகக்கூடும்: ஆகவே. நாம் இருதரப்பாருடனும் சேர்ந்துகொள்ளாமல் தனித்து நிற்பதா? இது சாத்தியமற்றது. படையெடுப்பு நேர்ந்த பின்பு நடு நிலைமை வஹித்தால் அது எதிரிக்குப் பலம் தருவதாகும். இல்லாவிட்டால், வரப்போகிறது என்னவென்றறியாத நாம், எதிரியுடன் சேர்ந்து விஷப்பரீக்ஷை பண்ணலாமா? இதுவும் அசாத்தியம்! ஏனெனில் இதனுல் நம்மைக் கட்டிவைத்திருக்கும் பந்தங்கள் வலுத்து நம் நிலை மிகக் கேவலமாய்விடும். இவ்வளவு காலமாக நாம் நடத்திவரும் போராட்டத்தில் நமக்கு உதவி புரிய ஜப்பான் முன் வரவில்லை: தனது மனப்பூர்வமான ஆதரவையும் அது தெரிவிக்கவில்லை. இப்போது நாம் ஜப்பானை நம்பக்கூடாது: இதர கொடிய நாடுகளுடன் சேர்ந்துகொண்டு, தனது நாட்டாசையைத் திருப்தி செய்துகொள்ளவே அது இங்கும் வருகிறது என்பதே இதற்குக் காரணம்.

நல்லுணர்ச்சி உதயம்

ஜப்பானியப் படையெடுப்பு ஏற்படாதவரை நம் தேசம் நடுநிலைமை வகிக்கவேண்டும் என்பது அவசியமாக இருந்தது: இனி இந்த நிலைமை நீடிக்க முடியாது. இந்த உலக யுத்தத்தில் இந்தியா அச்சுநாடுகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்று காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்திருக்கிறது. பிரிட்டனுக்கும் இந்தியாவிக்கும் இருந்துவரும் சம்பந்தம் மிகவும் அதிருப்திகரமானதாயிருந்தபோதிலும் படையெடுக்கும் ஜப்பானியரைத் துரத்தியடிக்க இந்தியா தனது சக்தியையும் வசதிகளையும் உபயோகிக்க வேண்டும். இந்தக் கருத்து காரணமாகத்தான் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையே இருக்கும் தகராறு தாற்காலிகமாக நிவர்த்திக்கப்பட்டு, பிரிட்டனுடனும் நேச தேசங்களுடனும் இந்தியாவும் சேர்ந்து எதிரியுடன் யுத்தம்புரிய வழி காட்டப்படவேண்டும் என்று கோரப்பட்டது. நாம் பிரிட்டனின் யுத்த முயற்சியில் ஒத்துழைப்பதா என்ற பிரச்னை இப்போது இல்லை. நமது யுத்த முயற்சியில் பிரிட்டனின் ஒத்துழைப்பை நாம் ஏற்பதா, கூடாதா என்பதே தற்போதைய பிரச்னை. இதற்குப் பதில் இதை ஆமோதிப்பது தான். விரோதம் மறைந்து சிநேகபாவம் உதயமாகவேண்டும். தேசமக்களின் மனதில் நல்லுணர்ச்சி தோன்றச் செய்தால் இது சித்தியாகும். காங்கிரஸும், மற்றும் உலகில் விஷயமறிந்த கோஷ்டிகளும், இந்தியா தன் சுதந்திரத்திற்காகப் போராடுகிறது என்ற உணர்ச்சி மக்களுக்குப் பிறக்கும்படி பிரிட்டன் செய்யவேண்டும்

ஸ்ரீ: ஸி ராஜகோபாலாசாரியார்

எழுதியது

விப்ரீதம் தோன்றிய விதம்

இந்தத் தூது எங்கு பார்த்தாலும் வரவேற்கப்பட்டது: ஒவ்வொருவரும் கொண்ட நன்னம்பிக்கை அபாரம். ஸர் க்ரிப்ஸ் கொண்டு வந்த திட்டத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவுக்கு சுதந்திரஸ்தானம் வழங்க பிரிட்டன் ஒருவித சம்சயமோ சந்தேகமோ இன்றி ஒப்புக்கொள்ளுவதாகவும், தங்களுக்குகந்த அரசியலை நிர்ணயிக்கும் உரிமை இந்திய மக்களுக்கே விடப்படுவதாகவும், பிரிட்டனை விட்டுப் பிரிந்து போகும் அதிகாரமும் கொடுக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தன. சுதந்திர சாஸனத்துக்கு சமமான இதைப் பாராட்ட காங்கிரஸ் பின்வாங்கவில்லை. ஆனுல் ஒரே ஒரு ஒரு அம்சம் தான் விஷயத்தைக் கெடுத்து விட்டது இந்தியாவின் பல பாகங்களும் பிரிந்து நிற்க உரிமை யளிக்கப்பட்டு, இந்தியாவில் ஐக்யபத்யம் விட்டுக் கொடுக்கப்பட்டிருந்தது. கொள்கையளவுக்கு சர்வாதிகாரம் வகித்து, உடன்படிக்கை உரிமைகளை எதற்கும் எடுத்துக் காட்டிவந்த சுதேச சமஸ்தானங்கள் தான் எப்போதும் விபரீதத்தை உண்டுபண்ணியவை.

சமஸ்தாஞதிபதிகள்

இந்தியாவின் ஐக்யபத்ய லக்ஷியத்தை உதறித்தள்ள சமஸ்தாஞதிபதிகளுக்கும் புறக்கணிக்கத் துணிவு இல்லை: சமஸ்தான மக்கள் ஒன்றுபட்டு இந்தியாவில் சட்டரீதியான ஸர்க்கார் கீழ் இருக்க விரும்புகின்றனர். மாகாண மக்களுக்குச் சேர மறுக்கும் உரிமை இருப்பதாக ஒப்புக்கொள்வது நிலைமையை மாற்றிவிடும்: பிரிட்டிஷ்ராஜீய இலாகாவின். ஆதிக்கத்தை ஒருபுறமும், ஜனப்பிரதிநிதி நடத்தும் அரசியலைக் கொண்ட இந்தியாவில் ஏற்படக் கூடிய சட்டபூர்வமான தடைகளை மற்ருெருபுறமும் வெறுக்கும் சமஸ்தாஞதிபதிகளுக்கு இது விபரீத நிலையை உண்டுபண்ணும்.

ஸர் க்ரிப்ஸ் மறுப்பு

பிரிட்டிஷ் சிபார்சுகளின்வாசகம் பிரசுரமானதும் அதன் பூர்வ பீடிகை அதில்குறிப்பிடப்பட்டிருந்த அந்தஸ்து விளக்கம், ஆகியவற்றைப் பற்றிய பாராட்டு. இந்திய ஒற்றுமைக்குப் பாதகம் ஏற்படுகிறதெனும் காரணம்பற்றி, அவ்வளவு அதிகமாயில்லை. நிலைமை பூராவையும் பரிசீலித்தபின்பு, இந்தியாவைத் துண்டாட விரும்புவோர்களுடனும், மற்றும் சுதேச மன்னர்களுடனும் விவாதத்தில் இறங்குவதால் பயனில்லை என்ற முடிவுக்குக் காங்கிரஸ் வந்தது. தற்சமயம் இந்தப் பிரச்னைகளையெல்லாம் அப்புறம் ஒதுக்கி வைத்து விட்டும், எதிர்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதில் கவலை கொள்ளாமலும், இப்போது அந்நியர் ஆக்ரமிப்பிலிருந்து தேசத்தைப்பாதுகாப்



பது எப்படி என்பதில் காங்கிரஸ் சிரத்தை காட்டலாயிற்று. சுதந்திரம் கொடுப்பதாக பிரிட்டன் ஒப்புக்கொண்டு, மற்ற ஜனநாயக நாடுகளில் போல் உண்மை அதிகாரம் வாய்ந்த தேசீய ஸர்க்காரை அமைத்து, பாதுகாப்புப் பொறுப்பை அதற்குக்கொடுத்தால், அதை ஸ்வீகரிக்கத் தயாராயிருப்பதாகக் காங்கிரஸ் தெரிவித்தது. பாதுகாப்பு இலாகா ஒதுக்கி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோது நாங்கள் பிரமித்துப்போனேம். அடிப்படையான கொள்கையை மாற்றுவது இயலாது என ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் தெரிவித்துவிட்டார். அப்போது பொது ஜனங்களிடம் எவ்விதம் முறையிடுவது? இது அடிப்படையான பிரச்னையெனக் கூறப்பட்டதும் எங்களது ஸ்திதிக்கு ஹானி ஏற்பட்டதாகவே நாங்கள் எண்ண நேர்ந்தது.

"அற்பமான விஷயம்"

எப்படியாவது பொதுமக்களிடம் முறையிட சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற கருத்துடன் சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்த நாங்கள் முடிவு செய்தோம். ராணுவ ஏற்பாட்டைக் கெடுக்க நாங்கள் உத்தேசிக்கவில்லை. ஆனால் ஒரு சிறிதளவுக்காவது விட்டுக் கொடுக்காத வரையில், பொது ஜனங்களிடம் போய் அவர்களைத் தியாகம் பண்ணவும், கஷ்டங்களை மேற்கொள்ளவும் வேண்டுவது சாத்தியமற்றதல்லவா? இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் ஒரு பரிஹாரம் கண்டுபிடித்தார்: தனித் தனியாக யுத்த இலாகாவையும், பாதுகாப்பு இலாகாவையும் நிறுவ அவர் இணங்கினர்: யுத்த இலாகா இந்திய ஸேனாதிபதி கீழ் இருக்கும்: பாதுகாப்பு இலாகா தேசீய ஸர்க்காரிடம் அடங்கியிருக்கும். இவ்விரு இலாக்காக்கள் வசம் ஒப்புவிக்கப்படும் அதிகாரத்தைப் பற்றியும் அபிப்பிராயபேதம் தலைகாட்டியது: ஆனல் பின்பு நாங்கள் கண்டறிந்ததைக் கவனிக்கையில் இது மிகவும் அற்பமான விஷயம் என்றே கூற வேண்டும்

எங்கள் ஏமாற்றம்

புதிதாக நிறுவப்படும் தேசீயசர்க்கார் சட்டபூர்வமான மந்திரிசபையைப்போல் இருக்கும் என்றும், கவர்னர் ஜனரல் மந்திரிகளுடைய யோசனைகளுக் கிணங்கி நடப்பார் என்றும், இந்தியஸேனாதிபதியும் பிரிட்டிஷ் யுத்த மந்திரியும் விதிவிலக்காயிருக்கும் என்றும் எண்ணியே நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே போனேம். ஆனல் புதிய மெம்பர்கள் தற்சமயமுள்ள நிர்வாக சபை மெம்பர்கள் போலவேதான் இருப்பர் என்றும், சட்டரீதியான அரசியலை நடத்தும் மந்திரிகள் மாதிரி இருக்கமாட்டார்கள் என்றும் கூறப்பட்டபோது எங்களுக்கேற்பட்ட ஏமாற்றத்திற்கு எல்லையே இல்லை. இதை நாங்கள் ஆக்ஷேபித்தபோது, நாங்கள் ராஜிநாமாச் செய்து விடுவதாகப் பயமுறுத்தலாம் எனவும், இல்லாவிடில் கவர்னர் ஜனரல் இந்தியா மந்திரி ஆகியவர்களுக்கு விரோதமாக எங்கள் சக்தியை உபயோகப்படுத்தலாம் எனவும், ஆனல் இம்மாதிரி தகராறுகள் ஏற்படுவதைத் தடுக்க பரஸ்பர ஒப்பந்தம் பிறக்கவேண்டும் எனவும் கூறப்பட்டன. இந்த ஒரு விஷயம் காரணமாக சம்பாஷணைகள் முறிந்தன. ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் திரும்பிப்போய்விட்டார்.

உறுதி கேட்டதேன்?

யுத்த சம்பந்தமில்லாத சமாச்சாரங்களில் தலையிடுவதில்லை என்று வைஸ்ராய் ஒப்புக்கொண்டிருந்தால்—சுலபமாகச் செய்திருக்கவேண்டியது—காங்கிரஸ் பொறுப்பையேற்று, இந்தியா

(மேல் படம்)

சமீபத்தில் ஸர் க்ரிப்ஸ் திட்டத்தைப் பரிசிலிக்க நடந்த காரியக் கமிட்டி கூட்டத்திற்கு மௌலானா அபுல் கலாம் ஆஸாத வந்த போது எடுத்தப் படம்.

★

(வலது படம)

ஏப்ரல் மாதம் 17-ம் தேதியன்று அமெரிக்க நிபுணர்கள் மூவரடங்கிய தூதுக் கோஷ்டி ஒன்று புது டில்லி வந்துசேர்ந்தது. ஸர்க்கார் மாஜி உதவிக் காரியதரிசி கனம் ஹென்ரி க்ராடியும், ஆடோமோடிவ் இஞ்ஜினியர் சங்கத் தலைவர் கனம் ஆர்தர் டபிள்யு. ஹாரிங்டனும் படத்தில் இருப்பவர்கள். கர்னல் லூயின் ஜான்ஸனுடன் இவர்கள் வந்தனர்.





மற்றொரு நிபுணரும் வந்து சேர்ந்தார்

இல்லினுய்ஸ் ஸ்டீல் கார்ப்பரேஷனைச் சேர்ந்த கனம் டர்க் டெககரும் புது டில்லிக்கு சமீபத்தில் வந்து சேர்ந்தனர். அவர் இந்தியா ஸர்க்கார் சப்ளை இலாகா கூட்டுக்காரியதரிசி மிஸ்டர் யீட்ஸுடன இருக்கிறர்.

முழுதும் பாதுகாப்புக்கான திட்டங்களை மேற்கொண்டிருந்திருக்கும். வைஸ்ராயின் அதிகாரம் பாதுகாக்கப்பட்டது. ஆனல் இந்தியாவின் பாதுகாப்புத் திட்டத்தில் சிரத்தைகாட்டப்படவில்லை. இவ்விதம் பாதுகாக்கப்பட்ட உரிமையைப் பிரயோகிக்க சந்தர்ப்பமே நேரிடாது என்பதை சிந்தனைசக்தியுள்ளவர்கள் சுலபமாகக் காண முடியும். நாங்கள் இந்த வாக்குறுதியைக் கேட்டதற்குக் காரணம், இந்தியா உண்மையிலேயே சுதந்திர ஸர்க்காரைக் கொண்டிருக்கிறது: இதன் பாதுகாப்புக்காக உயிரையும் துறக்க நாம் தயாராயிருக்கவேண்டும் என்று வெளியேபோய் கூற முடியும் என்பதே.

பேச்சுகள் முறிந்தன

இந்த வாக்குறுதி மறுக்கப்பட்டது. மறுக்கப்பட்ட முறையோ நாட்டில் அத்ருப்தியையும் வருத்தத்தையும் கிளப்பியிருக்கிறது. வெளியேற்றப்பட முடியாத ஒரு மெஜாரிட்டி சர்வாதிகாரம் வஹிப்பதற்கு பிரிட்டன் இணங்காது என்று காரணம் கூறப்பட்டது. சட்ட சபைகளையோ அல்லது வாக்காளர்களையோ கவனியாமல் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அமைக்கப்படும் தேசீய ஸர்க்கார் விஷயத்தில் இந்தக்குறை இருந்தே தீரும். இந்த ஆக்ஷேபம் முன்பே கிளப்பப்பட்டிருந்தால், வகுப்புப் பிணக்கு மறைய பலவிதத்திலும் முயற்சி செய்திருக்க முடியும்: யுத்த நெருக்கடியை முன்னிட்டு உலகம் முழுதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேசீய ஸர்க்கார்கள் சாஸ்வதமான சர்வாதிகாரம் கொண்டவை போல் இருந்து வருகின்றன. இந்த யுத்த சமயத்தில் ஸ்திரபாவமும் தொடர்பும் நிலை பெற்றிருப்பது அவசியம்: இது யுத்தம் இருக்கும் வரைதான் நீடிக்கும். தேசீய ஸர்க்கார்களை எப்படி அமைப்பது, எப்போது அமைப்பது, என்பதை விவாதிக்கும்படியான சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தில் பேச்சுகள் யாவும் முறிந்துவிட்டன.

ஸர் க்ரிப்ஸ் கூறியது

இந்தியாவுக்கு இங்கிலாந்து புரிந்த நன்மைகள் பல: இழைத்திருக்கும் அநீதியும் அனந்தம். கண்டிக்கும் சமயம் இதுவல்ல. நாம் கூறுபவை கண்டனம் போல் காணப்படும் என்ற காரணத்தால், அவசியமானவற்றைக் குறிப்பிடாமலும் இருக்கக்கூடாது. மைனாரிட்டிகளைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு இந்தியாவை இழப்பது அநுசிதம். பொறுப்பேற்க காங்கிரஸ் தயாராயிருந்தது. மைனாரிட்டிகள் பற்றி தமக்கிருக்கும் கவலை இதற்கு விரோதமாய் இருப்பதாக ஸர் க்ரிப்ஸ் தெரிவித்துவிட்டார்.

"உணர்ந்திருந்தால்..."

இந்த யுத்தம் இந்தியர் விரும்பியதன்று. பிரிட்டனின் விரோதிகளும் எதிரிகளும் இந்தியாவுக்கும் விரோதிகள் என்றும் எதிரிகள் என்றும் எண்ணலாகாது. நாம் பிரிட்டனுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் தான் இந்தியா தாக்கப்படுகிறது. பிரிட்டன் நடத்தும் யுத்தங்களில் இந்தியாவும் கலந்தே தீரவேண்டியிருக்கிறது. இதை பிரிட்டன் உணர்ந்திருந்தால் இந்தியருக்கு பலவித அனுகூலங்களை அது புரிந்திருக்கும்.

"நம்மால் முடியவில்லை"

சென்ற 150 வருஷங்களாக நமது விஷயங்களை பிரிட்டிஷ் ஸர்க்கார் கவனித்து வந்திருக்கிறது; சென்ற 30 வருஷ காலத்திற்குள் நம் மக்களிடமிருந்து ராணுவத்திற்காக அநேக கோடி ரூபாய்களை வசூலித்திருக்கின்றனர்: அறியாத கிராமப் புறத்தார் சாணத்தை எப்படி விறகுக்குப் பதிலாக உபயோகிக்கின்றனரோ அதேமாதிரி இந்தப் பணம் செலவாகியிருக்கிறது. நாட்டில் திடத்தையும் தீரத்தையும் உற்பத்தி பண்ண இது விநியோகமாகவில்லை. இங்கு இருக்கும் 40 கோடி மக்களையும் எதிரியின் முன் கலங்கி நிற்கும்படியே அது செய்திருக்கிறது. இந்திய மக்கள் உலகிலேயே சிறந்த ஜாதியார்: பழைய சரித்திரம் பிரசித்தி வாய்ந்தது, மனுஷ்ய முயற்சி சாதிக்கும் எல்லா துறைகளிலும் நிபுணர்கள்: ராணுவ நடவடிக்கைகளிலும் கை தேர்ந்தவர்கள்: இந்தியா வெளியாரின் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருக்கும் இந்த

— பின் பக்கம் பார்க்க



பத்திரிகைக்காரருடன் பண்டித நேரு

ஸர் க்ரிப்ஸ் விஷயம் முறிந்து போன விபரத்தை பத்திரிகை நிருபர்களிடம் பண்டித ஜவஹர்லால் நேரு விளக்கியபோது எடுத்த படம். பக்கத்தில் ஸ்ரீமதி சரோஜனி தேவி முதலிய பல பிரபல தலைவர்கள் இருக்கின்றனர்.

அந்நியர் உதவியை நாடுவது

'அஹிம்சா மார்க்கமல்ல'

மஹாத்மா காந்தி

"ஜப்பானியர் தங்கள் சொல்படி நடப்பதாயிருந்து இந்தியாவை பிரிட்டன் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதானுல் அவர்கள் உதவியை நாம் ஏன் அங்கீகரிக்கக்கூடாது?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு காந்திஜி பின்வருமாறு ஹரிஜனில் எழுதியிருக்கிறுர்:—

அதிக்கிரமக்காரர்கள் அனுகூலம் செய்வார்களென்று நினைப்பது தவறு. ஜப்பானியர் பிரிட்டிஷார் ஆதிக்கத்திலிருந்து நம்மை விடுவிக்கலாம். ஆனல் தங்கள் ஆதிக்கத்தை நம் மீது சுமத்துவதற்காகத்தான் அப்படிச் செய்வார்கள்.

இந்தியாவை விடுவிக்க வெளிநாட்டு உதவியை நாடக்கூடாதென் எப்பொழுதும் சொல்லி வந்திருக்கிறேன். அப்படிச் செய்வது அஹிம்ஸா மார்க்கமல்ல.

பிரிட்டிஷாருக்கு எதிராக வெளிநாட்டு உதவியைப் பெற நாம் இஷ்டப்பட்டால் பெருந்தியாகம் செய்யவேண்டியிருக்கும். நமது அஹிம்ஸா நடவடிக்கையால் லக்ஷியத்துக்கு வெகு அருகில் வந்தோம். அஹிம்ஸா கொள்கையை நான் இறுகப் பிடித்துக்கொண்டிருக்கிறேன். ஜப்பானியரிடம் எனக்கு விரோதமில்லை. ஆனுல் அவர்கள் இந்தியா விஷயத்தில் கொண்டிருக்கும் நோக்கங்களை நான் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சுதந்திர மனிதர்கள் என்ற முறையில் அவர்களிடம் நமக்குத் தகராறு ஏதுமில்லையென்பதை அவர்கள் ஏனே அறியவில்லை? இந்தியா விஷயத்தில் அவர்கள் தலையிடாது தனியாக விட்டு விடட்டும். அவர்கள் எண்ணம் நல்லதானுல் சீனவை ஏன் இவ்வளவு நாசம் செய்தார்கள். சீனு அப்படி என்ன தான்செய்து விட்டது?

* * * *

"வேறு வழி இல்லை"

"அஹிம்சைதான் நம் கதி"

"வார்தாவில் அன்று தாங்கள் பேசியபோது பண்டித ஜவஹர்தான் தங்களுக்குச் சட்ட ரீதியான

'ஹரிஜன்' கட்டுரைகள்

'வார்சு' எனச் சொன்னீர்கள். இன்று அவர் ஜப்பானியரை எதிர்க்க கொரில்லா யுத்த முறையை அனுஷ்டிக்க வேண்டுமென அபிப்பிராயப்படுகிறுரே; இவ்விதம் அவர் பலாத்காரத்தைப் பகிரங்கமாக ஒருபுறம் ஆதரிக்கையில் மற்ருெருபுறம் ராஜாஜி நாட்டினர் பலருக்கும் ராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் வேண்டுமெனக் கேட்கிறுர். இந்த நிலையில் தங்கள் அஹிம்ஸையின் கதி என்னவாவது?" என்று ஒரு நிருபர் மகாத்மாவைக் கேட்டதற்கு மகாத்மா "அவ்விருவரும் அஹிம்ஸையில் நம்பிக்கை கொள்ளாததற்காக நான் சற்றும் கலக்கமடையவில்லை: அவர்கள் தங்கள் முயற்சி பலிக்காததை அறிந்ததும் இன்னும் அதிக நம்பிக்கையுடன் அஹிம்ஸையை ஆதரிப்பார்கள்" என 'ஹரிஜன் பத்திரிகையில் பதில் எழுதி யிருக்கிறுர்.

"அதை விடமுடியாது"

"நான் அவ்விதம் சொல்லவில்லை: தாங்கள் குறிப்பிட்டதுபோல நிலைமை பயங்கரமாகத் தானிருக்கிறது. ஆனல் தாங்கள் நினைப்பது போல நிலைமை அவ்வளவு பயங்கரமாகவில்லை; முதலில் உங்களுக்கு ஒன்று தெரிய வேண்டும். 'சட்டப்படி எனது வார்சு" என்று நான் சொல்லவில்லை. நான் ஹிந்தியில் அன்று பேசியபோது "ஜவஹர் சட்டப்படி என் வார்சல்ல. ஆனுல் எனது வார்சு அவர் தான் பதில் சந்தேகமில்லை" எனக் குறிப்பிட்டேன். அதாவது நான் போன பிறகு அவர் என் பதவிக்கு வருவார் என்று தான் அர்த்தம். அவர் எப்போதுமே ஏன் முறையைப் பூரணமாக ஆதரித்ததில்லை. அவர் அதைப் பற்றி மனப்பூர்வமாகக் குறை கூறியிருக்கிறுர்; ஆனுல் காங்கிரஸ் கொள்கையை அனுசரித்து என் கருத்தை ஆதரித்து வந்தார். எவ்வித ஆக்ஷேபமுமின்றி எனது கருத்துப்படியே நடந்து வரும் ஸர்தார் படேலைப்போன்றவர்களை எனது வார்சு எனச் சொல்ல முடியாது. எனக்கு வார்சாக விருப்பதற்கான ஒரு உத்வேகம் ஜவஹரிடம் இருக்கிறதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறுர்கள். நான் போன பிறகு இப்போது என் விஷயமாக அவர் கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளை விட்டு விடுவார் என்று சொல்லவும் முடியாது என நான் அப்போதே சொல்லவில்லையா! அவர் ஏனே கொரில்லா யுத்த முறையில் நம்பிக்கை வைத்திருக்கிறுர்? அது எனக்கு வருத்தத்தையே தருகிறது. அந்தமுறை இந்திய நாட்டுக்கு அந்நியமானது.

அஹிம்ஸா கொள்கையை 22 வருஷங்களாக விடாது வற்புறுத்திவருகிறேம். அதில் என்ன குறையிருந்தாலும் சரி, ஜவஹரும், ராஜாஜியும் இப்போது ஏதோ சொல்லிவிட்டார்கள் என்பதற்காக திடீரென அக்கொள்கையை அடியோடு விட்டுவிட முடியாது. அவர்கள் செல்வாக்கு எவ்வளவு அதிகமாக விருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை,

யார் அறிவார்?

அதனுல் நான் அவர்களின் "நாஸ்திக"த் தன்மையைக்கண்டு சற்றும் கலக்கமே அடையவில்லை. அவர்களுடைய முயற்சி பலிக்காவிட்டால், அவர்கள் இன்னும் அதிக உற்சாகத்துடன், அஹிம்ஸையை ஆதரிக்க முற்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும். நாளை நடப்பதை யார் அறிவார்? அஹிம்ஸையை அனுஷ்டிப்பதற்கு பலாத்கார வழியை அநுஷ்டித்துப் பார்க்கவேண்டுமென அவர்கள் விரும்புகிறுர்கள். ஆனல் நாளை நடப்பதை யார் அறிவார்? அவர்கள் சொல்வது சரியாகலாம். அனுபவத்தைக் கொண்டு நான் சொல்லும் கருத்து பொய்யாகும் பொய்யாகலாம். ஆனல் நான் வகுத்துக்கொண்டுள்ள பழியைப் பின்பற்றுவோரில்லாவிட்டாலும் தனித்து நின்ருவது கடைசி வரை அதைச் சற்றும் தயங்காமல் அனுஷ்டித்து வருவேன். பொது ஜனங்கள் பலாத்கார வழிக்குப் போகமாட்டார்கள் என நம்புகிறேன். அவர்கள் சும்மாவாவது இருந்து விடுவார்கள். அல்லது அஹிம்ஸையை அனுஷ்டிப்பார்கள். ஒன்றுமட்டும் நிச்சயம். கொரில்லா யுத்த முறையால் நமக்கு நன்மையே விளையாது. அம்முறையைப் பெருவாரியாக அனுஷ்டித்தால் நாசமே விளையும்.

அஹிம்ஸையே கதி

பலாத்கார மற்ற ஒத்துழையாமை தான் ஹிம்ஸையுடன்கூடிய எல்லா போர்முறைக்கும் ஏற்ற பரிகாரமாகும். நாட்டினர் பலரும் அஹிம்ஸையை அனுஷ்டிக்க ஆரம்பித்தால், பூரண பலன் கிடைப்பது நிச்சயம்; இங்கு பிரிட்டிஷார் வேரூன்றி விட்டார்கள். ஆகவே அவர்கள் விஷயத்தில் அவ்விதமிருக்காது. அவர்கள் இன்னும் இங்கு அடியெடுத்தும் வைக்கவில்லை. அ. இ. கா. கமிட்டி கவனிக்க வேண்டும். அடுத்து வரும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி இதையெல்லாம் கவனித்து பலாத்காரமற்ற முறையையே அநுஷ்டிக்க முற்பட்டு பலாத்காரமற்ற ஒத்துழையாமையைப்பற்றி திட்டமாக ஒரு கட்டளைப் பிறப்பிக்கும் என நான் நம்புகிறேன். உத்தியோக முறையில் எவ்வித சம்பந்தமுமின்றி பிரிட்டன் யுத்த முயற்சிக்கு பலாத்கார வழியில் உதவிசெய்வது, அதிலும் சமரஸ முயற்சி பலிக்காது போன இந்த சமயத்தில் அவ்வித உதவி செய்வது. தேசத்துக்கு அவமானம் தருவதாகும் என்றே நான் எண்ணுகிறேன்.

* * * *

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தருணத்தில் பிரிட்டிஷ் ஸர்க்கார் புரிந்த கொடுமை பிரகாசமாகப் புலப்படுகிறது. பிரிட்டனின் குற்றம் ஸ்பஷ்டமானது. ஆயினும் இந்த நிலைமையில் நமக்கு எவ்வளவோ தடைகள் இருந்த போதிலும், நம் மக்களின் உள்ளத்தில் மறைந்திருக்கும் உணர்ச்சியை உயிர்ப்பித்து, வாழ்க்கை தேசம் இவை சம்பந்தமாக அவர்கள் கொண்ட கொள்கைகளைத் திருத்தியமைக்கவும், சில இந்தியத் தலைவர்கள் கிளம்பியிருப்பது குறிப்புக் குரியதாகும். ஆனுல் பிரிட்டன் மனதை மாற்றமட்டும் நம்மால் முடியவில்லை.

"கடமை தீர்ந்துவிடாது"

க்ரிப்ஸ் பேச்சு முறிவுடன் நமது சங்கடம் முடிந்துவிடவில்லை. காங்கிரஸுடன் பிரிட்டிஷ் ஒத்துழைக்காததால், நாம் நம் தாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமை தீர்ந்து விடாது. நம் தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கான இதர மார்க்கங்களை எடுத்துக் காட்டும் பொறுப்பு நம் நாட்டுத் தலைவர்களையே சார்ந்திருக்கிறது. —("ஹிந்துஸ்தான் டைம்ஸ்" வருஷ மலர்)

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகாமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிருன். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனுன ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிருன். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிருன். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிருள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிருன். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிருன். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிருன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிருன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிருள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிருன். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனுேநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிருன். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிருள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிருள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிருர் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன. மேலும் சில பரிச்சயங்கள் இவர்களுக்கு ஏற்படுகின்றன.

அவர்கள் தப்பிப்போய்விட்டார்கள் என்று தான் எல்லோரும் தீர்மானித்தார்கள். ராஜலக்ஷ்மிக்கு அப்பொழுது சின்ன விஷயங்களை மனதில் கொள்ள சமயமில்லை. அவள் அவைகளை நாலைந்து தினங்களிலேயே மறந்து விட்டாள். அப்படி ஒரு சமயம் நினைவு வந்தாலும் அதைப்பற்றி அவள் மிகவும் யோசிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். கிராமத்திலிருந்து ஒரு பெரிய தொல்லை நீங்கிற்று என்றுதான் எல்லோரும் எண்ணினுர்கள். ரதனுக்கு மட்டும் தான் குஷியில்லை. அந்த அறிவாளி சாதாரணமாகத் தன் மனதிலிருப்பதை வெளியிடுவதில்லை. அவன் முகத்திலிருந்து அந்த விஷயம் முடிவானது அவனுக்கு அவ்வளவாகத் திருப்திகரமில்லை என்று தெரிந்தது. அவன் மத்தியஸ்தம் செய்வது, தீர்ப்பளிப்பது முதலியவற்றிற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. வீட்டிலிருந்து பணமும் போய் விட்டது. இவ்வளவு பெரிய விவகாரம் இரவோடு இரவாக எந்த விதமாகவோ கை நழுவிப் போய் விட்டது. தான் அவமானமடைந்தது போலத்தான் அவன் கருதினுன். ஆனுலும் அவன் மௌனமாகவே இருந்து விட்டான். வீட்டு எஜமானிக்கோ ஒரு விஷயத்திலும் நினைவில்லை. சில நாட்களாகவே சுநந்தையிடமிருந்து சுத்தமாக மந்திரத்தை உச்சரிக்கும் பாடத்தில் இறங்கி அதிலேயே ஈடுபட்டு விட்டாள். ஒருநாளாவது அங்கே போவது தவறுவதில்லை. அங்கே அவள் எவ்வளவு தூரம் தர்மத்தைப் போதிக்கும் ஞானத்தைப் பெற்றுவந்தாள் என்பதை நான் எப்படி அறிய முடியும்! அவளிடம் ஏற்பட்ட மாறுதலை மட்டும் தான் கண்டேன். அது எவ்வளவு துரிதமாக ஏற்பட்டதோ அவ்வளவு எதிர்பாராததாகவும் இருந்தது. வெகு நாட்கள் நான் அவளைப் பகல் வேளையில் காணவே முடியவில்லை: வர வரநான் சொல்லுவதற்கெல்லாம் அவள் ஆட்சேபனை செய்ய ஆரம்பித்தாளே ஒழிய, ஒன்றிலாவது என்னை ஆமோதிக்கவில்லை. ஆனல் அவளுடைய பிசகைத் திருத்த வேண்டும் என்ற முயற்சியையே நான் செய்யவில்லை. ஆனுல் இப்பொழுதெல்லாம் எதிர் பாராமல் ஒவ்வொரு நாள் அதிக நேரமாகிவிட்டால், நான் மனதிற்குள் வெட்கப்பட ஆரம்பித்தேன். ஏனென்ருல் ராஜலக்ஷ்மி நேரமாகிவிட்டதை எடுத்துக் காட்டி ஸ்வாரஸ்யமற்ற குரலில் "நீ உடம்பு சரியில்லாத மனுஷன். உனக்கேன் இவ்வளவு நாழி? நீயே உன் உடம்பைக் கவனித்துக் கொள்ள முடியாவிட்டால் வேலைக்காரர்களையாவது கவனிக்கச் சொல்ல வேண்டும். உன்னுடைய சோம்பேறித்தனத்தால் அவர்களும் கெட்டுப் போய்விட்டார்கள்." என்பாள். இந்த மாதிரி வார்த்தைகள் அவள் வாயிலிருந்து முன்னல் வந்ததில்லை. இப்பொழுதெல்லாம் அவள் குரலில் முன்னைப் போல அவ்வளவு அன்பும் உணர்ச்சியும் ததும்பவில்லை. அதில் சற்று வெருப்பும் வெகு சூட்சுமமான கடுமையும் தென்பட்டன. அது வேலைக்காரர்கள் என்ன, என்னைத் தவிர பகவானுக்குக் கூடத் தெரியாது! ஆகையால் பசியில்லாவிட்டாலுங்கூட வேலைக்காரர்களுக்காக அவசரம் அவசரமாக, ஏதோ ஒருவிதமாக ஸ்நான ஆகராதிகளை முடித்துக் கொண்டு, அவர்களுக்கு ஓய்வு கொடுத்தேன். ஆனல் இந்த உதவியை அடைந்த வேலைக்காரர்களுக்கு கோபமோ வெறுப்போ ஏற்பட்டதோ என்னமோ அது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனல் ராஜலக்ஷ்மி சாப்பாடு முடிந்த பத்துப் பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் வெளியே போய் விடுவாள். சில நாட்களில் ரதனும் மற்றும் சில நாட்களில் காவல்காரனும் கூடப் போவார்கள். இன்னும் சில நாட்கள் அவள் தனியாகவே போவதைக் கண்டேன். அவர்களுக்காக அவள் காத்துக்கொண்டிருப்பது கூடக் கிடையாது. முதலில் நாலைந்து நாட்கள் நான் கூடப் போய்கொண்டிருந்தேன். ஆனல் அந்த ஏற்பாடு ஒரு விதத்திலும் சரியில்லை என்று அதற்குள்ளேயே தெரிந்து விட்டது. எனவே நான் வீட்டில் தன்னந்தனியாக, எனக்கேற்பட்ட சோம்பேறுத்தனத்திலும், அவள் தர்ம காரியம், மந்திர தந்திரம் முதலியவற்றினுடைய தூண்டுதலிலுமாகக் காலம் கழிக்கலானேம்.

ஓட்டுடன் கூடேறிய மண்ணின் மேல் வெகுவாக அவள் போவதை நானும் என் திறந்த ஜன்னலிலிருந்து பார்ப்பேன். தனியாக மத்தியானம் பூராவும் எப்படிக் காலம் கழிப்பேன் என்பதைப்



பற்றிக் கவலைப்பட அவளுக்குச் சாவகாசமில்லை என்பதை அறிந்தேன். அப்பொழுதும் கண்ணுக்கு எட்டிய தூரம் அவள் நடந்துபோய் மறைவதை என்னால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. கரடு முரடான அந்தப் பாதையில் ஒடிந்து விழுவதைப்போலிருந்த அவள் தேகம், கொஞ்சம் கொஞ்மாகத் தூரத்திலிருந்து கண்ணில் மறைவதைக் கண்டபோதெல்லாம், எனக்கு வெகுவாக அறிமுகமான அவளுடைய தனிப்பட்ட போக்கு இன்னும் முடிவுபெறவில்லை, நீடித்துக்கொண்டேதான் இருக்கிறது. என்பது போல என் மனதில்பட்டது. திடீரென்று நினைவு வரும். கண்களைக் கசக்கிக்கொண்டு, மற்றொரு முறை உற்றுப்பார்த்து விட்டு பிறகு படுக்கையில் படுத்துக் கொள்ளுவேன். வேலையே இல்லாமல் இருந்த சிரமத்தால் என்னை மறந்து சில நாள் தூங்கி விடுவேன். இல்லாவிட்டால் கண்களை மூடிக்கொண்டே மௌனமாகப்படுத்துக் கிடப்பேன். அருகிலிருந்த சில குட்டையான சவுக்கு மரங்களிலிருந்த சிறிய கிளைகளில் உட்கார்ந்துகொண்டு மணிப்புறுக்கள் கத்திக்கொண்டிருக்கும். அத்துடன்கூட மூங்கில் புதர்கள் வழியாக நுழைந்து வெளியேறிய வெப்பமான காற்று துன்பம் நிறைந்த ஒரு பெருமூச்சுப்போல் சப்தம் செய்து கொண்டு விட்டு விட்டுக் கேட்கும், அது என்னுடைய உள்ளத்திலிருந்து தான் கிளம்பினதோ என்று பிரமை கொள்வேன். அந்த மாதிரி பிரமையுடன் மிகுந்த நாட்களையும் கழிப்பது அசாத்தியமாயிற்றே என்று பயப்படலானேன்.

ரதன் வீட்டில் இருந்தால் சற்று நேரத்திற்கு ஒரு தரம் காலால் சப்தம் செய்துகொண்டு உள்ளே வந்து கவலையுடன் "இன்று ஒரு தடவை புகையிலை ஹுக்காவில் போடட்டுமா?" என்பான். இந்த மாதிரி சிலநாட்கள் கழிந்தன. விழித்துக்கொண்டிருந்தாலும் பதில் சொல்லாமல் தூங்குவது போலப் பாசாங்கு செய்து கொண்டு படுத்திருப்பேன். நான் படும் கஷ்டத்தை கொஞ்சங்கூட அவள் கண்டு விடக்கூடாது என்ற கவலையாகவே யிருந்தேன்.

எப்பொழுதும் போல அன்றும் ராஜலக்ஷ்மி மத்தியானம் சுநந்தையின் வீட்டுக்குப் போய் விட்டாள். திடீரென்று எனக்குப் பர்மா நினைவு வந்தது. வெகு நாட்களுக்குப் பிறகு அபயாவிற்கு ஒரு கடிதம் எழுத உட்கார்ந்தேன். நான் வேலை செய்த கம்பெனியின் பெரிய துரைக்கும் ஒரு கடிதம் எழுதித் தகவல் வரவழைக்க வேண்டும் என்று எண்ணினேன். என்ன தகவல் வரவழைக்கிறது, எதற்காக வரவழைக்கிறது, வரவழைப்பதால் என்ன ஆகப்போகிறது-இதைப் பற்றியெல்லாம் நான் யோசிக்கவே இல்லை! திடீரென்று ஜன்னலுக் கெதிரே யாரோ ஒரு பெண் முகத்தை முக்காட்டால் மறைத்துக் கொண்டு சென்று மறைந்தது போலத் தோன்றிற்று. எனக்கு அறிமுகமான உருவம்—மாலதியைப் போல இருந்தது. எழுந்து போய் எட்டிப் பார்த்தேன். காணோம்! அப்பொழுது தான் அவளுடைய புடவையின் சிவப்புத்தலைப்பு எங்கள் வீட்டு முனையில் மறைந்து போயிற்று.

முற்றிலும் ஒரு மாதம் கழிந்து விட்டதால் அந்த நாசமாய்ப் போன பெண்ணை எல்லோரும் மறந்து விட்டார்கள். என்னால் மட்டும் அவளை மறக்க முடியவில்லை: அந்த விலங்கிடப்பட்ட பெண் அன்று மாலை உதிர்த்த கண்ணீரின் சொட்டு ஒன்று என் ஹிருதயத்தில் பட்டது: இன்னும் உலர்ந்து போகவில்லை என்று எனக்குத் தெரியும். அவர்கள் எங்கிருக்கிறார்களோ என்று மறுபடியும் தோன்றிற்று. இந்த கங்காமாட்டியினுடைய கெட்ட துர்நாற்றம் பிடித்த சூழ்ச்சியின் கட்டிலிருந்து வெளியேறின பெண்கள் புருஷர்களுடன் சேர்ந்து எப்படிச் சுகமாகயிருந்தார்கள் என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. சமீபகாலத்தில் அவர்கள் இங்கே வரவே வேண்டாம் என்று ஆசைப்பட்டேன். திரும்பிப்போய் கடிதத்தை எழுதி முடிப்பதற்காக உட்கார்ந்தேன். கொஞ்சம் எழுதுவதற்குள் காலடிச் சப்தம் கேட்டதும் தலை நிமிர்ந்து பார்த்தேன். ரதன் கையில் ஹுக்கா வைத்துக்கொண்டு எதிரே வந்து நின்றான். அதை உடனே கீழே வைத்து விட்டுப் புகை இழுக்கும் குழாயை என் கையில் கொடுத்து "பாபு கொஞ்சம் புகை பிடியுங்களேன்" என்றான்.

நான் தலையை ஆட்டி "ஆகட்டும்" என்று தெரிவித்தேன்.

ஆனால் ரதன் உடனே போய் விடவில்லை. சிறிது நேரம் மௌனமாக நின்று விட்டு மிகவும் கம்பீரத்துடன் "நான் பண்டிதன். எனக்கு இவ்வளவு கூடவா தெரியாது?" என்றான்.

அவன் பீடிகைகளில் எனக்கு நிரம்பப் பரிச்சயம் உண்டு. ராஜலக்ஷ்மியாயிருந்தால் தெரிந்தால் நல்லதுதான். இப்பொழுது என்ன சொல்ல வந்திருக்கிறாய், சொல் என்பாள். ஆனால் நான் தலையை மட்டும் நிமிர்த்திச் சிரித்தேன். ரதனுடைய கர்வத்தின் அளவு அதனால் கொஞ்சமகூடக் குறைவு படவில்லை.

அம்மாவிடம் அன்றே சொல்லியிருக்கிறேன். மட்ட ஜாதியினர்களின் விஷயங்களில் தலையிட வேண்டாம் என்றேன், அவளுடைய கண்ணீர் ஜலத்தைப் போக்குவதற்காக இரு நூறு ரூபாயை விருதா வாக்க வேண்டாம் என்றும் சொன்னேன். நீங்களே சொல்லுங்கள், சொன்னேனா இல்லையா?"

அவன் சொல்லவில்லை எனக்குத் தெரியும். அந்த அபிப்பிராயம் அவன் மனதில் இருந்திருந்தால் அதில் ஆச்சரியமில்லை. ஆனால் அதை வெளியிட்டுச் சொல்வதில் அவனுக்கு மட்டுமா எனக்குக்கூடத் தைரியமிருந்திருக்காது.

"என்ன சமாசாரம் ரதன்" என்று கேட்டேன்.

"சமாசாரம என்ன-தெரிந்தது தானே, அது தான்"

"ஆனால் எனக்குத் தெரியாதே சொல்லு"

ரதன் திறந்து சொன்னான். அதைக் கேட்ட பிறகு என் மனத்தில் என்ன ஏற்பட்டது என்பது கடினம். நான் கேட்ட கதையின் கொடுமையாலும், எல்லை இல்லாத பயங்கரத்தாலும், என் மனமே என் வசமில்லாமலிருந்தது போல் தோன்றிற்று. எப்படி இது நேர்ந்தது? எப்படி அது நேர்ந்தது? என்பதைச் சுருக்கமாகச் சொல்ல ரதனால் முடியவில்லை. ஆனால் இது மட்டும் வாஸ்தவம் என்று தெளிவாகிற்று. நவீனன் ஜெயிலில் இருந்தான். மாலதி தன்னுடைய சகோதரியின் புருஷனுடைய தம்பியைக் கூட்டிக் கொண்டு, கங்காமாட்டியில் இருப்பதற்காகத் தகப்பன் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டாள். மாலதியை நான் ஒரு விதமாக கண்ணால் பார்த்திராவிட்டால் ராஜலக்ஷ்மியினுடைய இருநூறு ரூபாய் இந்தமாதிரி 'நல்ல வழியில் போயிற்று' என்று நம்பியே இருக்கமாட்டேன்.

அன்றிரவே எனக்குச் சாப்பாடு போடும் பொழுது இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டாள். கேட்டதும் அவள் ஆச்சரிய மிகுதியால் "என்ன சொல்லுகிறாய் ரதன்? உண்மையாகவா? அப்படியானால் அந்தப்பெண் கொஞ்சம் நல்ல தமாஷ் செய்திருக்கிறாள். பணமும் போய்விட்டது. அகாலத்தில் என்னை வந்து உபத்திரவம் செய்தாளே? இதென்ன நீ இன்னும் சாப்பிட்டாகவில்லையே?" என்றாள்.

இந்தமாதிரி கேள்விகளுக்குப் பதில் சொல்ல நான் என்றுமே முயன்றதில்லை, இன்றும் வாயை மூடிக்கொண்டிருந்து விட்டேன். ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் தெரிந்தது. இன்று பல காரணங்களால் எனக்குப் பசியே எடுக்கவில்லை. ஆகையால் ஒன்றுமே சாப்பிடவில்லை. ஆகையால் இன்று அவள் கவனம் என் சாப்பாட்டு விஷயத்தில் சென்று விட்டது. கொஞ்ச நாளாகவே என் ஆகாரம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது அவள் கவனத்திற்கு வரவில்லை. அதற்கு முன்னால் எல்லாம் இந்த விஷயத்தில் அவளுக்கிருந்த கவனத்தில் சிறிது ஆகாரம குறைந்தாலும் கண்டுபிடித்து விடுவாள். உடனே சந்தேகம், வற்புறுத்தல் இவைகளுக்கு முடிவே கிடையாது. ஆனால் இன்று எந்தக் காரணத்தாலோ அவளுடைய மான் விழி மருண்டு போய்விட்டதால் என்னுடைய ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்துவோன் நானல்ல! ஆகவே நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுப் பதில் சொல்லாமலிருந்தேன்.

என்னுடைய காலம் அப்பொழுது காலைமுதல் மாலைவரை ஒரே தினுசாகத்தான் கடந்தது. சந்தோஷமில்லை. ஆச்சரியமில்லை. ஆனால் விசேஷமான ஒரு துக்கமோ கஷ்டமோ இல்லை. உடல் நலத்திற்கு ஒன்றும் குறைவில்லை. ஒவ்வொரு நாளும் வேளை வந்ததும் வழக்கப்படி ஸ்நானம் ஆகாரங்களை முடித்துக்கொண்டு என்னுடைய அறைக்குப் போய்விடுவேன். எதிரே அதே திறந்த ஜன்னல், அதே புழுதி கிளம்பின பாதை! பஞ்சாங்கத்தின்படி அன்று ஏதோ ஒரு விசேஷமான உபவாச தினம். ஆகையால் ராஜலக்ஷ்மி அன்று கொஞ்சம்கூடப் பொழுதை வீணாக்காமல், குறித்த நேரத்திற்குக் கொஞ்சம் முன்பாகவே சுநந்தை வீட்டிற்குப் புறப்பட்டாள். பழக்கத்தின் பேரில் வெகு நேரம் அவளையேயே பார்த்துக்கொண்டு நின்றிருந்தேன் போலிருக்கிறது. திடீரென்று முந்தா நாள் எழுதி முடிக்காத அந்த கடிதங்களின் நினைவு வந்தது. இன்று அவற்றை முடித்து மூன்று மணிக்கு முன்பே தபால் பெட்டியில் போட வேண்டும் என்று விரும்பினேன். ஆகையால் வீண்பொழுது போக்காமல் அவற்றைமுடிக்க உட்கார்ந்தேன். அவற்றை முடித்து விட்டு வாசிக்க ஆரம்பித்தபொழுது ஏங்கோ ஏதோ ஒரு துன்பம் என்னைத் துளைக்க ஆரம்பித்தது. அது எதனால் என்பதை எழுதாமல் இருப்பது நல்லது. சாதாரண கடிதங்கள் தான். அவற்றால் ஏன் அவ்வளவு துன்பம் ஏற்பட்டது? திரும்பத் திரும்பப் படித்தபொழுதுகூட என்னால் அறிய முடியவில்லை. ஒரு விஷயம் மாத்திரம் எனக்கு நினைவிருக்கிறது. அபயாவினுடையகடிதத்தில் ரோஹிணிபாபுவிற்கு என் நமஸ்காரத்தைத் தெரிவித்துக் கடைசியில் அவருடைய க்ஷேமசமாசாரம் வெகு நாளாகத் தெரியவில்லை. என்பதைக்கண்டு எழுதியிருந்தேன். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? எப்படி காலட்சேபம் நடைபெறுகிறது? இதைப்பற்றி ஊகிக்கமுடிகிறதேயொழிய அறிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை. சுகமாக இருக்கிறீர்களோ இல்லையோ—ஆனால் என்று உங்கள் வாழ்க்கையிலிருந்து நான் விலகி என்னிஷ்டத்தின் பேரில் அதன் மேல் படுதாவைப் போட்டேனோ இன்றும் அது அதே மாதிரி தான் இருக்கிறது. அதை விலக்க வேண்டும் என்று நான் ஒரு நாளாவது எண்ணினது கூடக் கிடையாது. உங்களுடன் கூட எனக்கு வெகு நாள் அதிக நெருக்கம் கிடையாது. ஆனால் அன்றொரு நாள் மிகுந்த துக்கத்தின் நடுவில் நம்மிருவரிடையே ஏற்பட்ட நெருங்கிய நட்பை நான் ஒரு நாளும் மறக்க முயலவில்லை. அன்று கொடுமையால், வியாதியால்பீடிக்கப்பட்டு வெகு தூரத்தில் வெளி தேசத்தில்ஆதரவற்று, இருந்தபொழுது உன்னைத் தவிர எனக்கு வேறு போக்கிடமில்லை. அப்பொழுது ஒருநிமிஷம் கூடத் தயங்கவில்லை. மனப்பூர்வமாக வியாதிஸ்தனை யேற்றுக் கொண்டாய். ஏற்றுக்கொண்டு அப்பேர்ப்பட்டவியாதியிலும், அவ்வளவு எனக்குச் சிச்ருஷை செய்தது மல்லாமலும், நான் வேறு எங்கும் போகக்கூடாது என்றும் சொன்னாய். ஆனால் இன்று நான் வெகு தூரத்தில் இருவருக்கும் இருக்கும் வித்தியாசத்தை உணர்கிறேன். இருவருடைய சிச்ருஷையிலும் கவலையிலும் உள்ளன்பு நிறைந்த கபடமற்ற நல்லெண்ணத்திலும் ஓர் ஆழ்ந்த ஒற்றுமை இருக்கிறது. ஆனால் உன்னிடம் தன்னலமற்ற ஓர் அழகிய தியாக புத்தியும் சொல்ல இயலாத வைராக்கியமும் இருந்தன. எனக்குச் சேவை செய்வதாலேயே நீ அவற்றைப் பூர்த்தி செய்துகொண்டாய். என்னுடைய ஆரோக்ய நிலைமையில் அந்த சேவையினுடையசின்னம்கொஞ்சங்கூடத் தென்பட வில்லையே என்று நான் அடிக்கடி நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஒரு வேளை மித மிஞ்சிய நட்பை ஏற்க இயலாதவன் என்றதாலோ, அல்லது சிநேகத்தினுடைய உருவை நான் ஒரு நாள் உன் முகத்திலும் கண்களிலும் கண்டேன் என்பதாலோ அதை எண்ணியே என் மனம் ஏங்கி நிற்கிறது. ஆகையால் உன்னை மறுபடியும் ஒரு தரம் நேருக்கு நேர் பார்க்காத வரை நான் ஆறுதல் அடைய முடியாது?

துரைக்கு எழுதின கடிதத்தையும் முடித்தேன். அவர் ஒரு சமயம் உண்மையாகவே பெரிய உபகாரம் செய்திருந்தார். அதற்காக அவருக்கு நான் மிக்க நன்றி செலுத்தினேன். அவரிடம் நான் வேறொன்றும் கேட்கவில்லை. ஆனால் திடீரென்று இல்வளவு நாட்களுக்குப் பிறகு நான் இந்த நன்றியறிதலை வெளியிட்டதைக் கண்டு நானே வெட்கமடைந்தேன், விலாஸம் எழுதி தபாலில் போடப்போகும் பொழுது சற்றுத் தயங்கினேன். நேரமாகி விட்டது. ஆனால் நான் அதைப்பற்றிக் கவலைப்படாமல் கொஞ்சம் நிம்மதி அடைந்தேன்.

காணமற் போன வேவுகாரன்

★ ★ ★

"நியாயவாதி" எழுதியது

★

ஆங்கில வேவுகாரன் பீடர் காணமற் போய் விட்டான். அவன் மறைந்து பல நாட்களாகிவிட்டதால் எல்லோருக்கும் கவலை ஏற்பட்டது. அவனைத் தேடுவதற்கான பிரயத்தினம் தொடரப்பட்டது. பீடர் ஸ்பெயினில் அகப்பட்டுக் கொண்டதை யறிந்து அவனைக் கண்டுபிடிக்க ஜூலியா அனுப்பப் பட்டாள்: அவள் எப்படி கடைசியில் பீடரைக் கண்டு பிடித்தாள் என்பது மிகவும் ரசமான சம்பவம்.

★

1

ஆங்கில வேவு இலாகா உத்தயோகஸ்தன், மேஜர் எக்ஸின் முகத்தில் கவலை தென்பட்டது. தன்னெதிரே உட்கார்ந்திருந்த, ஜூலியா என்ற அழகிய வேவு காரியை நோக்கிய அவன், 'நீ இன்றே ஸ்பெயினுக்குப் பிரயாணம் புறப்பட வேண்டும்" என்றான்.

"புறப்படுகிறேன். விஷயம் என்ன?" என்று வினவினாள் அந்த உளவுகாரி.

நம்முடைய இலாகாவில் வேலை பார்ப்பவனும், ஆகாய விமானம் ஓட்டுவதில் நிபுணனுமாகிய, காப்டன் பீடர் வெகு நாட்களாய் காணமல் போய் விட்டானல்லவா? அதன் மர்மத்தைக் கண்டுபிடிக்கவே, நான் உன்னை ஸ்பெயினுக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறேன்".

பீடர் மிகவும் சுறுசுறுப்பான வேவுகாரன்; தீரன் என்று பெயர் பெற்றவன். ஆகாய விமானத்தில் ஏறி எதிரி நாடுகளில் பிரவேசித்து உளவு பார்ப்பதில் அவன் அதிக சிரத்தையுள்ளவனயிருந்தான். அவனது சேவையைப் பாராட்டிய அதிகாரிகள், அவன் திடீரென்று காணமற் போனதைப்பற்றி, கவலைகொண்டது இயல்பேயாம்.

தன்னை ஆவலுடன் நோக்கிய ஜூலியாவைப் பார்த்து புன்னகை புரிந்த, மேஜர், "பீடர் கெட்டிக்காரன்தான். ஆயினும் அவனுக்குள்ள சபலத்தை நீ அறிவாய். அவன் ஒரு ஸ்திரி லோலன் என்பது உனக்குத் தெரியாதா? அவனது மறைவுக்குக் காரணம் ஒரு பெண் மணியே என்பது தெரியவருகிறது" என்றான்.

"அவள் யார்?" என்று ஜூலியா வினவினாள்.

"அவள் ஸ்பெயினின் தலைநகராகிய மாட்ரிட்டில் இருக்கிறாள். அவள் பெயர் டி போர்ஸ். தினம் சாயந்திரம் அவள் ரிட்ஸ் ஹோட்டலில் சிற்றுண்டி அருந்த வருகிறாள். அவ்வளவு தான். அவளைப்பற்றி நான் அறிந்துகொண்ட விஷயம். பீடர் காணமற் போகுமுன், அவளுடன் சில தினங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது" என்று அவன் கூறிவிட்டு பின்னும் உரைத்ததாவது:—

"அந்த மர்ம மங்கை எதிரி தரப்பு உளவுகாரி என்று நான் சந்தேகிக்கிறேன். அந் நயவஞ்சகக்காரி பீடரை மயக்கி தன் வசப்படுத்தி அவனை ஏதோ ஆபத்தில் சிக்க, வைத்து விட்டாள் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது அவன் உயிருடன் இருக்கிறானே, இல்லையோ என்று நாம் கவலைப் பட வேண்டியதாயிருக்கிறது. ஆதலால் நீ ஸ்பெயினுக்குச் சென்று அந்த ஸ்திரீயை சந்தித்து, இந்த மர்மத்தை அறிந்து வர வேண்டும். பாம்பின் காலை அறியக்கூடியது பாம்பேயன்றோ."

ஜூலியா ஸ்பெயினுக்குப் பிரயாணமானாள்.

2

மாட்ரிட் நகரத்திலுள்ள ரிட்ஸ் ஹோட்டலில் சிற்றுண்டி யருந்தி கொண்டிருந்த, ஜூலியா, தான் நாடி வந்த மர்ம மங்கை டிபோர்ஸ் யார் என்பதை எளிதில் அறிந்து கொண்டாள். சற்று தூரத்தில் தனியேயுள்ள, ஒரு மேஜையில் உட்கார்ந்து கொண்டு போஜனமருந்தி கொண்டிருந்த அழகியே அவள். அம்மடந்தை ஸ்பெயின் நாட்டு பெண் தான். ஒல்லியானதேகம். வசிகரம் பெற்ற முகம். பிரகாசத்துடன் ஜ்வலித்த கண்கள் எத்தகைய, ஆடவனையும் ஆட்கொள்ளும் சக்தி கொண்ட, அம் மங்கையின் மயக்கத்தில் பீடர் வீழ்ந்தது ஒரு ஆச்சரியமன்று என ஜூலியா தன்க்குள் சொல்லிக் கொண்டு அவளைக் கவனிக்கலானாள்.

பல தினங்கள் ஜூலியா அம் மர்ம மங்கையை கவனித்து வந்தாள். தனியே அந்த ஹோட்டலுக்கு வருவதும், தனியே உணவருந்தி விட்டுப் போவதுமே, வழக்கமாய்க் கொண்ட அவ்வடிவழகியைப் பற்றிய, விவரங்கள் அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவள் எங்கே வசித்தாள். அவளது பூர்வோத்திரம் என்ன, அவளுக்கு என்ன உத்தியோகம் இந்த விஷயங்கள் யாருக்கும் புலப் படாத மர்மங்களாகவே இருந்தன,

ஆனால் ஜூலியா சும்மாவிருப்பவளன்று. எப்படியாயினும் அந்த மர்ம மாதுடன் பேச்சு வார்த்தைகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஊக்கத்துடன் இருந்த அவளுக்கு ஒரு நாள் சந்தர்ப்பம் வாய்த்தது. ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் அந்த ஸ்திரீயின் கை குட்டை நழுவி விழுந்தது. சமீபத்திலிருந்த ஜூலியா அதை எடுத்து அதன் சொந்தக்காரியிடம் கொடுத்தாள்.

ஜூலியாவை வந்தனத்துடன் நோக்கிய அவள் ஆங்கில பாஷையில் "நீங்கள் இங்கிலீஷ் காரி தானே" என்றாள்.

"ஆம் ஆனல் என் தாய் இந் நாட்டினர். எனக்கு ஸ்பானிஷ் பாஷை தெரியும்" என்றாள் ஜூலியா.

"அப்படியா? நம் இருவருக்கும் இந்த வேற்றுமை தான். என் தாய் இங்கிலீஷ் காரி. என் தந்தை ஸ்பெயின் காரர். ஆதலால் உங்களைப் போல் எனக்கு இரு பாஷைகளும் தெரியும்" என்றாள்.

இப்படி இருவருக்கும் ஏற்பட்ட பரிச்சயம், வெகு தூரமோ வெகு ஆழமோ செல்லவில்லை. தினம் இருவரும் அந்த ஹோட்டலில் சிற்றுண்டி அருந்தி விட்டு, சம்பாஷிப்பது வழக்கம். ஆனால் அந்த மர்ம மங்கை தன்னைப் பற்றிய விவரங்கள் யாதொன்றையும் ஜூலியாவிடம் உரைக்க வில்லை. அவளை தன் வீட்டிற்கு அழைக்கவுமில்லை. அவளைப்பற்றித் தான் அதிக சிரத்தை காட்டுவதை அவள் உணர்ந்தாள். முன் ஜாக்கிறதையுடன் இருப்பாள் என்று பயந்த ஜூலியா அந்த விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியதாயிற்று.

3

நாட்கள் பல சென்றன. டி போர்ஸ் என்ற ஸ்பானிஷ் மங்கையின் மர்மத்தை அறிந்து கொள்ளும்வகை புலப்படாமல் திண்டாடினாள் ஜூலியா என்ற ஆங்கில உளவுகாரி. அந்த நிலைமையில் இங்கிலாந்திலிருந்து அவளது மேலதிகாரியான மேஜர் அவளுக்குத் தன்னாட்களில் ஒருவனை அனுப்பினான்.

அம்மனிதன் ஜூலியாவைச் சந்தித்து விஷயம் என்னவென்று வினவினான்.

"அவசரப்பட்டால் காரியம் கெட்டுவிடும் என்று பயமாயிருக்கிறது. அதனால்தான் நான் பொறுமையுடன், சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறேன்" என்றாள் ஜூலியா.

அன்று சாயந்திரம் அவள் தனது கவனத்தைக் கவர்ந்த ஸ்பானிஷ் மங்கையை ஹோட்டலில் சந்தித்து சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், தன் பையிலிருந்து ஒரு புகைப் படத்தை எடுத்து அவளுக்குக் காட்டினாள். அது காணமல் போன காப்டன் பீடரின் படம்.

"இவர் என் நண்பர். இவருக்கு விமான இலாகாவில் உத்தியோகம். இவர் அடிக்கடி ஸ்பெயினுக்கு வருவதுண்டு. இவரை நீங்கள் பார்த்திருக்கலாம்" என்று கூறி விட்டு ஜூலியா அவளது முகத்தைக் கவனித்தாள்.

டி போர்ஸின் முகத்தில் யாதொரு மாறுதலும் தென்படவில்லை. சிரத்தையற்ற பார்வையுடன் படத்தை நோக்கிவிட்டு அவள் "இவரை நான் பார்த்தது கிடையாது" என்றாள்.

சில தினங்களுக்குப் பின் ஜூலியாவை அந்த ஸ்பானிஷ் மடந்தை சந்தித்தபொழுது பேச்சு உடைகளைப் பற்றியும் பெண்கள் தரிக்கும் போர்வைகளையும் பற்றி எழுந்தது, அப்பொழுது அவள் "நீங்கள் என் வீட்டுக்கு வாருங்கள். என்னி

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1. வி. பி. செலவு அணா 5. ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

பிரகாசம் கம்பெனியாரின் உயர்தரமான அல்லாய் கோல்டு நகைகள்.

சவரன் பொன்னுக்கு ஒப்பான பிரகாசமும், பள பளப்பும் உள்ளது. 5 வருஷம் உத்திரவாதமுள்ளது.



வளையல் ஜோடி 1க்கு ரூ. 3.
கழுத்து சங்கிலி ,, ,, 7.
வங்கி ஒட்டியாணம் (பெரிய சைஸ்) 1க்கு ரூ. 20.
(கேட்லாக் இனம்.)

R. S. பிரகாசம் & கோ., 187, சைனுபஜார் ரோட், ஜி. டி., மதராஸ்.

அதுவும் நல்லது தான், மறுபடியும் நாளை படிக்கலாம் அல்லவா என்று எண்ணலானேன்.

குசாரியினுடைய மனைவி வந்திருப்பதாக ரதன் வந்துதெரிவித்தான். உடனே அவளும் உளளே நுழைந்தாள். நான் கொஞ்சம் சங்கடப்பட்டுப் போய் "அவள் வீட்டில் இல்லை. சாயந்திரம்தான் திரும்பி வருவாள்" என்றேன.

"அது எனக்குத் தெரியும்" என்று சொல்லி விட்டு அவள் ஜன்னலில் இருந்து ஒரு ஆசனத்தை எடுத்து மேஜை அருகில் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

"சாயங்காலம் கூட வரமாட்டாள். இரவுவெகுநேரமானுலும் ஆகும்" என்ருள்.

பெரிய மனிதர் வீட்டுப் பெண்கள் மிகவும் கர்வம் படைத்தவர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் யார் வீட்டிற்கும் போவதில்லை. இவள் கூட அநேகமாக அப்படித்தான் இருந்தாள். அநேகமாக இவ்வளவு நாள் அவளும எங்களுடன் நெருங்கிப்பழக வேண்டும் என்று முற்படவில்லை, இதற்கு முன் ஏதோ ஓர் இரண்டு தடவை தான் வந்திருக்கிருள். எஜமானி வீடாக இருந்தால் ஒரு தரம் தாமாகவே வந்தாள். மற்ருெரு முறைக் கூப்பிட்டனுப்பி வந்தாள். ஆனுல் இன்றேன் வீட்டில் வேருெருவரும் இல்லை என்று தெரிந்தும் ஏன் தானுகவே வந்தாள், என்பது எனக்குத் தெரியவில்லை!

"இப்பொழுதெல்லாம் என் மைத்துனன் மனைவியுடன் தான் ரொம்ப ஆத்மார்த்தம் போலிருக்கிறது" என்ருள்,

அறியாமலேயே அவள் என் மனதில் புண்பட்ட விஷயத்தைக் கிளறிவிட்டாள். இருந்தாலும் நான் மெதுவாக "ஆமாம், அங்கே தான் போயிருப்பாள்" என்றேன்.

"தினமுமா? ஆனுல் அவள்ஒரு நாள்கூட வருவதில்லையே? சுநந்தைக்குத் தகுந்த மனிதர்களுக்கு மரியாதை செய்யவே தெரியாது" என்று சொல்லி அவள் என் முகத்தைப் பார்த்தாள்.

ஆனுல் நானே ஓர் ஆசாமி தினமும் போய்க்கொண்டிருக்கிற விஷயத்தைப்பற்றி கவலைப் பட்டுக் கொண்டிருந்தேனே ஒழிய. மற்ருெர் ஆசாமி வரவில்லையே என்று கவலைப்படவில்லை. ஆகையால் அவளுக்கு என்ன பதில் சொல்லுவது என்றே தெரியவில்லை. ஆனுல் அவள் வந்த காரியம் இன்னது என்று எனக்குக் கொஞ்சம் தெரிய ஆரம்பித்தது. ஆகையால் என்னுடைய பொய் சங்கோசத்தையும் வெட்கத்தையும் விட்டு அவளிடம் உள்ளதைச் சொல்லுவோமா என்று கூட எண்ணினேன். ஆனுல் சொல்லுவதில் என்ன லாபம் என்று எனக்குப் புரியவில்லை. ஆனுல் நான் ஒன்றும் சொல்லாததைக்கண்டு அவள் கண்களில் கோபம் மூண்டதைப் பார்த்தேன். உடனே அவள் எந்தெந்த காலத்தில் யார் யாருக்கு என்னென்ன நேர்ந்தது என்பதை விஸ்தரித்து, தன் மாமனர் வீட்டில் பத்து வருஷகாலமாக நடந்தவற்றைத் தினசரியாக ஒப்பிக்க ஆரம்பித்தாள்.

அவள் பேச ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் நான் வேறெங்கோ மனமுள்ளவனுகிவிட்டேன். அதற்குக் காரணமுமிருந்தது. ஒரே யடியாக தன்னையே ஸ்தோத்திரம் செய்து கொள்வதில், தயை தாக்ஷிண்யம், ஆசை முதலியன வெல்லாம் இந்த மனித ஜன்மத்தில் தன்னிடம் அமைந்திருப்பதைப்பற்றிய நீண்ட விஸ்தரிப்பு—அதே மாதிரி அந்த குணங்களுக்கு நேர் எதிரிடையானவை எப்படி எதிர்கட்சியாரிடம் அமைந்திருக்கின்றன என்பதைப்பற்றிய ஆராய்ச்சி இவ்றறை சொல்லி முடிக்கு முன்பு அவள் நடுவில் கொஞ்சம்கூட நிறுத்தவில்லை. ஆனுல் திடீரென்று ஒரு சமயம குஷாரியினுடைய மனைவியின் குரலில் எதிர்பாராத ஒருமாறுதல் என் காதில் பட்டதும் சட்டென்று என் கனவு கலைந்தது. சிறிது ஆச்சரியமடைந்து "என்ன ஆயிற்று?" என்று நான் அவளைக் கேட்டேன். அவள் சிறிது நேரம் என் முகத்தை ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு பிறகு "ஆவதற்கு இன்னும் என்ன பாக்கி இருக்கிறது பாபு? என்னுடைய மைத்துனன் நேற்று தானே தெருவில் கத்தரிக்காய் விற்றுக் கொண்டு போனராமே; கேள்விப் பட்டேன்" என்ருள்.

அவள் சொன்னதை நம்ப முடியவில்லை. ஆகையால்உடனே கொல்லென்று சிரித்து விட்டு நான் "பாடம் சொல்லிக்கொடுக்கும் மனிதன் அவர், திடீரென்று கத்தரிக்காய் தான் எங்கிருந்து கிடைத்தது—அதை விற்கத் தான் அவர் எதற்காகக் கிளம்புகிருர்" என்றேன்.

"அந்த நாசமாய்ப் போகிறவளுடைய தூண்டுதல் தான். வீட்டில் தான் ஒன்றுமில்லையோ; கொல்லையில் ஏதோ பத்து காய்களிருந்திருக்கின்றன-அதைக் கொடுத்தனுப்பி சந்தையில் போய் விற்கச் சொல்லி இருக்கிருள்—இப்படிச் செய்து அவள் என்னேடு சண்டைக் கிழுத்தால் நான் இந்த ஊரில் எப்படி காலம் தள்ளுகிறது?" என்று குஷாரியின் மனைவி சொன்னுள்.

"ஆமாம், உங்களை சண்டைக் கிழுப்பதாகச் சொல்லுகிறீர்களே அதெப்படி? ஒரு வேளை அவர்கள் வீட்டில் ஒன்றுமில்லாமல் போயிருக்கலாம், ஏதோ இருந்த சாமானை விற்று பணமாக்கப் போயிருக்கிருர். அதனுல் உங்களுக்கென்ன நஷ்டம்?"

நான் சொன்னதைக் கேட்டு அயர்ந்து போனவள் போல அவள் சிறிது நேரம் சும்மா இருந்து விட்டு "அந்த மாதிரி நீங்கள் கேட்டு விட்டால் நான் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. மனிதர்களுக்கு ஒனருலும் நஷ்டம் ஏற்படுவதில்லை. நான் வருகிறேன்" என்ருள்.

கடைசியில் அவள குரல் ஒரே யடியாகக் கம்மிப்போய் விட்டதைக் கவனித்து, நான் மெதுவாக "இதோ பாருங்கள், இந்த சமாசாரத்தை நம்முடைய எஜமானி யம்மாளிடம் சொன்னுல் ஒரு வேளை அவளுக்கு எல்லாம் அர்த்தமாகும். உங்களுக்கு அவள் உபகாரம் செய்யவும் கூடும்" என்றேன்.

அவள் தலையை அசைத்து "இன்னும்யாரிடமும்நான் இதை சொல்லப் போவதில்லை. யாரும் எனக்கு உபகாரமும் செய்ய வேண்டாம்" என்று அவள் தன் தலைப்பை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு "இரண்டு மாதம் போகட்டும்; தானுகத் திரும்பி வருகிருர்கள், என்று என் அகத்துக்காரர் முதலிலெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். அதனுல் தைரியமாக இருந்தேன். அதற்குப் பிறகு எப்படியோ இன்னுமிரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. இப்பொழுது இந்த நப்பாசையால் இரண்டு வருஷங்களும் கழிந்து விட்டன! ஆனுல் நேற்று கத்திரிக்காய் விற்ருர் என்று கேள்விப்பட்டதும் யார் பேச்சும் என் காதில் ஏறவில்லை. நாசமாய்ப் போகிறவள் குடும்பத்தையே குட்டிச்சுவராக்கி விடுவாள்—ஆனுல் இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கமாட்டாள், பாபு, பெண் பிள்ளைகளுக்கு எங்காவது இவ்வளவு கடின சித்தம் இருக்க முடியுமா? இருக்குமென்று நான் கனவில் கூட நினைக்கவில்லை." என்ருள்.

"என் புருஷனுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே தவிர எனக்கு எல்லாம் தெரியும். முதலிலெல்லாம் அவர்களுக்கு இவர்களுக்கு என்று சொல்லி மறைத்து மறைத்து சாமான்கள் அனுப்பிக் கொண்டிருந்தேன். சுநந்தை பகிரங்கமாக அப்படி யெல்லாம் வாங்கிக்கொள்ள மாட்டாள் என்று அவர் சொன்னர். ஆனுல் இப்படிச் செய்வதால் அவர்களுக் கொன்றும் மானக் குறைவு வராது என்ருர். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனுல் என்ன ஆயிற்று தெரியுமோ: நான் கொடுத்தனுப்பிய சாமான் பூராவையும் திருப்பியனுப்பிவிட்டாள். அப்பொழுதும என் அகத்துக்காரருக்கு புத்திவரவில்லை, எனககு வந்துவிட்டது!"

இந்த சமயத்தில் நான் அவளுடைய மனதிலிருந்ததை ஊகித்துவிட்டேன். கருணை நிறைந்த குரலுடன் "இப்பொழுது நீங்கள் என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்? நல்லது, அவர்கள் ஏதாவது உங்களுக்கு விரோதமாக சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக்கிருர்களா?" என்று கேட்டேன்.

அவள் மறுபடியும் விம்ம ஆரம்பித்துதலையில்அடித்துக்கொண்டு "என் தலையெழுத்து; இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஒரு வழியிருக்காதா? அவள் எங்களை விட்டுப் போனதுமட்டுமா, எங்கள் முகாலோபனம்கூட செய்கிறதில்லை—பேரையும் கேட்க விரும்புவதில்லை. இந்தமாதிரி கல்நெஞ்சம் பெண்களுக்கு எங்காவது உண்டா? எங்கள் இரண்டு பேர்கள் மீதும் சுநந்தை பெற்றேர்களுக்கதிகமான பாசமுடையவளாக இருந்தாள். ஆனுல் இந்த சொத்து பாப சொத்து என்று கேள்விப்பட்ட தினம் முதல்தான் அவள் இந்தமாதிரி மாறிவிட்டாள். புருஷனையும், பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போய் நாலு நாளாகப் பட்டினி கிடந்து சாகிருள். அதற்காக என்ன பண்ணுகிறது பாபு, இவ்வளவு பெரிய சொத்தையும் நாங்கள் உதறித் தள்ளிவிட முடியுமா? அவள் வேண்டுமானுல் ஈவு இரக்கமற்றவள். பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போய் சோறு போடாமல் சர்க அடிக்கிருள். பிள்ளைகளை நிர்க்கதியாக்க எங்களால் முடியாது" என்ருள்.

இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லுவதென்று எனக்குப் புரியவில்லை. பெண் பிள்ளைகள் மிகவும் ஆச்சரியமான ப்ரக்ருதிகள் என்று தான் சொன்னேன்.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. குஷாரியினுடைய மனைவி மௌனமாகத் தலையை அசைத்து விடை பெற்றுக் கொண்டு எழுந்தாள். ஆனுல் திடீரென்று இரண்டு கைகளையும் கூப்பி "உண்மையாகச் சொல்லுகிறேன் பாபு, இவர்களுக்கு மத்தியிலிருந்துகொண்டு என்னுல் காலம் கடத்த முடியவில்லை. ஆனுல் இப்பொழுதெல்லாம் என்னவோ, எஜமானியம்மாளுக்கும், அவளுக்கும் ரொம்ப நேசம என்று கேள்விப்படுகிறேன், ஏதாவது ஒரு உபாயம் கண்டுபிடித்தலாகாதா? என்னுல் தாங்க முடிய வில்லையே" என்ருள்.

நான் மௌனமாக இருந்து விட்டேன். அவளாலும் ஒன்றும் பேச முடிய வில்லை. கண்ணீரை வடித்துக்கொண்டே மௌனமாக வெளியே போனுள்.

(தொடரும்)

நரஸஸ் டீ குடியுங்கள்

நறுமணத்திற்கும் பானத்திற்கும் நிகரற்றது

சில டீ இலைகள் சிறந்த மணமுள்ளதாயினும் ருசிப்பதில்லை. மற்றும் சில வாய்க்கு ருசிப்பினும் மணமிருப்பதில்லை. நரஸுவால் பொறுக்கி பதம் செய்யப்படும், டீ சிறந்த மணத்துடன்கூடிய உங்களுக்குகந்த ஓர் உயர்ந்த பானமளிக்கும்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட இடங்களில் கிளை ஆபீசுகள் சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்:— பம்பாய், டெல்லி, ரங்கூன், கொளும்பு.

நரஸஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
பாக்டரிகள்:- சென்னை, சேலம்.
MNTK-12

ஸங்கீத சிந்தாமணி	...	ரூ. 3
திராவிட கானம்	...	ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை		ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனும். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்பிளனேட் :: மதராஸ்

சிறுவர் பகுதி

★

கெடுவான் கேடு நினைப்பான்

★

"ராஜன்"

பனையவரம் என்னும் ஊரில் வரதன் என்ற ஏழைக் குடியானவன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். குடியானவன் கிழவனுகி வேலை செய்ய முடியவில்லை. பிள்ளைகளோ வேலைசெய்யத்தக்க உடல் வலிமை கிடையாது. ஆனுல் குடியானவன் மூத்த குமாரன் முருகன் வேலைத்தேட வெளியே புறப்பட்டான்.

முருகன் 8 மைல் தூரத்திலுள்ள ஓர் நகரத்தை அடைந்தான். ஒரு மந்திரவாதி வீட்டில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று விசாரித்தான். முருகனுக்கு அது மந்திரவாதி வீடு என்று தெரியாது. மந்திரவாதி தான் சொல்லுகிறபடி யெல்லாம் செய்தால் நிறைய பணம் தருவதாகச் சொன்னுன். முருகனும் சம்மதித்தான்.

மந்திரவாதி தான் ஒரு குதிரையிலும், முருகனை ஒரு குதிரையிலுமாக வெகு நேரம் சவாரி செய்து ஒரு

பெரிய மலைச்சாரலுக்கு வந்தான். மலை சுவர் போல் செங்குத்தாகஇருந்தது. பிறகு மந்திரவாதி தன் குதிரையை முருகனிடம் கொடுத்து மலையுச்சிக்குச்சென்று குதிரையில் கட்டப்பட்டிருக்கும் பைகள் நிறைய 'அங்கு காணப்படும் பொன்னை நிரப்பிக் கொண்டுவரும்படி அனுப்பினுன்.

முருகன் மந்திரவாதிக் குதிரைமேல் ஏறி உட்கார்ந்ததும் மலை யுச்சியை யடைந்தான். அங்கு ஒரு பெரிய எலும்புக் குவியலையும், ஒரு பெரிய தங்கக் குவியலையும் கண்டான். பைகளை பொன்னுல் நிரப்பிப் புறப்படப் ஆயத்தமானுன்.

மந்திரவாதி கீழேயிருந்து, குதிரையும் பைகளையும் அனுப்பும்படியும், மறுபடியும் குதிரையை அனுப்புவதாகவும், அப்பொழுது முருகன் தனக்கு வேண்டிய திரவியத்துடன் திரும்பலாமென்றும் சொன்னுன். முருகனும் அப்படியே செய்தான்.

காத்து காத்துப் பார்த்தும் குதிரையைக் காணேம். அப்பொழுது தான் மந்திரவாதி குதிரையுடன் போய்விட்டான் என்று விளங்கிற்று. மலையின் மேலேயே ஏறமுடியவில்லை. இறங்கவும் முடியவில்லை. என்ன செய்வான், பாவம். மந்திரவாதி தன்னிடம் வேலைக்கு வரும் சிறுவர்களை மலையுச்சியிலே விட்டு விடுவது வழக்கம். அவர்கள் உணவின்றிஇறப்பதுவழக்கம்.

முருகனுக்கு பசி தாங்க முடியவில்லை. அங்கு மணிலாப் பயிர் செடி ஒன்றை கண்டான். அதையாவது பிடுங்கி உண்ணலாம் என்று எண்ணி பிடுங்கினுன்: செடியின் கீழ் ஓர் இரும்பு வளையத்தைக்கண்டான். அவ்வளையத்தை ஆச்சரியத்துடன் பிடித்து இழுத்தான். உடனே ஒரு பெரிய இரும்பு கதவு திறந்துகொண்டது. உள்ளே செல்ல படிகள் இருந்தன: முருகன் தைரியமாக உள்ளே சென்ருன். அங்கு அவன் ஒரு பெரிய ராக்ஷஸன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு நடுங்கி விட்டான். ராக்ஷஸன் அவனை அன்புடன் அழைத்து விசாரித்தான். முருகன் தன் வரலாற்றைக் கூறினுன். ராக்ஷஸன் 'குழந்தாய்! நான் ஓர் அரசன். என்னை மந்திரவாதி ராக்ஷஸனுகி நிலவறையில் அடைத்து' விட்டான். என் நாட்டையும் மந்திரசக்தியால் இப்படியாக்கி விட்டான். மந்திரவாதி இறந்தால் தான் நான் சுய ரூபம் அடைவேன். என் நாடும் விடுதலையாகும் என்று கூறினுன். நீ அதற்கு உதவிசெய்ய வேண்டும்." என்று அவன் கூறினுன்.

முருகனும் சம்மதித்தான். ராக்ஷஸன் மகிழ்ந்து 'நீ நாளை வெளியிலிருக்கும் தாமரைக் குளத்தில் குளிக்க வரும் இரு

புருக்களில் வெண்புருவை பிடித்துக்கொள்' என்று கூறினுன்.

முருகனும், மறுநாள், அம்மாதிரியே வெண்புருவைப் பிடிக்க முடியாமல், வலையை வீசி அதை சிக்க வைத்துப் பிடித்தான். அவன் கைப்பட்டதும் புரு ஒரு அழகிய வெண் நிறமுள்ள ராஜகுமாரியாக மாறியது. முருகனும் அவளும் நிலவறைக்குச் சென்றனர். அரசன், தன் பெண்ணை வெண்புருவாக்கியதும் அம்மந்திரவாதியே என்று கூறி, முருகன் செய்த உதவிக்கு வந்தனம் கூறினுன்.

நிற்க, குடியானவன் முருகன் ஒரு வாரம் ஆகியும் திரும்பாதது கண்டு தன் இளைய மைந்தன் மைதிலியை அனுப்பினுன். மைதிலியும் மந்திரவாதியிடம் வேலைக்கமர்ந்தான். மந்திரவாதியும் முருகனை அனுப்பியது போல் மைதிலியையும் மலையுச்சிக்கு அனுப்பினுன். மைதிலி தற்செயலாக தன் அண்ணனை சந்திக்கநேர்ந்தது. இருவரும் மந்திரவாதியின் சூதை உணர்ந்து அவனைக் கொல்ல ஒரு சூழ்ச்சி செய்தனர்.

மைதிலி பைகளில் பொன்னுக்கு பதில் எலும்புகளை நிரப்பி குதிரையை அனுப்பினுன். குதிரை கீழே வந்ததும் மந்திரவாதி பைகளில் பொன்னிருக்கிறதா என்று அவிழ்த்துப் பார்த்தான். அதுதான் சமயமென்று இருவரும் சேர்ந்து ஒரு பெரிய பாறையை மந்திரவாதியின் மேல் தூக்கிப் போட்டனர். மந்திரவாதியின் தலையில் கல் விழுந்ததும் உடனே இறந்தான். இருவரும் ஒரு பெரிய சப்தம்கேட்டுதிரும்பிப் பார்த்தனர். மலை மறைந்து பூமியின் அடியிலிருந்து அரண் மனைகளும், மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் வெளிக்கிளம்பின. சற்றுமுன் பாழாயிருந்த இடம் பெரிய நகரமாய் விட்டது. அரசனும், இளவரசியும் இவர்கள் தீரத்திற்கும் புத்தி வண்மைக்கும் மெச்சி வரவேற்றனர். மற்ருெரு புருவும் ராஜ குமாரியாக மாறியது. அரசன் தன் இரு புத்ரிகளையும், முறையே முருகனுக்கும், மைதிலிக்கும் மணஞ் செய்வித்தான். அவர்களையே தன் வார்சாக நியமித்தான். அவர்களும் தந்தையுடனும் மனைவிகளுடனும் சந்தோஷமாகவாழ்ந்தனர்.

இலவசம்

லண்டன் நியூ கோல்ட் ஏஜன்ஸியை இன்றே பெறுங்கள். மாதம் ரூ 525. சம்பாதியுங்கள். இதன் நிறம், பள பளப்பு மாருது. உரைக்கல்லில் உண்மை தங்கத்தைப் போலிருப்பதுடன் தங்கத்துடன் கலக்கலாம். திறமையான தட்டான்கூட, வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முடியாது. இரண்டு ஜதை காது தொங்கட்டான்கள, 2 ஜதைஅழகிய வளையல்கள, 2 சமீப மோஸ்தர் மோதிரம், 6 தோலா லண்டன் நியூ கோல்ட் சாம்பிளாக அனுப்பப்படும். பூரா காட்லாகும், ஏஜன்ஸி நிபந்தனைகளும் இலவசம்.

LONDON COMMERCIAL CO.,
P. B. 165, LAHORE. (India)
(EAB)

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

I.D.L.71. மாதர்களுக்குகந்த டானிக் | I.D.L.81. சூதக கஷ்டங்களுக்கு டானிக் | I.D.L.91. பிரசவத்திற்குப்பிறகு உதவும் டானிக் | I.D.L.96. கர்ப்பிணிகளுக்கு டானிக்

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P.S.C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடேட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதருஸ்.

துர்ப்புத்தி

மஹாகவி

ரவீந்திரநாத டாகூர்

நான் என் முன்னோர்களின் வீட்டை விட்டு 'வெளியேற நேர்ந்தது. ஏன்? எதனால்? என்று வெளிப்படையாகச் சொல்ல மாட்டேன்—கேவலம் ஒரு சிறு சம்பவத்தைத்தான் சொல்லுவேன்!

நான் நகர சர்க்கார் ஆஸ்பத்திரியின் டாக்டர். போலீஸ் ஸ்டேஷன் எதிரில் என் வீடு. யமராஜனிடம் எனக்கு எவ்வளவு நட்போ அது போல் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமுள்ள சிநேகமும் குறைந்ததாக இல்லை. எப்படி பொன்னினால் கல்லுக்கும், கல்லினால் பொன்னுக்கும் மதிப்பு ஏற்படுகிறதோ, அது போல் என்னால் இன்ஸ்பெக்டருக்கும் இன்ஸ்பெக்டரால் எனக்கும் மதிப்பு அதிகமாகியது.

அதன் காரணமாக எனக்கும் இன்ஸ்பெக்டருக்கும் நட்பு நாளடைவில் அதிகரித்தது. அவருக்குக் கலியாணமாகாத ஒரு பெண் இருந்தாள். அவளை எனக்குக் கலியாணம் செய்து கொடுக்கவேண்டுமென்று பல ஏற்பாடுகளும் செய்து வைத்திருந்தார். ஆனால் என் தாயில்லாக் குழந்தை 'சாவித்திரி'யைக் கலியாணம் செய்து அவளை மாமியார் வீடு சேர்க்காதவரை நான் கலியாணம் செய்துகொள்வது உசிதமில்லை என்று எண்ணியிருந்தேன். வருஷந்தோறும் பஞ்சாங்கத்தில் உள்ள முகூர்த்த நாட்களெல்லாம் கிளம்பி என் வரை வீணாகின. என் கண் முன் நல்லவர்களும் கெட்டவர்களும் கலியாணமாகி கிரஹஸ்தர்களானார்கள்—ஆனால் அவர்கள் கலியாணத்திற்குப் போய் கேவலம் சாப்பாடும் தின்பண்டங்களையும் தின்று பெருமூச்சு விட்டதுதான் தெரியும்.

சாவித்திரிக்கு பன்னிரண்டு வயது கழிந்து பதிமூன்றுவது வயது ஆரம்பமாயிற்று. கொஞ்சம் ரூபாய் சம்பாதித்து சாவித்திரியை நல்ல இடத்தில் கலியாணம் செய்து கொடுத்த பிறகு என் கலியாணத்தைப் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதே சமயம் ஹரி நாத் மஜும்தார் வந்து என் காலடியில் விழுந்து அழுதார்,

இரவு அவருடைய விதவைப் பெண் திடீரென்று இறந்து விட்டாள். அந்தச் சமயத்தை நழுவவிடாமல் அவருடைய விரோதிகள் இன்ஸ்பெக்டருக்கு அநாமதேயக் 'கடிதம் (கையெழுத்தில்லாத கடிதம்) ஒன்றில் விதவை கர்ப்பவதியாக இருந்தாள் என்றும், கருவைக் கரைப்பதற்காக பலவித ஏற்பாடுகள் செய்ததின் பயனாக அவள் உயிருக்கே ஆபத்து வந்தது என்றும் எழுதி அனுப்பி விட்டார்கள். அதனால் ஹரி நாத்தின் வீட்டை போலீஸ் அதிகாரிகள் சூழ்ந்து கொண்டு விட்டார்களாம். மேலும் விதவைப் பெண்ணின் ஈமச்சடங்குகள் செய்ய பிரேதத்தை அனுமதிக்க வில்லையாம்—இது தான் அவரது விருத்தாந்தம் என்று அவர் அழுதுகொண்டு சொன்னதில் தெரிய வந்தது.

என் பெண்ணைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் சமயம் இது ஒரு கலவரம்! அநாதைக் கிழவன் சஞ்சலத்துடன் எழுந்து நின்றான். பிறகு "நீங்கள் டாக்டர். மேலும் இன்ஸ்பெக்டர் அவர்களுடைய சிநேகிதர். எப்படி யாவது என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்றான்.

தனலக்ஷ்மியின் லீலாவிநோதம் அதிக விசித்திரமானது. எப்பொழுது அவள் விரும்புகிறாளோ அப்பொழுது நாம் கூப்பிடாமலேயே வந்து விடுவாள்!

நான் தலையை அசைத்து "விஷயம் மிகவும் சிக்கலானது" என்று சொல்லி என் காரியம் முடிவதற்காகச் சிலவற்றையும் சொன்னேன்.

கிழவன் திடுக்கிட்டு குழந்தை போல் விக்கி விக்கி அழுதான். கடைசியாக காரியம் முடிந்து விட்டது. அவருடைய பெண்ணை தகனக்கிரியைச் செய்ய அனுமதி கிடைத்து விட்டது. ஆனால் கிழ ஹரிநாத் அதனால் ஆண்டியாகி விட்டான்!

அன்று மாலை சாவித்திரி என் அருகில் வந்து கருணை நிறைந்த குரலில் "அப்பா. இன்று அந்தக் கிழ பிராமணன் உங்கள் காலைப் பிடித்துக் கொண்டு ஏன் அழுதான்?" என்று கேட்டாள்.

நான் என் செயலை மறைத்துக் கொண்டு சற்று கோபக் குரலில் "உனக்கு ஏன் இந்த விஷயங்களெல்லாம்! போ உன் வேலையைப் பார்!" என்றேன்.

கிழவனுடைய பெண் இறந்ததின் காரணமாக சாவித்திரியினுடைய கலியாணத்திற்கு வேண்டியவைகளெல்லாம் கிட்டின. தனலக்ஷ்மி நல்ல சமயத்தில் என்னிடம் வந்தாள். விவாகமும் நிச்சயமாயிற்று. தினமும் குறிப்பிட்டாயிற்று. எனக்கு ஒரே பெண்ணானதினால் எல்லா வைபவங்களும் மேலும் அதிகமாகச் செய்ய ஏற்பாடு ஆகியிருந்தது. வீட்டில் வேறு பெண்கள் இல்லாததினால் ஒத்தாசைக்கு அண்டை வீட்டுக்குக் காரர்களையும் பெண்களை கூப்பிட வேண்டியதாயிற்று. ஹரிநாத் என்னால் சொத்து எல்லாவற்றையும் ஒழித்தும் எனக்கு ஒத்தாசை செய்ய சிறிதும் மனம் கலங்காது வந்திருந்தார்.

விவாகமும் பூர்த்தியாக நடக்கவில்லை. நலங்கு நடக்கும் தினத்தன்று இரவு மூன்று மணிக்கு சாவித்திரிக்கு காலரா கண்டது. எவ்வளவோ வைத்தியங்களெல்லாம் செய்து பார்த்தேன்–ஒன்றும் பயன்படவில்லை. விலை உயர்ந்த மருந்து புட்டிகளைக் கீழே எறிந்து ஹரிநாத் இருக்குமிடத்திற்குப் போய் அவர் காலடியில் விழுந்து "பாபு, என்னை மன்னித்து விடுங்கள். சாவித்திரி எனது ஒரே பெண். வாழ்க்கையில் அவளைத் தவிர எனக்கு வேறு உற்றார் உறவினரே கிடையாது" என்றேன்,

ஹரிநாத்திற்கு என் கலவரச் சொற்கள் எதுவும் அர்த்தமாகவில்லை. அவர் திடுக்கிட்டு "டாக்டர் பாபு, இது என்ன? நான் தங்களுடைய உபகாரத்தை நாடி வந்திருக்கிறேன். என் காலைத் தொடாதீர்கள்" என்று சொல்லிச் சற்று விலகி நின்றார்.

"பாபு நீங்கள் நிரபராதி. அப்படியிருந்தும் உங்களை ஓட்டாண்டி ஆக்கிவிட்டேன். அதன் பலனாக என் பெண் சாவித்திரி சாகக்கிடக்கிறாள்!" என்று சொல்லி நான் மேலும் எல்லோர் எதிரிலும் பெருத்த குரலில் "சகோதரர்களே, நான் பணத்தாசையால் இந்தக் கிழ ஹரிநாதரின் பணத்தையெல்லாம் அநியாயமாகக் கொள்ளையடித்தேன் — சமயத்தை நழுவ விடாமல் என்னிடம் அவர் அகப்பட்டதும் ஓட்டாண்டியாக்கிவிட்டேன். இப்பொழுது அதன்பலனை அனுபவிக்கிறேன். பகவான் என் சாவித்திரியைக் காப்பாற்றட்டும். பிறகு..." என்று சொல்லி ஹரிநாதருடைய செருப்பை எடுத்து என் தலையில் 'பட் பட்' என்று அடித்துக்கொண்டேன். கிழ ஹரிநாத் பயந்து என் கையிலிருந்த செருப்பைப் பிடுங்கிக்கொண்டார்,

மொழி பெயர்த்தவர்
வி. எஸ். வெங்கடேசன்

மறு நாள் பத்துமணிக்கெல்லாம் என் கண்மணி சாவித்திரி, இந்த உலகத்தைவிட்டு வேறு உலகத்தில் வாசம் செய்ய, என்னைத் தன்னந்தனியாக விட்டு விட்டுப் போய்விட்டாள்.

அதற்கு மறுதினமே இன்ஸ்பெக்டர் என்னிடம், "டாக்டர் பாபு, என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறீர்கள்? வீட்டில் வேலைகளைச் செய்ய ஒரு ஆள் தேவையாக இருக்கிறதல்லவா: திரும்பவும் ஏன் கலியாணம் செய்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

வருத்தமடைந்திருக்கும் மனிதனிடம் இம்மாதிரியான பேச்சுகளைப் பேய் பிசாசுகள் கூடச் சொல்ல மாட்டாது. இன்ஸ்பெக்டருக்கு சில வார்த்தைகள் அதற்காகச்சொல்லலாம் என்று நினைத்தேன்; ஆனால் ஒவ்வொரு சமயத்திலும், நான் அவர் எதிரில் எந்த விதமான பாவமுடைய மனிதனாக நட்பு கொண்டிருந்தேனோ அது என் மனதில் தோன்றி என்னைப் பதில் சொல்ல முடியாமல் செய்து விட்டது. இன்ஸ்பெக்டருடைய நட்பு என்னை சாட்டை கொண்டு அடித்து விலக்குவது போல் தோன்றிற்று!

மனதில் எவ்வளவு கஷ்டம் தான் ஏற்படட்டும்—எவ்வளவு துன்பம்தான் வரட்டும்—ஆனால் வாழ்க்கையின் காலச் சக்ரம் சுழன்று கொண்டு தான் இருக்கிறது. வாழ்க்கையின் நாட்கள் வீணாவதில்லை. பசி எடுப்பதற்காகச் சாப்பாடு, மானத்திற்காகத் துணி, மற்றும் சில தள்ள முடியாதவைகளுக்காக அவைகளும், தினம் வேலை செய்து சம்பாதிக்காமலும் இருக்க முடியவில்லை.

நான் வேலையிலிருந்து திரும்பி வந்து தன்னந் தனியாக இருக்கும் பொழுதெல்லாம், நடு நடுவே அந்த கருணை நிறைந்த குரல் என் காதருகில் வந்து "அப்பா, அந்தக் கிழவன் உங்கள் காலைப் பிடித்துக் கொண்டு ஏன் அழுதான்?" என்று கேட்பது போல் இருக்கும். மேலும் அச்சமயம் என் மனதில் ஈட்டி கொண்டு குத்துவது போல் தோன்றும்.

ஹரிநாத்தின் பாழடைந்த வீட்டை என் செலவிலேயே கட்டிக் கொடுத்தேன். பால் கறக்கக் கூடிய பசு ஒன்று வாங்கிக் கொடுத்தேன். அவர் நிலங்களை அடமானம் வைத்திருந்த இடத்திலிருந்து மீட்டுக் கொடுத்தேன்.

நான் என் பெண் சாவித்திரி இறந்துவிட்ட கவலையில் இரவு வேளைகளில் சில சமயம் கலவரமடைந்து எழுந்து உட்கார்ந்து விடுவேன். அந்தச் சமயம் என் கண்மணி சாவித்திரி என்னை வாழ்க்கையில் தன்னந் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டாள், அவளுக்கு அவளுடைய தகப்பன் செய்த அநியாய அக்கிரமச் செயல்கள் மேல் உலகத்திலும் மறக்காது—அவள் அதே நினைவாக இங்கேயே சுற்றி அலைந்து கொண்டிருக்கிறாள். என்ற நினைப்புத்தான் வரும்! அப்பா நீ என்ன காரியம் செய்தாய்?" என்று கேட்பதுபோலும் தோன்றும்.

ஏழைகளுக்கு வியாதி ஏற்பட்டு அவர்களுக்கு வைத்தியம்

பட்டாம தாணுப்பிள்ளைக்கு சமீபத்தில் டில்லயில் ஒரு விருந்து உபசாரம் நடத்திவைக்கப் பட்டது. அதில் பண்டித ஜவஹர்லால் நேருவும் கலந்து கொண்டார்.

செய்து மூன்மாதிரி ஏமாற்றிப் பணம் பறிப்பது அதன் பிறகு முடியாமல் போய்விட்டது. கிராமத்தில் யாராவது பெண்ணுக்கு ஏதாவது உடம்பு சௌக்யமில்லை என்றால், என் சாவித்திரிதான் அப்படி கிராமத்தையே ஆட்டி வைக்கிறாள் என்று நினைப்பேன்.

ஒரு அடை மழை பெய்தது. இரவெல்லாம் பெய்தும் உதயத்திலும் விட்டபாடில்லை. எங்கும் தண்ணீர் தேங்கிவிட்டது. வீட்டை விட்டு வெளியே போக படகு தேவையாக இருந்தது.

அன்று நில வரி வசூல் செய்பவரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. படகுக்காரர்கள் என்னைத் துரிதப்படுத்தினார்கள். நான்தான் தாமதம் செய்து கொண்டிருந்தேன்.

முன்பு எப்பொழுதாகிலும் அம்மாதிரி சமயங்களில் வெளியே போக நேரிட்டால், சாவித்திரி என் குடையைப் பிரித்து அது ஏதாகிலும் கிழிந்திருக்கிறதா என்று பார்ப்பாள். மேலும் மெதுவாக, 'அப்பா, காற்று மிகவும் அதிகமாகயிருக்கிறது. தண்ணீர்கூட தேங்கிக் கிடக்கிறது. இம்மாதிரி அலைந்தால் உடம்பு கெட்டுவிடும்' என்று சொல்வாள். அன்று நான் தன்னம் தனியாக நடைபிணத்தைப்போல குடையை நானே தேடும்பொழுது அவளுடைய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. சாவித்திரியின் அறையின் பக்கம் பார்த்த பொழுது எவன் ஒருவன் மற்றவர்களுடைய கஷ்டத்தைக் கண்டு அலட்சியம் செய்கிறானோ அவன் வீட்டில் பகவான் சாவித்திரியைப் போல தன்மையுள்ள பெண்ணை எப்படி வைப்பான்?' என்று நினைத்தேன். அம்மாதிரி யோசிக்கும் சமயம் என் ஹிருதயமே வெடித்து விடும்போல் இருந்தது. அதே சமயம் நிலவரிக்காரருடைய வேலைக்காரன் கூப்பாடு சப்தம் கேட்டது. நான் எவ்விதமாகவோ என் மனதைத் தேற்றிக் கொண்டு ஒரு வழியாக வீட்டை விட்டு வெளிக் கிளம்பினேன்.

படகில் ஏறும் சமயம் போலீஸ் ஸ்டேஷன் படிக்கட்டின் பக்கம் பார்த்தேன். அங்கு குடியானவன் ஒருவன் கோவணத்துடன் தண்ணீரில் நனைந்து கொண்டு உட்கார்ந்திருந்தான், அவன். அருகில் சிறு படகொன்று கட்டப்பட்டிருந்தது. "ஏண்டா, ஏன் தண்ணீரில் நனைந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன். அவன் சொன்னதிலிருந்து இரவு அவன் பெண்ணைப் பாம்பு கடித்ததென்றும், அதற்காக போலீஸில் ரிபோர்ட் எழுதுவதற்காக கூட்டிக் கொண்டு வந்தார்கள் என்றும் தெரிய வந்தது. அவன் உடுத்தியிருந்த ஒரே வேஷ்டியை அவன் பெண்ணின் சவத்தின் மீது போர்த்தியிருந்ததைப் பார்த்தேன். என மனமே நிலை தடுமாறி விட்டது. அதே சமயம் நான் ஏறியிருந்த படகையும் அவிழ்த்து விட்டார்கள்,

பகல் ஒரு மணிக்குத் திரும்பி வந்தேன். அப்பொழுதும் அந்தக் குடியானவன் இரு கைகளாலும் முழங்காலைக் கட்டிக் கொண்டு தண்ணீரில் நனைந்த வண்ணமே உட்கார்ந்திருந்தான். இன்ஸ்பெக்டர் துரை அவர்களுடைய பேட்டி அப்பொழுதும் அவனுக்குக் கிடைக்கவில்லை. நான் வீட்டிற்குப் போய் சமயல் செய்து அவனுக்காக ஒருவனிடம் சாப்பாடு கொடுத்தனுப்பினேன்; ஆனால் அவன் அதைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

சட்டென்று சாப்பாட்டை முடித்துக்கொண்டு நிலவரிக்காரர் வீட்டில் உள்ள வியாதியஸ்தனைப் பார்க்கத் திரும்பவும் கிளம்பினேன். மாலை திரும்பி வந்து பார்த்த பொழுதும் அந்தக் குடியானவன் முன் போலவே உட்கார்ந்திருந்தான்—அவனுடைய நிலைமை மிகவும் மோசமாகயிருந்தது. அவன் வாயினால் எதுவும் சொல்ல முடியாமல் என் முகத்தையே பார்க்கலானான். அந்தச் சமயம் கிராமம், நதி, ஆகாயம். வீடு—எல்லாம் அவனுக்கு ஸ்வப்னமாகவே இருந்தன. பலமுறை விடாமல் கேட்டதின் பலனாக போலீஸ் சிப்பந்திகள் அவனிடம் வந்து 'உன்னிடம் ஏதாவது பணமிருக்கிறதா?' என்று கேட்டதாகவும் அவன் 'நான் மிகவும் ஏழை. என்னிடம் தம்பிடி காசுமில்லை' என்று சொன்னதாகவும், போலீஸ்காரர்கள், 'அப்படியானால் ஒன்றும் செய்ய முடியாது. இப்படியே விழுந்து கிட' என்று சொல்லி விட்டுப் போனதாகவும் தெரியவந்தது.

நான் இதைப் போல சம்பவங்களைப் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனால் அச்சமயங்களில் என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் அன்று அந்தக் குடியானவனுடைய செயலைக் கண்டு என்னால் அம்மாதிரி மௌனமாக யிருக்க முடியவில்லை—என் மனம் வேறு விதமாக மாறியது. சாவித்திரியின் கருணை நிறைந்த குரல் என் காதில் வந்து மோதிக்கொண்டிருந்தது. அவளுடைய துக்கம் நிறைந்த சொல் என் மனதில் அம்பு போல் பாய்ந்து என்னைத் தடுமாரச் செய்தது.

இன்ஸ்பெக்டர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ஆனந்தமாக 'ஹுக்கா' பிடித்துக் கொண்டிருந்தார். அவருடைய பழைய உறவினர் அவர் அருகில் உட்கார்ந்து, என் கலியாண சம்பந்தமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தார், அவர் பெண்ணுடன் எனக்குக் கலியாணம் செய்து வைத்துவிடவே அந்த யோசனை. நான் தடதடவென்று அங்கு போய் இன்ஸ்பெக்டரைப் பார்த்து உரத்த குரலில் "நீர் 'மனிதனா, அல்லது ராக்ஷஸனா?" என்று கேட்டுக்கொண்டே அன்று சம்பாதித்த பணத்தையெல்லாம் அவர்முன் எறிந்து "பணம் வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்கள்—செத்த பிறகு இதையும்கூட எடுத்துக் கொண்டு போக வேண்டும்! ஆனால் அந்த ஏழைக் குடியானவனுக்கு விடுதலை அளிக்க வேண்டும். அவன் அவனுடைய பெண்ணை அடக்கம் செய்ய வேண்டும்" என்றேன்.

இன்ஸ்பெக்டருடைய நண்பர்கள், பல ஏழைகளுடைய கண்ணீரால் சம்பாதித்தவைகளைக் கொண்டு ஆனந்தமாக இருந்தார்கள். ஆனால் அன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு அவர்களுடைய சம்பாதனை மண்ணோடு மண்ணாகி மடிந்துவிட்டது.

அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு நான் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் மன்னிப்புக் கோரினேன். அவருடைய எல்லையற்ற அன்பின் முன், என்முன் கோபத்தனத்தைப்பற்றி நான் வருத்தப்பட்டேன், ஆனால் கடைசியாக என் முன்னோர்களுடைய வீட்டை விட்டுவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று!

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1 வி. பி. செலவு அணு 5. ஜனனகாலு விவரம் or எழுதும நேரம. சுமார் வயது தேவை.

ஹநுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

பாஹி பாஹி தீனபந்தோ! மாம்
பாஹி பரமானந்த ஸிந்தோ!

சரணம்

1. தாரக ஸுர வைரி வினுத! ராம!
தாரக சுப கர சரித!

2. ப்ரஹ்ம ருத்ராதி ஸபேசா! பிர்
ஸிம்மாஸன ஜீதபேச!

3. சக்ராரி ஜனக ஸம்ஹரண! சங்க
சக்ராதி சக்ரதராச்ரித சரண!

4. ராகவான்வய ஸுப்ரதிப! ஸுக–
ராகவன குடார ரூப!

5. சரசர! ஜகதாதார! அகிலா–
சரசர! தசரத குமார!

6. குவலய தள ஸம நேத்ர! பாலித
குவலய! தளித மித்ர!

7. கமல ஹித குல ஜனித ராம!
கமலாஹித தர வினுத!

8. த்யாகராஜ நுத! சரணநி–
த்யாக ஹர! வர ஸுகுண!

II

தீனபந்தோ! —எளிய ஜனங்களுக்கு உறவினன் போன்றவனே!
பரமானந்த சிந்தோ! —ஆனந்த சமுத்திரனே!
மாம்பாஹி —என்னைக் காப்பாற்று
தாரகஸுரவைரி —தாரகாசுரனை வென்ற முருகக்கடவுளால்
வினுத! —துதிக்கப்பட்டவனே!
ராமதாரக சுபகரசரித! —'ராமா' என்ற தாரக மந்திரத்தைப் பெயராக உடையவனும் மங்களமான சரிதத்தையுடையவனுமான ஸ்ரீராமா!

மாம் பாஹி —என்னைக் காப்பாற்று.
ப்ருஹமருத்ரஆதி ஸபேசா! —ப்ருஹ்மதேவன் பரமசிவன் முதலானவர்களால் நிறைந்துள்ள சபைக்கு எஜமானனாக விளங்குபவனே!

ஹரிபி: —பக்தர்களான வானரர்களால் சூழப்பட்டு
ஸிஹ்மாஸன ஜீதபேச! —அயோத்தியாபுரியில் ரத்ன ஸிம்மாசனத்தில் கொலு வீற்று விளங்கிய ஈசனே!

சக்ரஅரிஜனக —இந்திரஜித்தின் தகப்பனை ராவணனை
ஸம்ஹரண! —ஸம்ஹரித்தவனே!
சங்கசக்ராதி —சங்கம் சக்ரம் முதலான
சக்ரதர! —பஞ்சாயுதங்களை தரித்து விளங்கும் பரம்பொருளே!

ஆச்ரித சரண! —பக்தர்களால் சரணமடையப்பட்ட திருவடிகளையுடையவனே!

ராகவ அன்வய ஸுப்ரதீப —ரகு குலத்தில் மேன்மையாக விளங்குபவனே!
ஸுகர! —சௌக்யத்தைக் கொடுப்பவனே!
அகவன குடாரரூப —பாபங்களாகிற மரங்களடங்கிய வனத்திற்குக் கோடரி போன்றவனே!

சரசர —துரும்பை பாணமாகப் பிரயோகித்தவனே!
ஜகத் ஆதார —ஸகல உலகங்களுக்கும் மூல காரணமாய் உள்ளவனே!

அகில ஆசரசர —அனைத்துயிர்களிலும் சஞ்சரித்து விளங்குபவனே
தசரதகுமார! —தசரத சக்கிரவர்த்தியின் மைந்தனே!
குவலய தளஸமநேத்ர! —குருக்கத்தி புஷ்பம் போன்ற அழகிய கண்களையுடையவனே.

பாலித குவலய! —கஜேந்திரனை ரக்ஷித்தவனே!
மித்ர தளித! —ஸ்நேகம் கொண்டு விளங்கிய ஸுக்ரீவன் முதலானவர்களோடு சேர்ந்து விளங்கி ஸந்தோஷம் கொண்டவனே!

கமலஹித குல ஜனிதராம! —ஸூர்ய வம்சத்தில் உதித்த ஸ்ரீராமா!
கமலாஹித தரவினுத —சந்திரனைத் தலையிலணிந்த பரமசிவனால் துதிக்கப்பட்டவனே!

த்யாகராஜநுத! —த்யாகராஜனால் துதிக்கப்பட்டவனே!
சரணநித்திய அக ஹர! —சரணமடைந்தோரின் ஸமஸ்த பாபங்களையும் போக்குபவனே!

வர ஸுகுண! —சிரேஷ்டமான குண விசேஷங்களையுடையவனே!

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்க, தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

ஜம்மியின்
லிவர்க்யூர் மூலம்
புனர்ஜன்மம்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்
மற்றும்: பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

III

இது திவ்யநாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்றாகும். இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் ஸ்ரீராமனுடைய மஹிமைகளை வர்ணித்துத்துதித்து தன்னை ரக்ஷித்தருளுமாறு பிரார்த்திக்கிறார்.

ப்ரும்ம ருத்ராதி:—ஸ்ரீராமன் பட்டாபிஷேக கோலத்தில் காக்ஷியருளிய வைபவத்தை வர்ணிக்கிறார்.

சரசர:—'சரசர ஸமரைக சூர' என்ற கீர்தத்னத்திலும் இதே பதப்ரயோகத்தைக் காணவும்

அகிலா சரசர!

த்வயிமயி சான்யத்ரைகோ விஷ்ணுர்–
வ்யர்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: |
பவஸமசித்தஸ் ஸர்வத்ர த்வம்
வாஞ்சஸ்யசிராத் யதி விஷ்ணுத்வம்||

என்ற ச்லோகத்தில் இவ்வுண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது

கமல ஹித:—தாமரை ஸூர்யனைக் கண்டு மலரும். சந்திரனைக் கண்டு மலராது. இதையே வேறு முறையில் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

IV

ராகம் ஸௌராஷ்டிரம் ஜம்ப தாளம்

17-வது மேள ஜன்யம் ஆ. ஸரி கமப (ம) தா நிஸா.
அவ. ஸநிதபம க மாகரிஸா.

பல்லவி

பா ப பா ம கமாக	ரிஸ கமதப	தா	தா	நீ
பா ஹி பாஹி தீ . .	. ன பங் . .	தோ	மா ம்	.
ஸ்நிதா பபப பதநித	பம கரிரி பம	கமாக	ரீ	ஸா
பா . . ஹிபர மா . . .	னந் . த . . ஸிங்	தோ . .	.	.

சரணம்

தா நீ ஸ்ஸ் ரிஸ்	க்ாரி ஸ்ரிஸ்	ஸ்நிதா	நீ	ஸ்ா
தா . ரக ஸுர	வைரி வினுத	ரா . .	.	ம
தநி ஸ்ரிஸா ஸ்நிதா	பப கம தநிதப	கரி	ஸரி கம	பத பம
	நி . . .	. .	. . . .	. . . .
தா . ர . க . சு . ப	கரச . பமகம			
	த . . .			

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினர்.)

இந்தியா கவர்ன்மேண்டில் வைத்திய பட்டமும் ஸன்னதும் பெற்ற
வைத்தியரத்ன பண்டிட்
யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical Dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, கீல்பிடிப்பு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஸித்த மகரத்வஜம்

தங்கம் சேர்ந்த தாதுபுஷ்டி நர்வைன் டானிக். 30 மாத்திரைகள் சீசா 1-க்கு ரூ. 5. வி. பி. வேறு.

ஆனந்த படை நிவாரணி

இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பிவராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணா 12. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

அழகு, ஆரோக்யம், ருசி, ஸுவாஸனை இவைகளை அளிக்கும், உயர்த்தர பற்பொடி இது ஒன்றுதான். எங்கும்கிடைக்கும், கேட்லாக் இனம்.

வைத்திய ஸித்தாச்ரமம்,
25-B. யதோத்காரி கீழ மாடவீதி,
சின்ன காஞ்சீவரம்.

★

லார்ட் பீவர்ப்ரூக் புறப்பாடு

எச். எம். எஸ். "ட்யூக் அப் யார்க்" என்ற கப்பலில் அமெரிக்காவுக்கு லார்ட் பீவர்ப்ரூக் புறப்பட்டுச் சென்றார். இந்தக் கப்பலில் தான் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலும் சென்றார். பிரயாணத்தின் போது கப்பல் பீரங்கி ஒன்று சுட்டது. ஆகவே பீவர்ப்ரூக் சப்தம் தாங்காமல் காதைபொத்திக் கொள்கிறார்.

★

சித்திரமும் சிருங்காரமும்

"டாம், டிக், அண்ட் ஹாரி" — ஜிஞ்ஜர் ரோஜர்ஸ் நடிக்கும் படம் — ஹாஸ்யமும் வேடிக்கையும் நிரம்பியது — "ஓயில்ட் கீஸ் காலிங்" — மற்றொரு உயர்தர படம் — ஹென்ரி பாண்டாவும் ஜோன் பென்னட்டும் பிரதான நடிகர்கள் — ஜோன் பென்னட்டைப் பற்றிய சில குறிப்புகள் — அவர் வாழ்க்கையை நடத்தும் விதம்— தினசரி கவனிக்கும் அலுவல்கள் — ஆணியும் காதலும் — படப் பிடிப்பு நடுவில் நிறுத்தப்பட்டது — ஒரு சிறு சம்பவம்

"டாம், டிக் அண்ட் ஹாரி"

இம் மாதம் 2-ம் தேதி முதல் நியூ எல்பின்ஸ்டனில் ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியின் "டாம் டிக் அண்ட் ஹாரி" என்ற படம் காட்டப்படும்.

கதையின் சாரம் :— ஜேனி (ஜிஞ்ஜர் ரோஜர்ஸ்) என்பவள் ஒரு கம்பெனியில் டெலிபோன் குமாஸ்தா வேலை பார்ப்பவள். ஒரு பணக்காரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்பது அவளுடைய ஆசை.

இதற்கு முன்பு மூன்று வருஷங்களாக அவளுடன் நெருங்கிப் பழகி வரும் டாம் (ஜார்ஜ் மர்பி) அவள் கொண்டிருக்கும் இந்த எண்ணத்தை மாற்ற முயற்சிக்கிறான். கடைசியில் ஜேனி டாமின் வேண்டுகோளை ஒப்புக்கொண்டு அவனை மணக்க சம்மதிக்கிறாள்.

ஆனால் ஜேனிக்கு நிலைமை என்ன என்பது தெளிவாக இல்லை. அவளுக்குப் பலவித யோசனைகள் தோன்றுகின்றன, இரவில் படுக்கப் போகும்போது தானும் டாமும் எத்தகைய வாழ்க்கையை நடத்துவது, எவ்விதம் நடந்து கொள்வது என்பதைப் பற்றிய சிந்தனை தான்: அவளுக்கு புது வாழ்க்கையில் அதிருப்தி தட்டும் என்ற அவநம்பிக்கை உதயமாகாவிட்டாலும், எதோ ஒருவித சம்சயம் மட்டும் மனதில் இருந்து வருகிறது. அந்த நகரத்தில் இருந்த கொழுத்த பணக்காரன் பிள்ளையான டிக் (ஆலன் மார்ஷல்) என்பவனைச் சந்தித்து, அவனுடன் அவனது மோட்டார் காரில் உல்லாஸமாகச் சுற்றி அலைய வேண்டும் என்பது அவளுடைய ஆவல்.

அவள் எதிர்பார்த்த சந்தர்ப்பம் ஒரு நாள் வாய்க்கிறது. ரஸ்தாவில் அவள் விரும்பிய மோட்டார்கார் போய்க்கொண்டிருக்கும்போது அந்த மோட்டார்கார் நிறுத்தப்படுகிறது. மோட்டார் நின்ற இடத்தில் ஜேனியும் நின்றுகொண்டிருந்தாள். அது நின்றது தான் தாமதம், அவள் உடனே மோட்டாரில் ஏறிக்கொள்கிறாள். அவள் இவ்வளவு தைரியமாக உள்ளே ஏறி உட்கார்ந்து கொண்டது அந்த யுவனைப் பிரமிக்கச் செய்கிறது.

ருஷ்யாவின் வீர ஸ்திரி

யுத்த காலத்தில் தைரியமாக சேவை செய்த ராணுவ டாக்டரான வீராவாஸிலிங்கு பொல்ஷோவா என்ற மாது "சிகப்பு நக்ஷத்திர பதக்கம்" வழங்கப்பட்டார்

மோட்டாரில் இருந்த யுவன் டிக் அல்ல என்பதும் அவன் மோட்டார் கம்பெனியில் வேலைபுரியும் ஹாரி என்பதும் பின்பு தான் அவளுக்குத் தெரிய வருகிறது. அன்று ஹாரி மோட்டாரை டிக் வீட்டில் ஒப்படைக்கப் போய்க்கொண்டிருந்தான். அன்று மாலை, அவள் ஹாரியுடன் காலத்தைக் கழிக்கிறாள்: ஹாரி சேகரித்துவைத்திருந்த

ஜோன் பென்னட்

20-ம் செஞ்சுரி பாக்ஸ் படங்களில் நடிக்கும் இந்த பிரபல நடிகையைப் பற்றிய சில குறிப்புகள் வேறு ஒரு பக்கத்தில் காணலாம்.

சொற்ப தொகையும் அவளுடைய சகவாசத்தினால் செலவாகிறது. ஆனால் அன்றிரவு முடிவதற்குள் அவ்விருவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்படுகிறது. ஹாரியை மணக்க ஜேனி இணங்குகிறாள்.

மறுபடியும் ஜேனிக்கு யோசனைகள் ஆரம்பித்துவிடுகின்றன. படுத்துறங்கப் போனாலும் ஹாரியுடன் தான் நடத்தவிருக்கும் தாம்பத்ய வாழ்க்கையைப்பற்றியேதான் அவளுக்குச் சிந்தனை: அதிக சந்தோஷத்தையே அவள் எதிர்பார்க்கிறாள் ஆனால் தெளிவு காணவில்லை. டாமை மணப்பதாக ஜேனி குறிப்பிட்ட தினம் மறுநாள் இரவு என்பது ஹாரிக்குத் தெரியும்: ஆகவே அவன் டாமி எப்படி இருக்கிறான், அவன் தோற்றம் எம்மாதிரி ஆகிய வற்றை அறியப் புறப்படுகிறான், டாம் அன்று மாலை தன் மோட்டார்கார் மூலம் தான் சில ஆச்சரியகரமான காட்சி நடத்தப்போவதாகவும், அவற்றைப் பார்க்க ஒரு சிநேகிதியைத் தன்னுடன் அழைத்துவரும்படி ஹாரியை வற்புறுத்துகிறான்.

இது காரணமாக குறிப்பிட்ட தினத்தில் டாம் ஜேனியை சந்திக்க முடியவில்லை. அன்று மாலை அந்த மோட்டார் வேடிக்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்கு ஹாரி தன்னுடன் ஜேனியையும் அழைத்துக்கொண்டுபோகிறான். இதன் மர்மம் ஒன்றும் ஜேனிக்குத் தெரியாது. இவ்விருவரைப் பார்த்ததும் டாமுக்கு அடக்க முடியாத கோபம் வருகிறது. இருவரையும் தனது மோட்டார் காரில் ஏற்றிக்கொண்டு போய் ஏதோ ஒரு கிராமப்புறத்தில் விட்டுவிட்டு வந்து விடுகிறான். இருவரும் நடந்து வரத் தயாராகின்றனர். அந்தச் சமயம் அங்கு டிக் தனது மோட்டார்காரில் வந்து சேருகிறான்: இருவரையும் தனது வண்டியில் அவன் ஏற்றிக் கொள்கிறான், ஜேனி இவ்வளவு காலமாக ஆவலுடன் எதிர்பார்த்து வந்த சந்தர்ப்பம் சித்திக்கிறது.

மறுநாள் டிக் ஜேனியுடன் தனக்குத் சொந்தமான விமானத்தில் சிகாகோவுக்குப் போகின்றனர். காரணம் உல்லாஸமாக ஓர் இரவைக் கழிக்க வேண்டுமென்பதே. திரும்பி வரும்போது ஜேனி டிக்கிடம் மிகவும் உறவாடி அவனது காதலைச் சம்பாதிக்கிறாள். அதற்கு ஜேனி தான் இணங்குவதாகவும் தெரிவித்துவிடுகிறாள். ஒரே சமயத்தில் மூவரை மணக்க ஜேனி ஒப்புக்கொண்டு விடுகிறாள்!

அட்டைப் படம்

பிரபல தமிழ் நாட்டு நடிகையான ஸ்ரீமதி கே. எல். வி. வஸந்தா.

மனதிற்குகந்த மணாளன்

ஆலன் மார்ஷலும் ஜிஞ்ஜர் ரோஜர்ஸும் ("டாம் டிக் அன்ட் ஹாரி") என்ற படத்தில் ஒரு காட்சி.

ஊர் திரும்பியதும், அவர்கள் டாமும் ஹாரியும் காத்துக் கொண்டிருப்பதைக் காண்கின்றனர். அப்போது ஜேனி தனது மூன்றுவது புருஷனையும் காதலிப்பதாகக் கூறிவிட்டு மறு நாள் காலை போஜன சமயத்தில் தனது முடிவை வெளியிடப்போவதாகவும் தெரிவிக்கிறாள்.

அன்றிரவு முழுதும் இந்தப் பிரச்னையை எவ்விதம் தீர்ப்பது என்பதே கவலை: தன் காதலர்கள் ஒவ்வொருவரும் நல்லவர்கள். எல்லோரிடமும் குறைகள் இருக்கின்றன: ஆகவே எவ்விதம் தீர்மானிப்பது?—இதுவே அவளை வாட்டியது.

கடைசியில் முடிவுக்கு வருகிறாள்: இந்த முடிவு, நிராகரிக்கப்பட்ட இவரைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் திருப்தி தருகிறது.

இந்தப் படத்தில் ஆரம்பம் முதல் கடைசி வரை நல்ல ரஸமான சம்பாஷணைகளும், வேடிக்கையான சம்பவங்களும், ஹாஸ்யப்பகுதிகளும் நிறைந்திருக்கின்றன. கார்ஸன் கானின் டைரக்ட் செய்த இந்தப் படம் நல்ல பொழுது போக்கு என்பதில் சந்தேகமில்லை.

மேலும் "கிட்டிபாயில்" என்ற படத்தில் திறமையுடன் நடித்ததற்காக அகாடமிக் கோப்பை பரிசு பெற்ற ஜிஞ்ஜர் ரோஜர்ஸ் இந்தப் படத்தில் தமது நடிப்புத் திறமையை மேலும் சோபிக்கச் செய்திருக்கிறார். ஜார்ஜ் மர்பி, ஆலன் மார்ஷல், பர்கஸ் மெரிடித் ஆகியோரும் இப்படத்தின் பெருமையில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

* * * *

"ஓயில்ட் கீஸ் காலிங்"

20-ம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியாரின் "ஓயில்ட் கீஸ் காலிங்" என்ற ஆங்கிலப் படத்தில் இரு பிரபல நடிகர்கள் நடிக்கின்றனர். இதில் ஜோன் பென்னட்டும் ஹென்ரி பாண்டாவும் மிகுந்த பெருமையை சம்பாதித்திருக்கின்றனர்.

படத்தின் கதை வருமாறு: ஜான் மர்டாக் (ஹென்ரிபாண்டா) ஊர்ச்சுற்றுவதில் அதிக ப்ரியம் கொண்டவன்: எங்கேயாவது, திரிய வேண்டும் என்பதுதான் அவனுக்கு ஆசை. தன் நண்பன் ப்ளாக்கி (வாரன் வில்லியம்) யைச் சந்திக்க அவன் கிளம்பிப் போகிறான். ஸிட்டிலில் ஒரு ஸலூனுக்கு அவன் வருகிறான். அங்கு அவன் நண்பனைக்காண வில்லை. நடனமாதான ஸாலி (ஜோன் பென்னெட்) யை அவன் அங்கு சந்திக்கிறான். ஸாலி ப்ளாக்கியின் காதலியாக முன்பிருந்தவள் இது மர்டாக்குக்குத் தெரியாது. ப்ளாக்கியிடம் மனஸ்தாபம் கொண்டு அவனுடன் எப்படியாவது கணக்கு தீர்க்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட கெல்லி (பஸ்டன் மக்லேன்) ஸாலியைப் பின் தொடர்ந்து வருகிறான்.

மர்டாக் ஸாலியை மணந்து கொள்கிறான்: இந்த சமயத்தில் ப்ளாக்கி அங்கு வந்து சேருகிறான். ப்ளாக்கியும், ஸாலியும் அப்போது தான் முதன் முதலாகச் சந்திப்பதுபோல நடிக்

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugare like spellbound any one or more persons (male or female) instantly and surety cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

FREE
ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against -/5/- postage stamps with one album free. Limited albums left Order now lest you be disappointed

LONDON COMMERCIAL CO.
P. B. 165 (S M M.) LAHORE (INDIA)
(E. A. B.)

இன்றனர். மூவரும் சேர்ந்து அலாஸ்காவுக்குப் போகின்றனர். அங்கிருக்கும் ஒரு ஹோட்டல் சூதாட்டத்தில் கெல்லி தோற்றது காரணமாக ப்ளாக்கி வசம் வந்து சேர்ந்தது: இதை நிர்வகிக்கவே மூவரும் செல்கின்றனர். அங்கு போனதும் அந்த ஹோட்டல் உண்மையில் ஒரு சூதாட்ட விடுதி என்று தெரிகிறது. நகரின் ஒதுக்குப்புறமான இடத்தில் ஒரு குடிசையில் மார்டாக்கும் ஸாலியும் தங்கியிருக்கின்றனர் இதன் பின். இங்கு மர்டாக்குக்கு வேலை கிடைக்கிறது. ப்ளாக்கியின் பழைய சிநேகிதி க்ளாரா பெல்லா (மன்ஸன்) ஸாலிக்கு எதோ வேலை தருகிருள்.

கெல்லி இன்னும் விட்டபாடில்லை: மறுபடியும் வருகிருன்: தோற்றுவிட்டதை ஜயிக்க அவன் விரும்புகிருன். இதை முன்னதாக அறிந்த ப்ளாக்கி ஓடிப்போக சித்தமாகிருன். ஸாலியும் தன்னுடன் வர வேண்டும் என்று அவன் கூறிக்கொண்டிருக்கும் போது மர்டாக் அங்கு வந்து சேருகிருன். மர்டாக் ப்ளாக்கியை நன்ருக உதைத்துவிட்டு மனைவியுடன் பேசவும் மறுக்கிருன்.

ஸாலி கர்ப்பவதியாயிருப்பது தெரியவே, மர்டாக் அவளைத் தன்னுடன் இருக்கும்படிச் செய்கிருன். பிரசவ தினத்தன்று இரவு டாக்டரை அழைத்துவர மர்டாக் போகிருன். அவனை கெல்லி பார்த்துச் சுடுகிருன். இதே சமயத்தில் ப்ளாக்கியின் துப்பாக்கியிலிருந்து வெளிக்கிளம்பிய குண்டு கெல்லியைச் சுட்டு வீழ்த்துகிறது. டாக்டரைக் கண்டுபிடிக்க முடியாமல் மர்டாக்கும் ப்ளாக்கியும் ஸாலியின் உதவிக்கு க்ளாரா பெல்லாவை அழைத்துக் கொண்டு போகின்றனர். குழந்தை பிறக்கிறது, ஸாலி மர்டாக்கையே தான் காதலித்ததாக ப்ளாக்கி அவனிடம் தெரிவிக்கிருன் அப்போது.

இதற்கப்புறம் தம்பதிகளுக்கு அந்யோந்யம் ஏற்படுகிறது: மர்டாக்கும் ஸாலியும் மறுபடியும் சந்தோஷமாக வாழ்கின்றனர். ப்ளாக்கி புறப்பட்டுப் போய் விடுகிருன்.

இந்தப் படம் நகர் நியூ க்ளோப்பில் காட்டப்படும்.

* * * *

ஜோன் பென்னட்

ஜோன் பென்னட் வாழ்க்கையில் அதிக ஆர்வமுள்ளவள். இந்த வாழ்க்கையில் பலதரப்பட்ட தொழில்களையும் மேற்கொள்வதில் ஆசை கொண்டவள். அவள் போல் இதர நடிகைகளால் தனது அலுவலைக் கவனிக்க முடியாது ஹாலிவுட்டில் விவாகத்திற்கும் நடிப்புக்கும் ஒத்துவராது என்ற அபிப்பிராயம் அதிகம் இருக்கிறது. ஆனால் இந்த அபிப்பிராயம் ஜோன் விஷயத்தில் வேறு என்றும் அவர்கள் சொல்கின்றனர்.

ஜோன் பென்னட் பிரபல நடிகை: விவாகமானவள்: இரு குழந்தைகளின் தாயார்: அதிதிகளை உபசரிப்பதில் நிகரற்றவள்.

ஸ்டீவர்ட் எட்வர்ட் ஒயிட் எழுதிய "ஒயில்ட் கீஸ்காலிங்" என்ற 20-ம் செஞ்சுரி பாக்ஸ் படத்தில் அவளது நடிப்பு ஆச்சர்யமாயிருக்கிறது: வேறு ஒரு நடிகையாயிருந்தால் இந்த படத்தில் நடிப்பதிலேயே தனது ஆயுட் காலத்தைக் கழிக்க வேண்டி வரும். ஆனால் ஜோன் பென்னட் தினசரி தனக்காகப் போட்டுக்கொண்டிருக்கும் திட்டம் குறிப்புக்குரியது. தினமும், நடித்தாலும் சரி, நடிக்காவிட்டாலும் சரி, தனது அலுவல்களைக் கவனிக்க அவள் செய்யும் ஏற்பாடுப் பிரகாரம், அவள் இதர காரியங்களையும் வெகு சுலபமாகக் கவனிக்க முடிக்கிறது.

"எல்லாம் நாம் நமது அவகாசத்தை எப்படி உபயோகிக்கிறேம் என்பதையே தழுவியிருக்கிறது. நடிக்கப் போகும் போதும், சில ஓய்வு நிமிஷங்களை வீணுக்காமலிருந்தால் எவ்வளவோ செய்து முடிக்கலாம்" என்கிருள் ஜோன் பென்னட்

ஜோன் ஒருநிமிஷத்தையாவது வீணுக்குவதில்லை. இதர நடிகர்கள் தாங்கள் நடிக்காத வேளைகளில் வேடிக்கை பண்ணிக்கொண்டிருக்கும் போது ஜோன் தனது உடுப்பு அறைக்குள் போய் கடிதங்களுக்குப் பதில் எழுதுவது வழக்கம் இல்லாவிட்டால் தனது அடுத்த விருந்துக்கு யார் யாரை அழைக்க வேண்டும் என்ற ஜாபிதாவை அவள் தயாரிப்பாளாம்: அதுவும் இராவிட்டால் மறு தினம் தான் சொல்லவேண்டிய சம்பாஷணைகளைப் பாடம் பண்ணிக் கொண்டிருப்பாளாம்.

மாலை நேரங்களில் ஜோன் தனது கணவருடனும் தனது இரு புத்திரிகளுடனும் காலம் கழிப்பாள். குழந்தைகளை ஒரு "ஆயா"விடம் ஒப்படைக்கும் வழக்கத்தில் ஜோனுக்கு நம்பிக்கை கிடையாது: தன் பெண்களைப்பற்றிய சிரத்தை அவளுக்கு அதிகம்: வளர்ப்பதில் தாய்க்குத் தான் முக்கிய பங்கு: இது தவிர குடும்ப நிர்வாகமும் அவளைச்சேர்ந்ததே,

இதைப்பற்றி ஜோன் பின் கண்டபடி சொன்னுள்: "இவ்வாறு பலதரப்பட்ட காரியங்களில் மனதை விடுவது உத்சாகமளிக்கிறது. நான் செய்யும் ஒவ்வொரு வேலையும் எனக்கு த்ருப்தியைத் தருகிறது."

* * * *

"கிட்டி பாயில்" படத்தில் நடித்த உங்கள் அபிமான நடிகர்கள் திரும்பவருகின்றனர்.

நியூ எல்பின்ஸ்டன்
(போன்: நெ. 3206)

மேமீ 2உ சனிக்கிழமை முதல் 5உ செவ்வாய் வரை

★

சனி, ஞாயிறுகளில் பகல் 3 மணிக்கு மாடினி

★

ஜிஞ்ஜர் ரோஜர்ஸ்
முன்னைவிட திறமையாக ஆர். கே. ஓ. ரேடியோ படத்தில் நடிக்கிருர்.

"TOM DICK & HARRY"
(டாம், டிக் & ஹாரி)

ஜியார்ஜ் மர்பி, ஆலன் மார்ஷல் பர்ஜஸ் மெரிடித் நடிப்பது.

விடா நகைப்பு. ருசிகரமான சம்பாஷணைகள். நிறைந்த அற்புத காமெடி.

காதலும் ஆணியும்

ஒரு கர்தற் கட்டத்தில் ஆணிக்கு இடம் எது?"

20-ம் செஞ்சுரி பாக்ஸ் படமான "ஒயில்ட் கீஸ் காலிங்" தயாராகி வரும்போது இரு காதலர்கள் சந்திக்கும் இடத்தைப் படம் பிடிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தது.

ஹென்ரி பாண்டாவும் ஜோன் பென்னட்டும் ஒரு புல் தரை மீது உட்கார்ந்திருந்தனர்: காற்று ரமணீயமாக அடித்துக் கொண்டிருந்தது.

டைரக்டர் ஜான் ப்ராம் சைகை காட்ட படப்பிடிப்பும் ஆரம்பமாயிற்று.

பாண்டா முழங்காலில் மண்டியிட்டு பேசவாரம்பித்து விட்டார்.

"எப்போதும் விவாகத்தில் ஸ்திரீகளுக்கு இச்சையுண்டு என எண்ணி வந்திருக்கிறேன் நான் இதுவரை.என்னை மணக்க உனக்கு இஷ்டமில்லாவிட்டால்........"என்ருர் ஹென்ரி பாண்டா.

உடனே ஜோன் முகத்தில் சந்தோஷக்குறி தாண்டவமாடியது.

"எனக்கு இஷ்டம் தான். இஷ்டம்தான்" என்ருள் அவள்.

(பின்பக்கம் பார்க்க)

"நான் உன்னைக் காதலிக்கிறேன்"

மேற்கண்ட விதம் கூறுகிருர் ஹென்ரி பாண்டா. (ஒயில்ட் கீஸ் காலிங்'' என்ற படத்தில் ஒரு ரஸமான சந்தர்ப்பம்.)

மாகினே அரணில் வேவு

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் லஞ்சத்தைப் பெற்று தனது நாட்டுக்குத் துரோகம் செய்யத் துணிந்துவிட்டான் அப்பேதைப் பிரெஞ்சுக்காரன்.

கைது செய்யப்பட்டான்

ஜெர்மன்வேவு இலாகாவால் கொடுக்கப்பட்ட லஞ்சத்தில் பெரும்பகுதி குவாஸுக்கும் சிறுபகுதி மார்டிக்னிக்கும் கிடைத்து வந்தன, பிரிட்மனுக்கு யாதொன்றும் இல்லை. அதனுல் கோபமடைந்த அவன் குவாஸை மிரட்டினுன். அதன் பலனுய் குவாஸ் அவனை சிறையில் அடைத்து பாதுகாப்பில் வைக்க முயன்ருன்.

ஆனுல் பிரிட்மேன் சும்மாவிருப்பவனன்று. குவாஸ் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணிய அவன், பிரெஞ்சு ரகசிய போலீஸ் இலாகாவுக்குச் சென்று எல்லா விஷயங்களையும் வெளியிட்டான்.

உடனே குவாஸ் பிரெஞ்சு போலீசாரால் கைது செய்யப்பட்டான். அவனை சிறையில் அடைத்து விசாரணை செய்த அதிகாரிகள் மார்டிக்னியின் குற்றத்துக்கும் தகுந்த ருஜு நாடினர், அவர்களது உத்தரவின் பேரில் குவாஸ் மார்டிக்னிக்கு ஒரு கடிதம் எழுதினுன், அதில் அவன் மாகினே அரணை பற்றிய ஒரு ரகசியத்தை வினவியிருந்தான்.

கடின தண்டனை

அதற்கு மார்டிக்னியின்பதில் வந்தது. அப்பதிலில் அவ்விரகசியம் குறிப்பிடப்பட்டிருந்தது போதாக்குறைக்கு அதில் மார்டிக்னி தனக்குச் சேரவேண்டியலஞ்சத்தைப்பற்றியும் பிரஸ்தாபித்திருந்தான்.

இக்கடிதம் பிரெஞ்சு அதிகாரிகளுக்கு கிடைத்த பின் கேட்கவும் வேண்டுமோ? மார்டிக்னி கைது செய்யப்பட்டான். மாகினே அரணின் ரகசியங்கள் சிலவற்றை விற்க முயன்ற அவனுக்கு 5 வருஷ கடின காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

மாகினே அரணில் வேவு பார்த்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனையோ பேர். அது சம்பந்தமான நடைபெற்ற குற்ற விசாரணைகள் எத்தனையோ? ஆயினும் அதன் ரகசியங்களை ஓரளவு எதிரிகள் உணர்ந்துகொண்டனர் என்றே சொல்லவேண்டும். பிரெஞ்சுஅதிகாரிகள் எவ்வளவு உஷாராயும் எச்சரிக்கையாயும் இருப்பினும் ஹிட்லரின் ஒற்றர்கள் அவருக்குத் தகவல்கள் அனுப்பிக்கொண்டே இருந்தனர். அவ்வரணின் காவலின் பலத்தையும் கட்டின் சிறப்பையும் நன்குணர்ந்த அவர் அதை முன்புறம் நின்றுதாக்கத்துணியவில்லை. பின் பக்கமாய் வந்து அதைக் கவர்ந்து விட்டார்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பியச் செய்திகள்

மிஸ்டர் அமெரி பிரசங்கம்

பர்மிங்ஹாம் கன்ஸர்வேடிவ் சங்கத்தில் ஏப்ரல் மாதம் 24-ந் தேதி மிஸ்டர் அமெரி பின் கண்டபடி பேசினுர்:—

வரும் சில வாரங்கள் உலகின் எதிர்காலத்திற்கு மிக நெருக்கடியானதாயிருக்கும். எதிரி முறியடிக்கப்படுவரா? அல்லது மேலும் பல இன்னல்களை நாம் கடக்கவேண்டுமா என்பது அதற்குள் தெரிந்துவிடும்.

மலேயாவை நாம் இழந்தது மலேயா மக்களின் விச்வாஸக் குறைவாலோ நம் ஆட்சியின் திறமைக் குறைவாலோ, நம் அதிகாரிகளின் காருண்யக் குறைவாலோ அல்ல. உண்மையான காரணமென்னவெனில். தர்மகர்த்தாவென்ற முறையில் பிரிட்டனிலுள்ள நாம் அவர்களுடைய பாதுகாப்பில் போதிய சிரத்தை செலுத்தாததே.

இந்தியாவில் நாம் சாதித்துள்ளதை கண்டு நாம் பெருமை கொள்ளலாம். இந்திய சுய ஆட்சிக்கு. நாம் சாதித்தவை ஒருபடி போன்றதாகும். இந்தியாவின் சுதந்திரம்பற்றி நம் நல்லெண்ணத்தை நிருபிக்கவும், இந்தியத் தலைவர்கள் தற்போதமைக்கப்பட்டுள்ள இந்திய சர்க்காரில்கலந்துகொள்ளுமாறு செய்யவுமே ஸர் கிரிப்ஸ் இந்தியாவுக்குச் சென்ருர்.

இப்படிப்பட்ட தாராளமான திட்டத்தை வேறு எந்த நாட்டினரும் வெளியிட்டிருக்கமாட்டார்கள். அத்திட்டம் நிராகரிக்கப்பட்டதால், இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்தளிக்கும் நம் உறுதி சிறிதும் குறையவில்லை.

இந்தியர் பல போர்க்களங்களில் தீரவேலை புரிந்துள்ளனர். அதே தீரத்துடன் அவசியம் நேர்ந்தால் இந்தியாவையும் அவர்கள் பாதுகாப்பரென்பது நிச்சயமென நான் நம்புகிறேன்.

* * * *

ராஸ்டாக் மீது தாக்குதல்

பிரிட்டிஷ் குண்டுவீச்சு விமானங்கள் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி ராஸ்டாக்என்ற ஜெர்மன் துறைமுகத்தைத் தாக்கின. இந்தத் துறைமுகம் பால்டிக் கடலிலுள்ளது.

ராஸ்டாக்கில் மீன்பிடிக்கும் நிலயங்களும், சர்க்கரை, ரஸாயனப் பொருள் தொழிற்சாலைகளுமுண்டு. ஜெர்மன் குண்டு வீச்சு விமானங்கள் உற்பத்தி சாலையொன்றும், ஸப்மரீன்கள், சிறு கப்பல்கள் முதலியவைகட்டும் நெப்டூன் தொழிற்சாலைகளுமிருக்கின்றன. ராஸ்டாக்கின் ஜனத்தொகை 116,000 பேர். ராஸ்டாக்கிலிருந்து ரஷ்ய யுத்தரங்கத்திற்கு முக்கிய ஜெர்மன் ஸப்ளைகள் அனுப்பப்படுகின்றன,

ஒரு மணி நேரம் உக்ரமாக மிகப்பெரிய குண்டுகள் வீசப்பட்டன. ஜெர்மன் குண்டுவிச்சு விமானத் தொழிற்சாலை ஒரேயடியாக நாசம் செய்யப்பட்டது. புகை 8000 அடி உயரம் கிளம்பிற்று. தாக்கச் சென்றதில் மொத்தம் நான்கு விமானங்கள் நஷ்டம்.

பிரிட்டிஷ் விமானங்கள் ப்ளஷிங் துறைமுகத்தைத் தாக்கின. வட பிரான்ஸும் தாக்கப்பட்டது. 5 எதிரி விமானங்கள் நாசம் செய்யப்பட்டன. 9 பிரிட்டிஷ் விமானங்கள் நஷ்டம்.

* * * *

பொதுவுடமையின் சேவை

மேற்கு ஐரோப்பாவில் பிரிட்டன் இரண்டாம் முனையேற்படுத்த வேண்டுமென பீவர்ப்ரூக் பிரபு நியூயார்க்கில்ஏப்ரல் மாதம் 23-ந் தேதி செய்த ஒரு பிரசங்கத்தில் வற்புறுத்தினுர்.

ரஷ்யாவையும், ஸ்டாலினையும் புகழ்ந்து அவர் பேசியதாவது:—

மிஸ்டர் ஸ்டாலின் தலைமையில் பொதுவுடமை முறை மிகத் திரமான சேனையொன்றை யளித்திருக்கிறது. ஸ்டாலின் தலைமையில் நடக்கும் பொதுவுடமை முறையின் விளைவாக கேட்டறியாத அளவு உயர்வான தேச பக்தி மிளிர்ந்திருக்கிறது. இந்த யுத்தத்தில் மிகச் சிறப்பான தளகர்த்தர்கள் தோன்றியுள்ளனர்.

மிஸ்டர் ஸ்டாலின் போர் தந்திரத்தில் நிபுணர். இறுதியில் எதிரியைத் தோற்கடிப்பார்,

மிஸ்டர் ஸ்டாலின் அட்லாண்டிக் சாஸனத்தை ஒப்புக்கொண்டிருக்கிருர். முன்னேறித் தாக்குவதே தற்காப்புக்குச் சிறந்த வழியாகும். 2,000 மைல் நீளமுள்ள கடற்கரையுள்ள மேற்கு ஐரோப்பாவில் பிரிட்டன் எங்காவது இரண்டாம் முனையேற்படுத்த வேண்டும். 1942-ல் ரஷ்யர் ஜெர்மனியரைத் தோற்கடித்து, நமக்கு அவ்வேலையில்லாமல் செய்ய முடியும். ஆதலால் ரஷ்யருக்கு உதவியளிக்க வேண்டும். ரஷ்யர், ஜெர்மனியரைத் தோற்கடித்தால், அச்சு நாட்டு பலமே குலைந்துவிடும். பிரிட்டிஷ் சேனை சென்ற இரண்டு வருஷங்களாக பல வீரச் செயல்களையும், தியாகங்களையும் செய்திருக்கிறது. மிஸ்டர் சர்ச்சில் தலைமையில் பிரிட்டிஷ் மக்கள் அருந்தியாகம் செய்து வருகின்றனர்.

* * * *

லவாலின் புரளி

"நான் அதிகாரத்திற்குத் திரும்பியிருப்பதில் ஒரு திட்டமான கருத்துண்டு. பிரஞ்சு—ஜெர்மன் சமரசம் ஏற்பட வேண்டுமென்பதே அக்கருத்து, இதை நான் எப்போதும் வற்புறுத்தி வந்திருக்கிறேன். இதன் மூலமே நிலையான சமாதானம் ஏற்படக்கூடும்" என மிஸ்டர் லவால் ஏப்ரல் மாதம் 20-ந் தேதி செய்த ரேடியோ பிரசங்கத்தினிடையே கூறினர்.

"இங்கிலாந்தே நம்மை இந்த யுத்தத்தில் மாட்டிவிட்டது. நமக்கு உதவ வேண்டிய சமயத்தில் அந்நாடு உதவாமல் நம்மைக் திண்டாட்டத்தில் விட்டது மட்டுமில்லை; நமது காலனிகளையும் திருட முயன்றது: இப்போது பிரிட்டிஷ் விமானங்கள் பிரெஞ்சு பூமிக்கு மேலே பறக்கின்றன" என்றும் மிஸ்டர் லவால் தெரிவித்தார்.

* * * *

(முன் பக்கத் தொடர்ச்சி)

"நிச்சயமாய் இஷ்டமா?" என்ருர் மகிழ்ச்சியுடன் பாண்டா.

"ஆமாம், ஆமாம்" என்று ஜோன் கூக்குரலிட்டாள்.

அப்புறம் "ஊ..."என்று கத்தவாரம்பித்து விட்டாள் அவள்.

அவ்வளவுதான்! டைரக்டர் ப்ராம் திகைத்துப் போனுர். காரணம் புரியவில்லை. "என்ன விஷயம்?" என்று வினவினுர் அவர்.

"ஒரு ஆணி குத்தியது" என்ருள் ஜோன், "ஆணிமேல் நான் உட்கார்ந்து விட்டேன். ஆணி குத்தும்போது காதல் எங்குஇருக்கும்? என்ன சிறந்த நடிகையாயிருந்தால்தான் என்ன, அப்போது என்ன செய்யமுடியும்?"

பிறகு அந்த இடத்தில் தேடிப்பார்த்து, ஆணி அப்புறப்படுத்தப் பட்டது. இதற்கப்புறம் படப்பிடிப்பு மேலும் நடந்தது.

படைக்கு 12 வயதுப் பெண்கள்

12 வயதுப் பெண்களுக்குக் கட்டாய ராணுவப் பயிற்சியளிக்க அச்சு நாடுகள் திட்டம் தயாரித்திருக்கின்றனவென்றும் 15-வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு 12-வயதுப் பெண்களைவிட அதிகப்பயிற்சி அளிக்கப்படுமென்றும் தெரிகிறது. இவ்விவரங்களை ஹங்கேரிய ஒலிபரப்பு ஸ்தாபனம் வெளியிட்டிருப்பதாக யு. எஸ். புள்ளிவிவர இலாகா கூறுகிறது.

* * *

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு

அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

(வியாதி விபரம் தபால் வில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)
சோல் ஏஜண்ட்ஸ்:—யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

ரானடேஜன்ம தின சதாப்தி விழா மயிலை ரானடே ஹாலில் சென்ற மாதம் 18-ம் தேதி ஸர் பி எஸ். சிவஸ்வாமி அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. (பி. பி. பி.)

டம் பல ரகமான போர்வைகள் இருக்கின்றன. நீங்கள் அவற்றைப் பார்த்து ஆச்சரிய மடைவீர்கள்" என்ருள்.

அவளது இருப்பிடத்தை அறிய வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்த ஆங்கில வேவுகாரியின் மகிழ்ச்சிக்கு ஒரு அளவேயில்லை. இருவரும் அங்கு புறப்பட்டனர்.

பல தெருக்களை கடந்து அவர்கள் ஒரு தனிமையான சந்தையடைந்தனர். அங்குள்ள ஒரு பழைய வீட்டுக்குள் பிரவேசித்தாள் டிபோர்ஸ். "இந்த அழகிக்கு இந்த தரித்திரம் பிடித்த வீடு தானு வாசஸ்தலம்" என்று தனக்குள்ளே எண்ணி வியப்புற்ருள் ஜூலியா.

உள்ளே அறை மிகவும் நாகரீகமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கேயுள்ள ஒரு சோபாவில் ஆங்கில உளவுகாரியை உட்கார வைத்து உபசரித்தாள் டிபோர்ஸ். தன்னுல் சேகரிக்கப்பட்ட பல ரக வர்ணப் போர்வைகளை அவள் காட்டினுள். அவற்றை நோக்கி அவள் கொண்டிருக்கையில் ஒருவேலைக்காரி ஒரு தட்டில் சிற்றுண்டியும் ஒரு பாத்திரத்தில் தேதத் தண்ணீரும் கொண்டு வந்தாள். அவற்றை ஜூலியா உட்கொண்டாள்.

திடீரென்று அவளுக்கு சோர்வும் மயக்கமும் உண்டாயின. அவளது கண்கள் சுழன்றன. எனினும் அவை நன்ருய் மூடிக் கொள்ள வில்லை. ஏனெனில் அவற்றின் நாட்டம் மேஜைக்கு அப்பாலுள்ள சுவரில் உள்ள ஒரு படத்தின்மீது சென்றன. அப்படம் காப்டன் பீடரின் படம் என்பதில் சந்தேகமேயில்லை.

அப்படத்தைப்பார்த்தபடி அறிவிழந்து உணர்வற்று ஜூலியா எத்தனை நேரம் உட்கார்ந்திருந்தாளோ தெரியாது. அவள் மீண்டும் தனது நிதானத்தையும் சுய புத்தியையும் அடைந்ததும் தான் ஒரு பாழும் வீட்டில் இருந்ததை யுணர்ந்தாள். அங்கே யாரும் இல்லை.

அவள் எழுந்து வீட்டின் வெளியே வந்தாள். அது ஒரு நிர்மாநுஷ்யமான சந்து. அங்கு அவள் அதற்கு முன் வந்ததில்லை. பரிச்சயமில்லாத அந்த இடத்தை விட்டு அப்பால் சென்ற அவள் சற்று தூரத்திலிருந்த வாடகை வண்டியில் ஏறி தன் வீட்டுக்கு வந்தாள். அவளை அது வரையில் காணுமல் ஏங்கியிருந்த அவளது வேலைக்காரி, "நேற்று சாயந்திரத்திலிருந்து நீங்கள் வர வில்லையே என்று நான் தவித்த தவிப்பை எப்படிச் சொல்லுவேன்?" என்று அழுதாள்.

தான் 24 மணி நேரம் வரையில் மயக்கமாய் இருந்ததை ஜூலியா அதன் காரணம் தனக்கு அந்த ஸ்பானிஷ் மாதினுல் கொடுக்கப்பட்ட பானத்தில் கலக்கப்பட்ட மயக்க மருந்தே என்பதை உணர்ந்தாள். தன்னை வஞ்சித்த அந்த ஸ்திரியை மீண்டும காண அவள் பரபரப்பு கொண்டாள். ஆனுல் டிபோர்ஸ் அவளுக்கு அகப்படக் கூடியவளா? பல தினங்கள் அவள் அந்த ஹோட்டலுக்குச் சென்று பார்த்தாள். ஸ்பானிஷ் மடந்தை அங்கு தலை காட்டவில்லை.

இந்த எண்ணத்தால் தூண்டப்பட்ட அவள் லண்டனிலுள்ள ஹோட்டல்களுக்குச் சென்று அவற்றை கவனிக்கலானுள். அவளது முயற்சி பயனை அளித்தது என்று சொல்ல வேண்டும். பல நாட்களுக்குப் பின் அவள் ஒரு ஹோட்டலில் சிற்றுண்டியருந்திக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீயைக் கண்டு ஸ்தம்பித்து விட்டாள்.

ஆம். அவள் டிபோர்ஸ் தான். அதே முகம். அதே உருவம் அதேவிதமான உடை. அதே தனிமையான நிலைமை.

தன் நிதானத்தை மீட்டுக் கொண்ட ஜூலியா அவளிடம் சென்று, "அம்மணி! சௌக்கியமா?" என்ருள்.

அந்த மாதின் முகத்தில் எவ்விதமான மாறுதலும் இல்லை. சற்று திகைப்புடன் அவள், "நீங்கள் யார்?" என்ருள்.

"உங்கள் பெயர் டிபோர்ஸ் அல்லவா? நாம் ஸ்பெயினில் சந்திக்கவில்லையா? மாட்ரிட்டிலுள்ள ரிட்ஸ் ஹோட்டலில் நாம் சிற்றுண்டி அருந்தியது உங்களுக்கு ஞாபகமில்லையா?" என்று வினவினுள் ஜூலியா.

"நீங்கள் ஏதோ தவறுதலாய் நினைக்கிறீர்கள், நான் ஸ்பெயின் தேசத்துக்குப் போனதேயில்லை. உங்களை நான் முன்பின் கண்டதுமில்லையே!" என்று நிதானமான குரலில் உரைத்தாள் அந்த மாது.

அதற்குமேல் என்ன செய்வது என்பதை யறியாமல் ஜூலியா அப்பால் சென்ருள். ஹோட்டலிலுள்ள டெலிபோன் ஆபிஸுக்குச் சென்று தனது மேலதிகாரிக்கு தான் டிபோர்ஸை கண்டவிவரத்தை உரைத்துவிட்டு மீண்டும் அந்த மங்கையிருந்த இடத்துக்கு வந்தாள்.

ஆனுல் பக்ஷி பறந்துவிட்டது. டிபோர்ஸ் அங்கே காணப்படவில்லை. அவ்விடத்தைவிட்டு அவள் ஓடிவிட்டாள் என்பதில் சந்தேகமில்லை.

தன்னுடைய முட்டாள் தனத்தையும் அஜாக்கிரதையையும் இகழ்ந்துகொண்டு நின்ற உளவுகாரியிடம் வேலைக்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதைப்பிரித்து பார்த்தாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"நீ இனி என்னை பார்க்க மாட்டாய். ஆனுல் நீ தேடும் மனிதன்—என்ற விலாஸத்தில் இருக்கிருன்; டிபோர்ஸ்,"

வேவு இலாகா ஆட்கள் சிலருடன் ஜூலியா கடிதத்தில் குறிப்பிட்ட இடத்தை அடைந்தாள். அது ஒரு சிறு பங்களா அதினுள் ஒரு படுக்கையில் பீடர் கிடந்தான். என்ன பரிதாபம்! அவன் முகத்தில் காணப்பட்ட வெளுப்பும் அவன் தேகத்தில் காணப்பட்ட மெலிவும் இரத்தமின்மையும் அவர்களுக்கு கலவரத்தையளித்தன. அரை மயக்கத்துடன் அவன் அவர்களை நோக்கி விழித்தான்.

ஆம். அதில் சந்தேகமில்லை. எதிரி வேவுகாரியான டிபோர்ஸிடம் சிக்குண்ட அவன் சிறைபடுத்தப் பட்டதுடன் பலவிதமான கொடுமைகளுக்கு உள்ளாகும்படி நேரிட்டது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகள் அவற்றை பாஷாணங்கள் என்றே சொல்ல வேண்டும். அவனது உடல் நலத்தைக் கெடுத்து அவனது அறிவை மழுங்கும்படி செய்து விட்டன.

தெய்வாதீனமாய் மீட்கப்பட்ட காப்டன் பீடர் ஒரு ஆரோக்கிய ஸ்தலத்துக்குக் கொண்டு போகப்பட்டு அங்குள்ள ஆஸ்பத்திரியில் சிகித்ஸை பெற்ருன். அவனுக்கு உடல் வலிமையும் மன உறுதியும் புத்தி வன்மையும் வர பல மாதங்கள் பிடித்தன. அவன் தனது பயங்கர அனுபவத்தால் ஏற்பட்டபடிப் பிணியை மறக்கவில்லை.

4

இங்கிலாந்துக்குத் திரும்பினுள் ஜூலியா. தான் எடுத்துக் கொண்ட காரியம் சித்தி பெறவில்லை என்று அவள் மேலதிகாரியிடம் தெரிவித்தாள். எனினும் அவள் தனது நம்பிக்கையை இழக்கவில்லை. அது என்னவெனில் தன்னிடமிருந்து தப்பிச் சென்ற அந்த ஸ்பானிய அழகியை எப்படியும் ஒரு நாள் சந்திக்கக் கூடும் என்ற நிச்சயம்.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்
Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,
11, தெற்கு மாடவீதி, :: திருச்சி பிராஞ்சு:
மயிலாப்பூர். :: 81, ஆண்டார் தெரு, தெப்பக்குளம்.
போன் 86257.

டாக்டர் அம்பேத்கார்

★

தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் தலைவரான டாக்டர் பி. ஆர். அம்பேத்காரின் 50-ம் ஜன்ம தினத்தைக் கொண்டாட பம்பாய் சௌபாத்தியில் மஹா கனம் டாக்டர் எம். ஆர். ஜயகர் தலைமையில் ஒரு கொண்டாட்டம் நடந்தது.

★





பம்பாயில் புதிய மேயர்

★

பம்பாயில் புதிய மேயரான ஜனுப் யூஸப் மேஹராலிக்கு இந்திய சங்கீதப் பள்ளிக்கூடத்தில் நடத்திய உபசாரத்தில் ஸ்ரீ பி. ஜி. கெர் தலைமை வகித்தார்.

★

பரோடா ராஜகுமாரர்

★

பரோடா கெயிக்வாரின் நெருங்கிய உறவினரான மஹாராஜ குமார் உதய சிங் ராவுக்கும் தக்காண ஜாகிர்தார் மேஜர் ஸர்தார் பீமராவ் உதங்கர் புத்ரி ஸ்ரீமந்த குமாரி சுசீலா தேவிக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது.

★